"தேசிய"

1 ஜூன் 96 ரூ. 3.50

www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

## ரஜினி - ஸ்டாலின் வீரிய ஒட்டு ரகத்திடம் சிக்கியது தமிழ்நாடு




படிப்பகம்

www.padippakam.com

# தேர்தலைப் புறக்கணிக்கும் தாழ்த்தப்பட்டோர் மீது மேல்சாதி தாக்குதல்

விழுப்புரத்திலிருந்து சுமார் 20 கி.மீ. தொலைவிலுள்ள பொய்கை அரசூர் எனும் கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட கூலி விவசாயிகள் மீது அதே ஊரைச் சேர்ந்த இராமலிங்க நாயுடு எனும் சாதி வெறி பிடித்த பண்ணையார் கொலை வெறித் தாக்குதல் நடத்தியுள்ளான்.

18-4-96 அன்று காலை நாயுடுவின் எடுபிடிகளான 150 பேர் கொண்ட கும்பல் கையில் கத்தி, கடப்பாறை, அரிவாள் போன்ற ஆயுதங்களுடன் தாழ்த்தப்பட்டவர் குடியிருப்புக்குள் புகுந்தது. பெண்கள், முதியவர்கள், சிறுவர்கள் என்று கண்ணில்பட்டவர்களையெல்லாம் தாக்கியது. "நாயுடுவின் செருப்புக்குத் தகாதவனுங்க, நாயுடுவை எதிர்க்கிறீங்களாடா பற நாய்களா" என்று கூச்சலிட்டுக் கொண்டே, இளைஞர்களைச் சுற்றி வளைத்து ரத்தம் சொட்டச் சொட்டத் தாக்கியது.

வீடு புகுந்து எல்லாப் பொருட்களையும் அடித்து நொறுக்கியது. பணம், நகைகள், தானியங்களைக் கொள்ளையடித்தது. ஜோதி, தேவராஜ் என்ற இரு வி.வி.மு. செயல் வீரர்கள் காலை 10 மணிக்குத் தாக்கப்பட்டு, எலும்பு முறிந்து ரத்த வெள்ளத்தில் கிடந்த போதும் மாலை 4 மணிக்குப் பின்னரே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

தப்பி ஓடி வந்த முருகன் என்பவர் திருவெண்ணெய் நல்லூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அதன் மீது போலீசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால் நாயுடு கொடுத்த பொய்ப் புகாரை வாங்கிக் கொண்டு, ஊருக்குள் வந்த போலீசிடம் "எங்கள் வீட்டைக் கொள்ளையடித்துப் பண்ட பாத்திரங்களை நாசம் செய்து விட்டனர்" என்று பெண்கள் அழுது கொண்டே முறையிட்டனர்.

"பேரிச்சம்பழ வியாபாரியை அனுப்புகிறேன், போட்டு வாங்கித் தின்னுங்கள்" என்று திமிராகப் பேசியுள்ளன சாதி வெறி பிடித்த போலீசு நாய்கள்.

சுமார் 25 குடும்பங்களை ஊரை விட்டே துரத்தி விட்டான் சாதி வெறி பிடித்த பண்ணையார் நாயுடு. மீண்டும் அவர்கள் ஊருக்குள் நுழையக் கூடாது என ஆயுதம் தாங்கிய அவனது குண்டர்படை ஊர் எல்லையில் காவல் நிற்கிறது.

நாயுடு இப்படி வெறியாட்டம் போடுவதற்குக் காரணம் ஒன்றே ஒன்றுதான். ஆண்டாண்டுகாலமாய் அடிமைப்பட்டுக் கிடந்த தாழ்த்தப்பட்ட மக்கள், அதை மறுத்து மனிதர்களாய்ச் சுயமரியாதையுடன் நிமிர்ந்து நின்றதுதான்.

கண் முன்னே தனது அதிகாரம் நொறுங்கி விழுவதை இராமலிங்க நாயுடுவாலும், சில சாதி வெறியர்களாலும் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எனவே சாதிக் கலவரத்தைத் தூண்டி, தனது ஆதிக்கத்தை நிலை நாட்டிக் கொள்ள நாயுடு கும்பல் சதித் திட்டம் தீட்டியபடியே இருந்தது.

தேர்தல் நேரத்தில் தனது ரவுடித்தனங்களை அரங்கேற்றி விட்டு, அதை மூடிமறைக்க, ஓட்டுக் கேட்க வந்த வேட்பாளர்களைச் செருப்பு - துடைப்பத்தால் அடித்தார்கள் எனப் பொய்ப் பிரச்சாரம் செய்கிறான் நாயுடு.

இவற்றை முறியடிக்கும் வகையில் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் தெரு முனைப் பிரச்சாரம், சுவரொட்டி இயக்கங்களை வி.வி.மு. அமைப்பினர் மேற் கொண்டு வருகின்றனர்.

# "ஓட்டுப் போடாதே புரட்சி செய்!"
## தமிழகம் தழுவிய தேர்தல் புறக்கணிப்பு இயக்கம்

பதினோறாவது பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் - தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல்களைப் புறக்னிக்கக் கோரியும், நக்சல்பாரிகள் தலைமையில் புதிய சனநாயகப் புரட்சிக்கு அணி திரளக் கோரியும் மக்கள் கலை இலக்கியக் கழகம் (ம.க.இ.க.), விவசாயிகள் விடுதலை முன்னணி (வி.வி.மு.), புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி (பு.மா.இ.மு.) ஆகிய மூன்று அமைப்புகளும் ஒருங்கிணைந்து தமிழகம் முழுவதும் தேர்தல் புறக்கனிப்பு இயக்கம் எடுத்தன.

• ம.க.இ.க. - பு.மா.இ.மு. சார்பாக சென்னையில் சேத்துப்பட்டு, ஜாபர் கான் பேட்டை, சைதாப்பேட்டை ஆகிய மூன்று இடங்களில் தேர்தல் புறக்கணிப்பு பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. ம.க.இ.க. தோழர்கள் காளியப்பனும் தமிழ்மணியும் சிறப்புரையாற்றினர். சைதாப்பேட்டை பகுதியில் ம.க.இ.க. மையக் கலைக்குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

மேலும், சென்னையில் இவ்வமைப்பினர் தலையில் தேர்தல் புறக்கணிப்பு முழக்கங்கள் எழுதப்பட்ட அட்டைப் பெட்டிகளைக் கவிழ்த்துக் கொண்டு, மக்கள் நெருக்கமாக உள்ள பகுதிகளில் முழக்கமிட்டு மக்களிடையே துண்டுப் பிரசுரங்களை வினியாகித்துப் பிரச்சாரம் செய்தனர்.

இதே போல, மே தினத்தன்றும் முழக்கங்கள் எழுதப்பட்ட பெரிய அட்டைப்பெட்டிகளைத் தலையில் கவிழ்த்

தொடர்ச்சி 17-ம் பக்கம்

சென்னையில் ம.க.இ.க. - பு.மா.இ.மு.வினரின் நூதன தேர்தல் புறக்கணிப்பு தெருமுனைப் பிரச்சாரம்






படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 11

**இதழ்: 11-13**

16 ஏப். '96 - 1 ஜூன் '96

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.50
ஆண்டு சந்தா: ரூ. 84.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ



படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்
இரா. சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
25, அருணாசலம் தெரு,
ஜோதிராமலிங்க நகர்,
ஜாபர்கான் பேட்டை,
சென்னை - 600 083.


## நாடாளுமன்ற தொங்குநிலை: தீராத அரசியல் நெருக்கடி

நாடாளுமன்ற, சட்டமன்ற முதலாளித்துவ ஜனநாயகத்தின் கீழுள்ள தேர்தல் முறைகளின் மூலம் ஒரு அரசியல் புரட்சியைக் கொண்டு வந்துவிட முடியாதுதான். ''இப்போது நடந்து முடிந்த தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் ஒரு அமைதிப் புரட்சியைச் செய்து விட்டார்கள்'' என்ற கருணாநிதியின் கருத்தை நாம் ஏற்க முடியாது. ஆனால் கொடுக்கப்பட்ட வரம்புகளுக்குட்பட்ட ஒரு வாய்ப்பைப் பயன்படுத்தி, குறிப்பிட்ட ஒரு பிரிவு கட்சிகள் - நபர்களிடம் இருந்து ஆட்சி அதிகாரத்தைப் பறித்து, வேறொரு பிரிவு கட்சிகள் - நபர்களிடம் ஒப்படைக்க முடியும். இத்தகைய மாற்றத்தை வைத்து நாட்டு மக்களின் கோபத்தையும் விருப்பத்தையும் சிந்தனைப் போக்கையும் விழிப்புணர்வையும் அறிந்து கொள்ள முடியும். நடந்து முடிந்த பதினோராவது பொதுத்தேர்தல்களிலும் இதைத் தெளிவாகக் காண முடிகிறது.

முதலாளித்துவ நாடாளுமன்ற, சட்டமன்ற ஜனநாயகத்தின் சாபக்கேடு ஒன்றுண்டு. மக்கள் தமது முழு பலத்தையும் காட்டி, தமது எதிரியாகக் கருதும் அக்கிரம ஆட்சியாளர்களுக்கு மரண அடி கொடுத்து வீழ்த்த முடியும். ஆனால் இதன் மூலம் மக்கள் இறுதி வெற்றி அடைந்துவிட முடியும் என்று ஒரு போதும் கருதக்கூடாது. வெகு சீக்கிரத்திலேயே தமது எதிரிகளாக மாறிவிடக் கூடிய சக்திகளிடம் வெற்றிக் கனியைப் பறிகொடுத்து விடுவதாகவே வரலாற்று முடிவாக இருக்கிறது. உலகிலேயே முதன் முறையாக முதலாளித்துவ ஜனநாயகம் முழுமையாக வெற்றிபெற்ற 1851 பிரெஞ்சுப் புரட்சியைத் தொடர்ந்து வந்த வரலாறே இப்படிப் பட்டதுதான். ஜனநாயகப் புரட்சி என்று சொல்லுமளவு இப்போது ஏதும் நடந்துவிடவில்லை. என்றாலும் இந்திய நாடாளுமன்றத்துக்கும், ஆறு சட்டப் பேரவைகளுக்கும் நடந்து முடிந்த பொதுத் தேர்தல்களின் முடிவுகளும் இப்படிப்பட்டதாகவே அமைந்துள்ளன.

மத்தியில் ஆண்டு வந்த பார்ப்பன - பாசிச சகுனி நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரசுக்கு நாட்டு மக்கள் படுதோல்வியைத் தந்திருக்கிறார்கள். அதனுடன் பல சமயம் கள்ளக் கூட்டும் சில சமயம் பகிரங்கக் கூட்டும் சேர்ந்து வந்த ஜெயா - சசி கும்பலுக்கும் தமிழ்நாட்டு மக்கள் மரண அடி கொடுத்திருக்கிறார்கள்.

நாடு தழுவிய ஒரு மாற்றுக் கட்சி இல்லாத நிலை காரணமாக அரசியல் அரங்கில் இருந்து முற்றாகத் துடைத்தெறியப்படாமல் நரசிம்மராவ் காங்கிரசு தப்பித்துக் கொண்டது. நாடாளுமன்றத்தில் இரண்டாவது பெரிய கட்சி என்ற தகுதியில் நீடிக்கிறது. அதேசமயம் ஆட்சி அதிகாரத்தை நெருங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது. அக்கட்சி ஆங்காங்கே பெற்றுள்ள வெற்றிகளும் கூட தனிப்பட்ட நபர் செல்வாக்கும் சில மாநிலங்களில் வலுவான மாற்றுக் கட்சிகள் இல்லாததும் காரணமாக அமைந்தவை தாம்.

மொத்தம் ஆறு சட்டப் பேரவைகளுக்கும் தேர்தல்கள் நடந்தன. அவற்றில் கேரளா, அசாம், அரியானா, புதுவை ஆகிய நான்கில் நரசிம்மராவ் காங்கிரசு ஆட்சி அதிகாரத்தை இழந்தது. தமிழ்நாட்டில் அது கூட்டுச் சேர்ந்த ஜெயா - சசி கும்பலோடு சேர்ந்து, இருந்த இடம் தெரியாமல் அழிந்து போனது. இங்கே இரண்டாவது பெரிய கட்சி, அதிகாரபூர்வ எதிர்க்கட்சி என்ற நிலையில் இருந்து ஒரு இடம் கூடப் பெற முடியாமற் போனது. ஒரு ஆறுதலுக்காக மேற்கு வங்கத்தில் தனது நிலையை மேம்படுத்திக் கொண்டாலும் அங்கு (ஆளும் ''இடதுசாரி'' களின் மீது மக்கள் வெறுப்புற்றிருந்தபோதும் நரசிம்ம ராவ் காங்கிரசு) ஆட்சியைப் பிடிப்பது என்ற பகற்கனவு பொய்த்துப் போனது

தமிழ்நாட்டில் தி.மு.க. - மூப்பனார் காங்கிரசு என்கிற வலுவான மாற்றணியும், நடிகர் ரஜினி ரசிகர்களின் ஆதரவும் இவற்றைவிட முக்கியமாக ஜெயா - சசி கும்பலுக்கு எதிராகத் தமிழக மக்களின் எல்லையில்லா வெறுப்பும் ஆத்திரமும் நிலவியதால் அக்கும்பல் அரசியலில் இருந்தே முற்றாகத் துடைத்தெறியப்பட்டது. ஆட்சியில் இருக்கும் கட்சிகளைத் தோற்கடிப்பது என்ற பொதுப் போக்குக்கு விதிவிலக்காக அமைந்தது, மேற்கு வங்கம். அங்கே நரசிம்மராவ் காங்கிரசு மட்டுமே மாற்றுக் கட்சியாக உள்ளதாலும் அதுவும் பிளவுபட்ட பல குழுக்களின் தீரா சண்டைகள் நிரம்பியதாகவும், பழைய அவசர நிலைக் கால கொடுமைகளை நினைவுப்படுத்தும் வகையில் பாசிச சித்தார்த்த சங்கரே போன்றவர்களை முன் நிறுத்தியதாலும் தொடர்ந்து ''இடது சாரி'' கூட்டணியே ஆட்சியைப் பிடித்தது. ஆனால் அதற்கும் சரிவு ஏற்பட்டுள்ளது. கடந்த தேர்தலைக் காட்டிலும் பலம் குன்றிப் போனது.

மத்தியிலும் மாநிலங்களிலும் ஆண்டவர்களுக்கு எதிராக இத்தகைய தேர்தல் முடிவுகள் எதிர்பாராதவையும் அல்ல; அதற்கான காரணங்கள் புரிந்து கொள்ள முடியாதவையும் அல்ல.

வி.பி.சிங் மற்றும் சந்திரசேகர் தலைமையிலான சிறுபான்மை அரசுகள் கவிழ்ந்து, நிலையற்ற - குழப்பமான அரசியல் சூழ்நிலையும், ராஜீவ் காந்தி கொலையால் உருவாக்கப்பட்ட அனுதாப அலையும் காரணமாக மத்தியில் நரசிம்மராவும் மாநிலத்தில் ஜெயலலிதாவும் ஆட்சிக்கு வந்தனர். மிக விரைவிலேயே அந்த இருவரையும் சுற்றி நாட்டுக்கும் சமூகத்துக்கும் விரோதமான - சட்டத்துக்குப் புறம்பான அதிகார மையமாக நெருங்கிய கிரிமினல் கும்பல்களின் ஆதிக்கம் நிறுவப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com

அவை நாட்டின், பொதுமக்களின் சொத்துக்களை வரைமுறையின்றி சூறையாடின. இலஞ்ச - ஊழல் அதிகார முறை கேடுகள் மூலம் பல ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்குக் கொள்ளையடித்து உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சொத்துக்களைக் குவித்தன. அதிகார வெறி தலைக்கேற பல கிரிமினல் குற்றங்கள் புரிந்தன. வறுமை, வேலையின்மை, விலையேற்றம், வேலையிழப்பு, அடிப்படை வசதியின்மை ஆகியவற்றால் மக்கள் பரிதவிக்கையில் ஆட்சியில் இருந்த கிரிமினல் கும்பல்கள் பகிரங்கமாகவே ஆடம்பர - உல்லாச ஊதாரித்தனத்தில் மிதந்தன. இவற்றைக் கண்ணெதிரே கண்ட நம்மக்கள் வெறுப்பும் ஆத்திரமும் அடைவது இயல்பானதுதான்.

இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள் மூலம் ஏராளமான சொத்துக்களை வாங்கிக் குவித்தது; ஆடம்பரம் - ஆபாசம் - உல்லாசம் - ஊதாரித்தனமான ஆட்சி நடத்தியது; சட்டமன்றத்தையும் கட்சியையும், அரசு அமைப்பையும் சுயவிளம்பரம் - அடிமைத்தனமான - வழிபாட்டு எந்திரமாக மாற்றியது; போலீசு - அதிகாரிகள் அமைப்பை சட்டத்துக்குப் புறம்பான ஒரு அதிகார மையத்தின் கைப்பாவையாகவும் அதன் கிரிமினல் குற்றங்களை நிறைவேற்றும், பாதுகாக்கும் அமைப்பாகவும் இயக்கியது; தனது அரசியல் எதிரிகளுக்கு எதிராக கொலை வெறி தாக்குதல் நடத்தும் கிரிமினல் குற்றக் கும்பல்களை ஊட்டி வளர்த்தது; தனக்கு உடந்தையாகச் செயல்படாத பத்திரிக்கைகள் முதல் நீதித்துறை வரை எந்த அமைப்பானாலும் அடக்கி ஒடுக்கியது - அல்லது விலைக்கு வாங்கிப் பணிய வைத்தது.

— இந்தக் காரணங்களை முன் வைத்துத்தான் ஜெயா - சசி கும்பல் ஆட்சியைத் தூக்கியெறிய வேண்டும் என்று அதற்கு எதிராகப் போட்டியிட்ட எல்லாக் கட்சிகளும் கூட்டணிகளும் அறைகூவல் விட்டன.

இந்தக் குற்றச்சாட்டுகள் உண்மையானவை; சரியானவைதாம் என்றாலும் இப்போது தமிழ்நாட்டில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்துள்ள தி.மு.க. - மூப்பனார் காங்கிரசு கூட்டணி இதில் இரட்டை வேடம் போட்டு நாடகமாடி வருகிறது. ஜெயா - சசி கும்பல் மட்டும்தான் மேற்படி குற்றங்கள் புரிந்ததாகவும், நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரசு இப்படிப்பட்ட குற்றங்கள் எதுவும் செய்யவில்லை என்பதாகவும், ஜெயா-சசி கும்பலுடன் தேர்தல் கூட்டு வைத்துக் கொண்டது மட்டும்தான் தவறு என்பதாகவும் இதன் மூலம் தமிழினத்தின் மானம்பறி போனதாகவும், தமிழ் மாநில காங்கிரசு என்ற தனிக்கட்சி வைத்து தி.மு.க.வுடன் கூட்டுச் சேர்ந்ததன் மூலம் மூப்பனார் தன்மானம், தமிழின மானம் காத்ததாகவும் இந்தக் கூட்டணி பித்தலாட்டம் செய்கிறது. இதை ஜெயா ஆதரவு பார்ப்பன கும்பல் தவிர ஏனைய பார்ப்பன அறிவு ஜீவிகளும் பத்திரிகைகளும் புளுகுகின்றனர்.

நரசிம்மராவ், தனது வாரிசுகள் - உறவினர்கள், சந்திராசாமி - லலித்சூரி - சுப்பிரமணிய சாமி முதல் சர்வதேச கிரிமினல் குற்றக் கும்பல்கள் தலைவர்கள் அடங்கிய சட்டத்துக்குப் புறம்பான அதிகார மையத்தை நிறுவிக் கொண்டிருந்தார். சர்க்கரை இறக்குமதி ஊழல், இரயில் என்ஜின் இறக்குமதி ஊழல், கடன் ஈட்டுப் பத்திர - பங்கு பத்திர மோசடி, பொதுத்துறை உபரி முதலீடு மற்றும் பங்கு விற்பனை மோசடி, தொலைத் தொடர்புத் துறை ஊழல், வீட்டுவசதி ஒதுக்கீடு ஊழல் என்று பலபல ஊழல்கள் புரிந்து பல ஆயிரம் கோடி கொள்ளையடித்தது.

இந்துமதவெறி பாசிச ஆர்.எஸ்.எஸ். - பாரதீய ஜனதாவுடன் கள்ளக் கூட்டுச் சேர்ந்து கொண்டு அயோத்தியில் பாபரி மசூதியை இடிக்கவும், அதைத் தொடர்ந்து நாடு முழுவதும் மதவெறிப் படுகொலைகள் புரியவும் உடந்தையாக செயல்பட்டது. தேசிய ஒருமைப்பாடு என்கிற பெயரில் இராணுவத்தை ஏவி காஷ்மீர், பஞ்சாப், அசாம் போராட்டங்களுக்கு எதிராக அரசு பயங்கரவாத ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டது. தனது சிறுபான்மை அரசைக் காத்துக் கொள்ளவும், பெரும்பான்மையாக்கிக் கொள்ளவும் பிற கட்சிகளைப் பிளந்து, எம்.பிக்களை விலைக்கு வாங்கியது. தானே ''ஹவாலா'' மோசடி ஊழலில் ஈடுபட்டதோடு, எதிர்த்தரப்பினரை முடக்கி வைக்க அதையே பயன்படுத்தியது. அதற்காகவும், தனது கிரிமினல் குற்றங்களையே மூடி மறைக்கவும், தனது கட்சியின் அரசியல் ஆதாயத்திற்கும் சி.பி.ஐ. முதலிய உளவுத்துறைகளையும், அமலாக்கப்பிரிவு, வருமான வரிப் பிரிவு ஆகியவற்றையும் `தனது கைப்பாவையாக்கிக் கொண்டு கேடாகப் பயன்படுத்தியது.

எல்லாவற்றுக்கும் மேலாக, ஏகாதிபத்திய மேல்நிலை வல்லரசுகளுக்கும், அவற்றின் உலக வங்கி மற்றும் ஐ.எம்.எஃப் ஆகிய நிதி நிறுவனங்களுக்கும், உலக வர்த்தக நிறுவனம் (டபிள்யூ.டி.ஓ) மற்றும் பன்னாட்டு, தேசங் கடந்த தொழில் கழகங்களுக்கும் நாட்டை மறு அடகுவைத்து, மறுகாலனியாக்குவதற்குக் காரணமாக இருந்தது, நரசிம்மராவ் கும்பல். இதனால் நாட்டின் மொத்த பொருளாதாரமும் ஏகாதிபத்தியத்திடம் சிக்கி மக்கள் தாங்க முடியாத சுமை ஏற்றப்பட்டது.

ஜெயா - சசி கும்பலுடன் கூட்டுச் சேர்ந்தது மட்டுமே நரசிம்மராவ் கும்பலின் தோல்விக்குக் காரணம் என்று மூப்பனார் - சிதம்பரம் - சோ - ரஜினி அடங்கிய தமிழ் மாநில காங்கிரசு தலைமையிலான கும்பல் பசப்புகிறது. இவ்வளவு காலமும் தாமே நரசிம்மராவ் கும்பலின் குற்றங்களுக்குத் துணைபோயும் பங்கேற்றும் வந்துள்ளதை மூடி மறைக்கவே இந்த நாடகமாடுகிறது. ஜெயா-சசி கும்பலுடன் கூட்டுச் சேர்ந்ததுதான் நரசிம்மராவ் காங்கிரசின் தோல்விக்குக் காரணம் என்றால் மற்ற பிற மாநிலங்களில் அது மண்ணைக் கவ்வியதற்கு என்ன காரணம்? இந்த உண்மைகளைக் காணும் எவரும், ஜெயா - சசி கும்பலைப் போலவே, அதைவிடப் பன்மடங்கு குற்றங்கள் புரிந்துள்ளதால்தான் மக்களின் வெறுப்புக்கும் நிராகரிப்புக்கும் நரசிம்மராவ் கும்பல் பலியாகியுள்ளது என்பதை அறிய முடியும்.

ஆறு மாநில சட்டப்பேரவைகளுக்கும் நடந்த தேர்தல்களில் அடுத்து எந்தக் கட்சி அல்லது கூட்டணி ஆட்சிப் பொறுப்



**போயஸ் பங்களா வாசலிலிருந்து கோபாலபுரம் படிகளில்...**
**ஆட்சி மாற்றத்திற்கு வாலாட்டும் தமிழக போலீசு**



படிப்பகம்

www.padippakam.com

பேற்பது என்பதற்கு தீர்மானமான முடிவு தந்த மக்கள், மத்தியில் ஒரு தொங்கு நிலை நாடாளுமன்றம் அமைவதற்கே வாக்களித்துள்ளனர். பாரதீய ஜனதாவும் அதன் கூட்டணிக் கட்சிகளும் முதலிடத்தையும் நரசிம்மராவ் காங்கிரசு இரண்டாவது இடத்தையும், தேசிய முன்னணி - இடது சாரி கூட்டணி மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளன. எந்தக் கட்சியும், எந்தக் கூட்டணியும் ஆட்சி நடத்தும் அளவு பெரும்பான்மையைப் பெறமுடியவில்லை. இந்த மூன்று அணிகளுக்கு வெளியிலுள்ள இதுவரை அணிசாரா கட்சிகள், சுயேச்சைகள் அனைவரும் ஒட்டுமொத்தமாகக் கூட எந்த அணியில் சேர்ந்தாலும் அரசமைக்க முடியாது. காங்கிரசில் இருந்தோ, தேசிய முன்னணி - இடது சாரியில் இருந்தோ ஒரு பெரும் பிரிவைப் பிளவுபடுத்தி தன் பக்கம் இழுக்காமல் பாரதீய ஜனதா ஆட்சியமைக்க முடியாது. காங்கிரசும் கூட்டணிகளின் கூட்டணியுமாகிய தேசிய முன்னணி - இடது சாரி கூட்டணியும் கூட்டுச் சேராமல் தனித்தனியே ஆட்சியமைக்க முடியாது. வகுப்புவாதக் கட்சியான பாரதீய ஜனதா அதிகாரத்துக்கு வராமல் தடுப்பதும் மதச் சார்பற்ற அரசமைப்பதும்தான் தமது நோக்கம் என்று பிற கட்சிகள் அனைத்தும் கூறினாலும் இவர்கள் கூட்டுச் சேர்ந்து அரசமைப்பதற்கு தனிநபர் - குழு நலன்கள் தடையாகவே இருக்கின்றன.

தற்காலிகமாக ஏதாவது ஒரு கூட்டணி அரசு அமைந்தாலும் அது விரைவிலேயே கவிழ்ந்து மறு தேர்தல் வருவது தவிர்க்க முடியாததாகும். மறு தேர்தலும் ஒரு திரிசங்கு நிலைமையையே ஏற்படுத்தும். இரண்டு காரணங்களால் இந்த முடிவு தவிர்க்க இயலாததாகியுள்ளது. முதலாவதாக, சாதி, மத, மொழி, இன மற்றும் பிராந்திய ரீதியில் பன்முகமானதாகவும், ஏற்றதாழ்வானதாகவும் இந்தியா உள்ளது. இதுவே நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளிலும் பிரதிபலித்து தொங்கு நிலையை ஏற்படுத்துகிறது. இரண்டாவதாக, இந்த வேறுபாடுகளைக் கடந்த அரசியல் - பொருளாதாரத் திட்டங்களையோ, கவர்ச்சி மிகு தலைமையையோ கொண்ட அகில இந்தியக் கட்சி எதுவும் இப்போது இல்லை. அப்படிச் சொல்லிக் கொண்ட காங்கிரசே மாநில, பிராந்தியக் குழுக்களின் கட்சியாக சுருங்கி விட்டது. பல மாநிலங்களின் சட்டப் பேரவையில் அக்கட்சி அற்ப எண்ணிக்கையிலோ, அதுவும் இல்லாமலோ போய்விட்டது.

''காங்கிரசுக்கு ஒரு தேசிய மாற்று'' என்று பாவனை செய்து கொண்டு வரும் பாரதீய ஜனதாவும் அதன் கூட்டணியும் ஒருவேளை பெரும்பான்மை பலத்தை மறு தேர்தலில் பெற்றால் அது நாடாளுமன்ற, சட்டமன்ற ஜனநாயக முறைக்கே முடிவு காலமாக அமையும்; இந்து மத வெறி பாசிசத்துக்குத் தான் வழிவகுக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. அந்தக் கும்பலைத் தவிர அனைவரும் இதைக் கண்டு அஞ்சுவதால்தான் ''மித வாதி'' என்ற பெயரில் வாஜ்பாயை அது முன்னிறுத்தி நாடகமாடுகிறது. இதுதவிர தொங்குநிலை - நாடாளுமன்றமும், நித்திய கண்டம் - பூரண ஆயுசாக அரசும் ஏற்படுவது விரைவிலேயே ஒரு பாசிச அல்லது இராணுவ சர்வாதிகாரத்துக்கும் வழிவகுக்கும்.

ஏகாதிபத்திய மேல்நிலை வல்லரசுகளுக்கு ஊழியம் செய்யும் நரசிம்மராவ் - மன்மோகன்சிங் கும்பலால் அமலாக்கப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கையில் நாட்டிலுள்ள ஓட்டுக் கட்சிகளுக்குள் பெரிய கருத்து வேறுபாடு எதுவுமில்லை. எனவே ஆளும் வர்க்கங்களைப் பொருத்த வரையில் அரசியல் பொருளாதார ரீதியில் பெரும் பிரச்சினை இல்லை. ஆனால் சாதி, மத, இன,



பாசிச ஆட்சிக்கு பாதை போட பாரதீய ஜனதா கொண்டாட்டம்

மொழி, பிராந்திய ரீதியில் பன்முகப்பட்ட அமைப்பும் ஏற்றதாழ்வான வளர்ச்சியும் அதன் பிரதிபலிப்பாக நாடாளுமன்ற தொங்கு நிலையும் ஆளும் வர்க்கங்களுக்கு சமூகரீதியிலும் அரசியல் ரீதியிலும் தீராத தலைவலியை உருவாக்கி இருக்கிறது. இவை பொருளாதாரத் துறையிலும் ஒரு நிலையற்ற போக்கையும் நெருக்கடியையும் ஏற்படுத்துகிறது.

மத்தியில் மட்டுமல்ல, மாநிலங்களையும் ஆளும் கூட்டணிகளோ, கட்சிகளோ எதிர்மறையான வாக்குகளைப் பெற்றே ஆட்சிக்கு வந்தவைதாம். இலஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகளும், கவர்ச்சிவாத பொறுக்கி அரசியலும், கிரிமினல் மயமான அரசியலும் அடங்கிய நோய் இந்த புதிய ஆளும் கட்சிகளையும் தொற்றிக் கொண்டுள்ளன. இவற்றுக்கு அப்பாற்பட்டு, பழைய தவறுகளைக் களைந்து நேர்மையான, தூய்மையான, நிர்வாகத்திறமை மிக்க ஆட்சியைக் கருணாநிதி தமிழ்நாட்டுக்குத் தருவார் என்ற மாயை உருவாக்கப்படுகிறது. ஆனால் கருணாநிதி பதவியேற்றதற்கு முன்னும் பின்னும் நடக்கும் காட்சிகள் ஜெயா - சசி கும்பல் ஆட்சியின் தொடர்ச்சியானதாகவே புதிய ஆட்சியும் அமையும் என்றே காட்டுகின்றன. இன்னொரு புறம் கருணாநிதிக்கும் அவரது வாரிசுக்கும் சவாலாக மூப்பனாரையோ - ரஜினியையோ முன்னிறுத்தி மீண்டும் ஒரு ஜெயா - சசி பாணியிலான கும்பலின் ஆட்சியை உருவாக்குவதற்கு ''சோ'' முதலிய பார்ப்பன அறிவு ஜீவிகளும் பத்திரிக்கைகளும் எத்தனிக்கின்றன.

இந்த நிலையில், நாட்டையும் மக்களையும் எதிர் கொண்டுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு புரட்சிகரமான மாற்றுப் பாதையை மேற்கொள்வதே சரியானதாகும். அது சாதி, மத, மொழி, இன, பிராந்திய அடிப்படையில் எழும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஜனநாயக ரீதியிலான திட்டத்தை முன் வைத்திட வேண்டும். சாதீய முறையை ஒழிப்பதும், பிரிந்து போகும் உரிமையுடன் கூடி சுய நிர்ணய உரிமையை அங்கீகரிப்பதும், உண்மையான மதச்சார்பின்மை கொள்கையும் கொண்டதாக அது இருக்கவேண்டும். இவற்றோடு நிலப்பிரபுத்துவ, ஏகாதிபத்திய எதிர்ப்புப் புரட்சித் திட்டத்தின் கீழ் ஒரு மாற்று அரசியல் அமைப்பை நிறுவுவதற்கான போராட்டமும் வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

# ''சோ'' வின் துக்ளக் அரசியல்

## தனது சந்தர்ப்பவாதத்தை நியாயப்படுத்துவதே 'அதிமேதாவி' சோவின் பித்தலாட்டக் கொள்கை.

ஊருக்கு உபதேசம் செய்த கவுலி, கடைசியில் கழனிப் பானையில் விழுந்த கதையாக, திருவாளர் துக்ளக் ''சோ'' இப்போது ஜெயா ஆட்சியை வீழ்த்த கருணாநிதி - மூப்பனார் கூட்டணியை ஆதரிக்கக் கிளம்பிவிட்டார். இந்தக் கூட்டணியை அமைக்க ரஜினி ஆதரவுடன் தரகு வேலை செய்து இந்த 'அரசியல் வித்தக'ரின் சந்தர்ப்பவாதச் சதிராட்டங்களை அவரது ''துக்ளக்'' வாசகர்களே ஏற்க முடியாமல் பரிகசிக்கத் தொடங்கி விட்டனர்.

### 'அதிமேதாவி'யின் அந்தர்பல்டி

எம்.ஜி.ஆர். சாவுக்குப் பிறகு, ஜெயா - ஜானகி சக்களத்தி சண்டையைத் தொடர்ந்து, ''திராவிடக் கட்சிகள் என்றாலே இப்படித்தான்; பதவி வெறியர்கள், பிழைப்புவாதிகள்; இதனால் தமிழகத்துக்கு தலைகுனிவு ஏற்பட்டுள்ளது. நமக்கு தேசியக் கண்ணோட்டம் வேண்டும்; தேசியக் கட்சிகளால்தான் தமிழகம் தலைநிமிர முடியும்'' என்று தமிழக மக்களின் காதில் பூ சுற்றக் கிளம்பினார். அவரது எதிர்பார்ப்பு பொய்த்துப் போய், தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும், அரசியல் தரகன் சுப்பிரமணியசாமியோடு சேர்ந்து கொண்டு புலி பீதியூட்டி, தி.மு.க. ஆட்சியைக் கலைக்கத் துணை போனார். பின்னர், தமிழின உணர்வுக்கும் திராவிட இயக்க அரசியலுக்கும் சமாதி கட்டிய பார்ப்பன - பாசிச ஜெயாவின் ஆட்சியை வரிந்து கட்டிக் கொண்டு ஆதரித்தார். புலிகளையும் பிரிவினைவாத - பயங்கரவாத சக்திகளையும் ஒடுக்கிவிட்டதாகப் பசப்பிக் கொண்டு, ஜெயா கும்பலின் ஊழல் - ஒடுக்குமுறை வெறியாட்டங்களை நியாயப்படுத்தினார்.

பின்னர், பாசிச ஜெயாவின் ஆட்சி வெறுக்கத்தக்க கொள்ளைக் கூட்டமாகச் சீரழிந்து அம்பலப்படத் தொடங்கியதும், பாசிச ஜெயாவின் உதிர்ந்த ரோமங்களாகிய சில முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர்களை ஒன்றிணைத்து, ரஜினி ஆதரவுடன் காங்கிரசு கூட்டணியை நிறுவ முயற்சித்தார். அதுவும் தோல்வியடைந்ததும், திடீர் விபத்து போல நடந்த தி.மு.க. - மூப்பனார் கூட்டணியை இப்போது ஆதரிக்கக் கிளம்பிவிட்டார்.

அரசியல் வித்தகர், அடுத்த முதல்வரை உருவாக்கும் ஆற்றல் படைத்தவர், அரசியல் நெளிவு சுளிவுகளை நன்கறிந்த அதிமேதாவி, நடுநிலை விமர்சகர் என்றெல்லாம் சில அரைவேக்காடுகளால் புகழப்படும் துக்ளக் ''சோ'', அரசியலில் அடி முட்டாள்; கடைந்தெடுத்த சந்தர்ப்பவாதி என்பதை மீண்டும் நிரூபித்துக் காட்டி விட்டார்.

### திராவிட அரசியலை ஒழிக்கத் திரைமறைவில் சதி

தமிழின உணர்வு, திராவிட இயக்க அரசியல் ஆகியவற்றின் வாசனை கூட இல்லாமல் ஒழிப்பதற்கும், தேசிய அரசியல் ஜோதியில் அடையாளம் தெரியாமல் தமிழகத்தைக் கலக்கச் செய்வதற்கும், ரஜினியை முன்னிறுத்தி தி.மு.க., அ.தி.மு.க. அல்லாத மூன்றாவது அணியை உருவாக்க நீண்ட காலமாக திரைமறைவு வேலைகளில் துக்ளக் ''சோ'' ஈடுபட்டு வந்தார். ''ஜெயலலிதா மிகப் பெரிய அளவில் ஊழல் செய்தவர். இன்னொரு பக்கம் கருணாநிதி; ஏற்கனவே ஊழல் அரசாங்கத்தை நடத்தியவர். இவர்கள் இருவரையும் விட்டுவிட்டு மூன்றாவதாக யார் என்றால் அது காங்கிரசாகத்தான் இருக்க முடியும். அதனால் காங்கிரசு தலைமையில் இங்கே ஒரு அரசை அமைக்க முடியுமா என்ற முயற்சி பல மட்டங்களில் நடக்கிறது'' என்றார். (துக்ளக் 7.2.96)

இந்த நோக்கத்தோடு ஆர்.எம். வீரப்பன், திருநாவுக்கரசு, பண்ருட்டி இராமச்சந்திரன், இராஜாராம் முதலான ஜெயாவின் உதிர்ந்த ரோமங்களை ஒன்றிணைத்து ரஜினி ஆதரவுடன் காங்கிரசு கூட்டணியை உருவாக்கக் கிளம்பினார். தனித்தனி கட்சிகளை நடத்திவந்த ஜெயாவின் முன்னாள் அமைச்சர்களான வீரப்பன், திருநாவுக்கரசு, பண்ருட்டி இராமச்சந்திரன், ஜி. விசுவநாதன், அழகு. திருநாவுக்கரசு, இராஜாராம் ஆகியோர் தேர்தலைக் குறிவைத்து ''எம்.ஜி.ஆர். முன்னணி'' என்ற பெயரில் ஒன்றுபட்டனர். எம்.ஜி.ஆர். பிறந்த நாளன்று இம்முன்னணி நடத்திய நிகழ்ச்சியில் தமிழக காங்கிரசு பெருச்சாளிகளான மூப்பனார், குமரி அனந்தன், மத்திய இணை அமைச்சராக இருந்த அருணாசலம் மற்றும் அரசியல் தரகன் சுப்பிரமணியசாமி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். திருச்சியில் அடைக்கலராஜ் எம்.பி.யும் பிற காங்கிரசு பிரமுகர்களும் ரஜினி ரசிகர்களின் ஊர்வலத்தை நடத்தினர். இதே நேரத்தில் மத்திய அரசின் அமலாக்கப் பிரிவு அதிகாரிகள் சசிகலா குடும்பம் மற்றும் சில அமைச்சர்களின் வீடுகளில் ''ரெய்டு'' நடவடிக்கைகளை மேற்கொண்டு பரபரப்பூட்டினர்.

''தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய இரு கட்சிகளுடனுமே கூட்டணி வராது என்றுதான் நினைக்கிறோம்'' என்று குமரி அனந்தன், எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், ப. சிதம்பரம், அருணாசலம் ஆகிய காங்கிரசு பெருச்சாளிகள் திரும்பத் திரும்பக் கூறிவந்தனர்.

இவற்றையெல்லாம் பார்த்த துக்ளக் ''சோ'', எம்.ஜி.ஆர். முன்னணி - காங்கிரசு கூட்டணி, ரஜினி ஆதரவுடன் தேர்தலில் குதிக்கும் என்று கணக்கு போட்டார். ரஜினியின் திடீர் ஆலோசகராக மாறிய ''சோ'', இக்கூட்டணித் தலைவர்களுடன் பேரங்கள் - பேச்சு வார்த்தைகள் நடத்தினார். ''ஒரு ஒழுங்கான அரசு, ஒரு ஒழுங்

கூட்டணியைச் சாதித்த பூரிப்பில்
ரஜினி மூப்பனாருடன் பித்தலாட்ட புரோக்கர் சோ.





படிப்பகம்

www.padippakam.com

கான முதல்வர் வர வேண்டுமானால், இங்கே இருக்கிறவர்களுக்குள் மூப்பனார் சரியானவர் என்பது என்னுடைய அபிப்ராயம்'' என்று மூப்பனாரைத் துதி பாடக் கிளம்பினார்.

கடைசியில் அவரது கணக்கு பொய்த்துப் போய், அவர் கனவு கண்ட கூட்டணியே கலைந்து காணாமல் போய் விட்டது. எம்.ஜி.ஆர். முன்னணியில் ஆர்.எம். வீரப்பனுக்கும் திருநாவுக்கரசுக்கும் இடையிலான லடாய், பிரதமர் ராவின் கழுத்தறுப்பு, ரஜினியின் பல்டி முதலானவற்றால் இந்தக் கூட்டணி கருவிலேயே கலைந்து, கோமாளி ''சோ''வின் முகத்தில் கரியைப் பூசிவிட்டது.

**'தீர்க்கதரிசி'யின் சந்தர்ப்பவாத சதிராட்டம்**

குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று இந்த அரசியல் கோமாளி மீண்டும் ஒரு சந்தர்ப்பவாத பல்டி அடித்து, தனது செயலுக்கு நியாயம் கற்பிக்கக் கிளம்பினார். தி.மு.க. வுடன் காங்கிரசு கூட்டணி அமைந்து அதற்கு ரஜினி ஆதரவும் கிடைத்தால் ஜெயா கும்பலைத் தனிமைப்படுத்தி தேர்தலில் வீழ்த்திவிட முடியும் என்று அதற்கான தரகு வேலைகளில் இறங்கினார்.

''அ.தி.மு.க. போய், தி.மு.க. வருவது நல்ல தீர்வு இல்லைதான். ஆனாலும் ஊழல், தனிநபர் தாக்குதல், சட்ட - ஒழுங்கு சீர்கேடு போன்றவற்றிற்காக அ.தி.மு.க. தண்டனை அனுபவித்து தீர வேண்டும். இதற்கு மாற்றாக காங்கிரசு தலைமையில் ஒரு ஆட்சி ஏற்பட்டால் நல்லது. ஆனால் அது நடக்காமல் அ.தி.மு.க.வின் தோல்வி, தி.மு.க. ஆட்சி மீண்டும் வருவதற்கு வழிவகுத்து விட்டாலும் பரவாயில்லை. இந்த ஆட்சி தொடர்வதைவிட அம்மாதிரி நடப்பதே மேல்!....'' (7.2.96 துக்ளக் தலையங்கம்) என்று தனது சந்தர்ப்பவாதத்தை நியாயப் படுத்தக் கிளம்பினார்.

இதில் வேடிக்கை என்னவென்றால், தி.மு.க. - காங்கிரசு கூட்டணி ஏற்படுவதை வெறுப்போடு பார்த்தவர்தான் இந்த ''சோ''. ''தி.மு.க. - காங்கிரசு கூட்டணி ஏற்பட வாய்ப்பு இருக்கிறதா?'' என்ற கேள்விக்கு ''விவஸ்தை கெட்ட அரசியலில் எது வேண்டுமானாலும் நடக்கலாம்'' என்று பதிலளித்தார். (துக்ளக் 17.1.96). இப்போது அந்த விவஸ்தைகெட்ட அரசியலைத்தான் வெட்கமின்றி அவர் நியாயப்படுத்துகிறார்.

தி.மு.க. - மூப்பனார் காங்கிரசு கூட்டணி உருவான பிறகும் கூட, ஜெயாவை தேர்தலில் வீழ்த்திய பெருமை தி.மு.க. வுக்குப் போய்விடக் கூடாது என்பதற்காக, ரஜினி ஆதரவுடன் எல்லா எதிர்க் கட்சிகளின் (ம.தி.மு.க. - சி.பி.எம். தவிர்த்து) கூட்டணிக்காக திருவாளர் ''சோ'' பேரங்கள் நடத்தக் கிளம்பினார்.

> இருக்கின்ற கழிசடைகளை ஒப்பீடு செய்து ஒரு கழிசடையை ஆதரிப்பது என்று மாறி மாறி சில கட்சிகளையும் நபர்களையும் துதிபாடுவதுதான் சோ-வின் பித்தலாட்டக் கொள்கை.

இக்கூட்டணியிலிருந்து பா.ம.க.வும், வாழப்பாடியின் காங்கிரசும் விலகியதற்கு கருணாநிதியின் பிடிவாதம்தான் காரணம் என்று சாடினார். பின்னர், தி.மு.க. கட்சித் தலைமை அலுவலகத்துக்கு நேரில் சென்று கெஞ்சிப் பார்த்தார். ஆனாலும் அவர் எதிர்பார்த்த கனவு பலிக்கவில்லை. பின்னர், வேறுவழியின்றி தி.மு.க. - மூப்பனார் காங்கிரசு கூட்டணியை வரிந்து கட்டிக் கொண்டு ஆதரிக்கக் கிளம்பியுள்ளார்.

இதற்கு முன்பு, திருச்சியில் நடந்த தி.மு.க. மாநாட்டில் அக்கட்சித் தலைவர் கருணாநிதி, காஷ்மீரைப் போல மற்ற மாநிலங்களுக்கும் சுயாட்சி உரிமை அளிக்க வேண்டும் என்று பேசியதை எதிர்த்து, ''ஐயோ! மீண்டும் பிரிவினை வாதம்! யாழ்ப்பாணத்தின் கதிதான் தமிழகத்துக்கு ஏற்படும்!'' என்று துக்ளக் இதழில் (7.2.96) அட்டைப் படத்தோடு தலையங்கம் தீட்டி அலறினார். இப்போது தி.மு.க. - மூப்பனார் காங்கிரசு கூட்டணி ஏற்பட்டதும் அது பற்றி அவர் வாயே திறக்கவில்லை. திருவாளர் ''சோ''-வின் கொள்கைப்படி, 'பிரிவினைவாத'க் கட்சியான தி.மு.க.வுடன் 'தேசிய'க் கட்சியான காங்கிரசு கூட்டுச் சேர்வது எப்படி நியாயமாகும்? தனது கொள்கைக்கே எதிரான கூட்டணியை




அவர் ஆதரிப்பது எந்த வகையில் சரியானதாகும்? இது ''சோ''வின் அதிமேதாவித்தனமா, அல்லது பச்சோந்தித்தனமா?

**குட்டியாய் இருந்தால் குதிரை! மூக்கு வெளுத்தால் கழுதை!**

எல்லாவற்றுக்கும் மேலாக, சினிமா நடிகர்களின் கவர்ச்சியை நம்பி அரசியல் நடத்துவதை நீண்ட காலமாகச் சாடி வந்த ''சோ'', இப்போது கொஞ்சமும் கூச்சநாச்சமின்றி ரஜினியின் கவர்ச்சியில் அரசியல் நடத்த ஆரம்பித்துள்ளார். காரணம், ரஜினி இன்னொரு ஆம்பிளை ஜெயாவாக இருப்பதுதான்! அன்று எந்த நோக்கத்தோடு ஜெயாவை வளர்த்தாரோ, அதேபோல இன்று ரஜினியை வளர்க்க முயற்சிக்கிறார்.

''நான் கூப்பிட்டால் பத்து பேர் கூட வரமாட்டார்கள். ஆனால் ரஜினிகாந்த் கூப்பிட்டால் இலட்சக்கணக்கான பேர் வருவார்கள். அந்த மாதிரி நபர்களுக்கு நாட்டுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற எண்ணம் வந்தால் நல்லது தானே? இதனால்தான் நான் சில காரியங்களில் முனைகிறேன்'' என்று தனது தரகு வேலையை வெட்கமின்றி நியாயப்படுத்துகிறார், இந்த 'அரசியல் வித்தகர்'.

இப்படித்தான், அன்று ஜெயாவை ஆதரித்து துதிபாடி ஆட்சியில் அமர்த்த துணை நின்றார். இன்று அதே ஜெயா கும்பலை ஆட்சியிலிருந்து துரத்த வேண்டும் என்கிறார். ''கழுதைக் குட்டியா, குதிரைக் குட்டியா என்று சொல்ல மூக்கு வெளுத்தால் தான் தெரியும்'' என்று சமாதானம் சொல்வதுதான் இவரது தீர்க்கதரிசனமா? அல்லது அரசியல் ஞானசூனியமா?

அதுமட்டுமல்ல, ஜெயாவின் அராஜக ஆட்சிக்கு தண்டனையளிக்க வேண்டும் என்று வாதிடும் சோ, இக்கிரிமினல் கும்பல் பதவிக்கு வர உறுதுணையாக நின்றவர்களுக்கு தண்டனை அளிப்பது பற்றி வாயே திறக்கவில்லை. விளையும் பயிரை முளையிலேயே இனங்காண முடியாமல் தவறிழைத்து விட்டேன் என்று இந்த 'அதிமேதாவி' பகிரங்க மன்னிப்பும் கேட்கவில்லை.


**'தேசிய'க் கட்சிகளின் இலட்சணம்**

இது ஒருபுறமிருக்கட்டும். திராவிடக் கட்சிகள் மற்றும் பிற மாநிலங்களின் பிராந்தியக் கட்சிகளுக்கு மாற்றாக, 'தீர்க்கதரிசி' சோ, முன்னிறுத்தும் தேசியக் கட்சிகளின் யோக்கியதை என்ன?

காங்கிரசுக் கட்சியோ நாட்டை அந்நிய ஏகாதிபத்தியங்களிடம் மறு அடகு வைத்துவிட்ட துரோகிகளின் கூடாரம். வரலாறு காணாத ஊழல் - மோசடி சாக்கடையில் ஊறித் திளைக்கும் பன்றிகளின் கூட்டம். காந்தி காலத்திலிருந்தே ஒரு ஐக்கியப்பட்ட கட்சியாக இல்லாமல் கோஷ்


படிப்பகம்

www.padippakam.com




டிப் பூசல்களால் நெல்லிக்காய் மூட்டை போல நிற்கும் கட்சிதான் அது. தமிழகத்தில் தமது கட்சியை நடத்தக்கூட வக்கற்று காங்கிரசு பெருச்சாளிகள் முடமாகிக் கிடக்கிறார்கள்.

அதேபோல, பாரதீய ஜனதா கட்சியோ அப்பட்டமான இந்துவெறி பாசிஸ்டுகளின் கட்சி. அக்கட்சியிலும் பதவிவெறி கோஷ்டிச் சண்டைகள் புழுத்து நாறுகிறது. தமிழகத்தில் வேரோ, விழுதோ இல்லாத நிலையில் கூட, இந்து முன்னணி பிளவுபட்டுக் கிடக்கிறது. பம்பாய் குண்டு வெடிப்புக்குக் காரணமான மா∴பியா கும்பல் தலைவன் தாவூத் இப்ராஹிமின் அடியாட்களுடன் கள்ளக் கூட்டு சேர்ந்துள்ளவர்களும், ஹவாலா ஊழலில் சிக்கியவர்களும் எனக் கடைந்தெடுத்த 'தேச'த் துரோகிகள்தான் அக்கட்சியில் உள்ளனர்.

—இவைதான் துக்ளக் "சோ" ஆதரிக்கும் 'தேசிய'க் கட்சிகளின் லட்சணம்! இந்தக் கழிசடைக் கட்சிகளை ஆதரித்தால் எப்படி நல்லாட்சி மலரும் என்று தமிழக கோயபல்சான "சோ" எதுவும் கூறுவதில்லை.

இப்போது அவர் ஆதரிக்கும் தி.மு.க. - மூப்பனார் காங்கிரசு கூட்டணியால் நல்லாட்சியைத் தர முடியுமா என்பதற்கு அவர் எந்த உத்திரவாதமும் தரவில்லை. 'ஜெயாவின் தீய ஆட்சியை ஒழிப்பதற்குத்தான் ரஜினி ஆதரவு தருகிறார்; தி.மு.க. கூட்டணியால் நல்லாட்சிக்கு உத்திரவாதமில்லை. மூப்பனாரும் வீரப்பன் முதலான உதிர்ந்த ரோமங்களும் கூட்டணி அமைத்திருந்தால், அது நல்லாட்சியைத் தரும் என்று உத்திரவாதம் தர முடியும். ஆனால் நரசிம்மராவின் துரோகத்தால் இந்தக் கூட்டணி உருவாகாமல் போய்விட்டது' என்றுதான் "சோ" பேட்டியளிக்கிறார். நாளை தி.மு.க. ஆட்சியைப் பிடித்து, அதுவும் மக்களிடம் அம்பலப்பட்டுப் போகும் போது தனது செயலுக்கு நியாயம் கற்பிக்கும் நோக்கத்தோடுதான் இப்படியொரு சந்தர்ப்பவாத நிலைப்பாட்டை அவர் முன்னிறுத்துகிறார்.

கழுதை விட்டையில் முன் விட்டை எது, பின் விட்டை எது என்று பார்ப்பது, இருக்கின்ற கழிசடைகளை ஒப்பீடு செய்து ஒரு கழிசடையை ஆதரிப்பது என்று மாறி மாறி சில கட்சிகளையும் நபர்களையும் துதிபாடுவதுதான் "சோ"வின் பித்தலாட்டக் கொள்கை. நேற்று ஒரு கட்சியை ஆதரித்துவிட்டு இன்று ஒரு கட்சியைப் பச்சோந்தித்தனமாக ஆதரிப்பதற்கும், பின்னர் அக்கட்சியைத் தூற்றுவதற்கும் அவர் எந்தவொரு தார்மீகப் பொறுப்பும் ஏற்பதில்லை. தனது சந்தர்ப்பவாத மோசடிகளுக்கும் முட்டாள்தனத்துக்கும் தனது வாசகர்களிடம் கூட மன்னிப்புக் கேட்பதில்லை.

தமிழக மக்களை இளிச்சவாயர்களாகக் கருதிக் கொண்டு, தனது பித்தலாட்டங்களை திறமையாக மூடி மறைத்துக் கொண்டு 'நடுநிலை' வாதியாக நாடகமாடி வருகிறார் திருவாளர் "சோ". ஆனால் தீவிரமாகிவிட்ட அரசியல் அராஜகங்களின் விளைவாக, இப்பாசிசக் கோமாளியின் உண்மைச் சொருபம் மேலும் மேலும் அம்பலமாகி வருகிறது. இதைச் சாதகமாக்கிக் கொண்டு, மக்களின் காதில் பூ சுற்றி, தேசிய நாமம் போட்டுவரும் இக்கழிசடையின் எத்தனிப்புகளைத் தமிழக மக்களை விழிப்புடனிருந்து முறியடிக்க வேண்டும்.

● குமார்

## தடையை மீறி கோவையில் பொதுக்கூட்டம்

கோவை போலீசை இயக்குவது இந்து மதவெறி பாசிஸ்டுகள் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. பார்ப்பன மதவெறி பாசிஸ்டுகள் மாநாடு நடத்த அனுமதிக்கும் கோவை போலீசு, ம.க.இ.க. பொதுக் கூட்டங்களுக்கு மட்டும் அனுமதி தருவதில்லை.

நீண்ட நாட்களுக்குப் பின், 16.9.93-ல் கருவறை நுழைவுப் போராட்ட வெற்றி விழா பொதுக் கூட்டம் ம.க.இ.க. நடத்தியது. அதுவும் மாநில பொதுச் செயலாளரே 40 நாட்களுக்கு முன் விண்ணப்பித்து, பதிலில்லை எனில் உயர்நீதி மன்றம் செல்வோம் எனக் கூறியதால்தான் அக் கூட்டத்திற்கே அனுமதி கொடுத்தது கோவை போலீசு.

இம்முறையும் 14.03.96-ல் திடீர்ப் பணக்கார அரசியல் ரவுடிகளை எதிர்த்துப் பொதுக் கூட்டம் நடத்த கோவை போலீசு அனுமதி மறுத்தது. உயர்நீதி மன்றத்தில் மனுச் செய்து அனுமதி பெற்ற பின்னும், கலை நிகழ்ச்சி நடத்த தடை என்றது கோவை போலீசு. தடையை மீறி மிகச் சிறப்பான பொதுக்கூட்டம் - கலை நிகழ்ச்சி திட்டமிட்டபடி நடத்தப்பட்டது.

மையப் பேச்சாளர் தோழர் காளியப்பன் பேசும் போது 'உயர்நீதி மன்ற உத்தரவுப்படி உனது (போலீசு) தடையையும் மீறி கலை நிகழ்ச்சி நடத்துகிறோம். உன்னால் முடிந்ததைச் செய்து பார்' எனக் கோவை போலீசு அதிகாரிகளுக்கு, குறிப்பாக போலீசு உதவிக் கமிஷனர் முத்துசாமிக்கு சவால் விட்டுப் பேசினார். மக்கள் விரோதிகளுடன் கூடிக் குலவும் காவல்துறை, மக்களுக்கான அமைப்புகளுக்கு பேசக் கூட அனுமதி மறுக்கும் அடாவடித்தனத்தைச் சாடினார். கூட்டம் முடியும் வரை (இரவு 11.10) 800-க்கும் மேற்பட்ட மக்கள் கூடியிருந்து ஆதரவு தந்தனர். பொதுக் கூட்டத்தில் துண்டு வசூலில் மட்டும் ரூ. 1075/- நன்கொடை வசூலானது புதிய சாதனை. தோழர்களைச் சந்தித்து பாராட்டியவர்களிடம் அமைப்பில் இணைந்து செயல்பட வேண்டியதன் அவசியம் பற்றி வலியுறுத்தப்பட்டது.

தகவல்:
ம.க.இ.க., கோவை.



படிப்பகம்

www.padippakam.com

# காந்தி - நேதாஜி - பட்டேல் - நேரு 'தேசிய'ப் பாரம்பரியத்தின் ஊழல் வரலாறு!

இலஞ்ச - ஊழலும் அதிகார முறை கேடுகளும் இன்றைய நாடாளுமன்ற, சட்டமன்ற ஜனநாயக அரசியலோடும் அதிகார வர்க்க அமைப்போடும் ஒட்டிப் பிறந்தவை. இடையிலே யாரோ சில பேராசைக்காரர்களால் அறிமுகப்படுத்தப்பட்டவை அல்ல.

இந்த அமைப்பில் இவை அதிகரித்துக் கொண்டுதான் போகும். தடுக்கவோ, தவிர்க்கவோ முயன்றால் இவை வேறு வேறு வடிவமெடுக்குமே தவிர குறைந்து போகா; அழிந்து போகா. இன்றைய அரசியல் அமைப்பையே தூக்கி எறிவதன் மூலம்தான் இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகளை ஒழித்துக் கட்ட முடியும். வேறு வழியே கிடையாது.

இந்த உண்மையைப் பிரச்சாரம் செய்து வரும் இந்தியப் புரட்சியாளர்களின் பணியை, சமீப ஆண்டுகளில் அம்பலமாகிவரும் பல்வேறு இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள் பற்றிய குற்றச்சாட்டுகளும் எதிர்க் குற்றச் சாட்டுகளும் சுலபமாக்கிவிட்டன. அதாவது, சாதாரண மக்களைக்கூட இந்த உண்மைக்கு அருகே கொண்டு வந்து நிறுத்திவிட்டன.

இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள் என்ற பிரச்சினைக்கு இரண்டு தவறான தீர்வுகளை முன்வைத்து ஆளும் வர்க்க சித்தாந்தவாதிகள் மக்களைத் தவறான வழியில் திசை திருப்புகின்றனர். அவற்றில் ஒன்று, ஒரு நல்ல இராணுவ சர்வாதிகாரி ஆட்சிக்கு வரவேண்டும் என்பது. ஒரு தனிநபர், ஒரு கும்பல் அல்லது ஒரு இராணுவ சர்வாதிகாரம் என்பதே நாட்டின் அதிகாரம் முழுவதையும் ஒரே மையத்தில் குவித்துக் கொள்ளும் பேராசையினால் ஏற்படுவது. இதில் நல்ல சர்வாதிகாரம், கெட்ட சர்வாதிகாரம் என்ற வேறுபாடெல்லாம் கிடையாது. அந்த அதிகார மையத்தைச் சூழ்ந்து கொண்டிருக்கும் ஒரு சிறு கும்பலே எல்லாவற்றையும் முடிவு செய்கிறது. அதைத் தட்டிக் கேட்கும் உரிமை மக்களுக்கோ, வேறு எந்த அமைப்புக்குமோ கிடையாது. எனவே, முறைகேடுகள் கேள்வி முறையின்றி நடப்பதோடு, மக்களின் அடிப்படை மனித உரிமைக்குக் கூட வழியில்லாமல் போகிறது.

இந்த உண்மையைக் காண வெகுதூரம் போக வேண்டியதில்லை. நமது அண்டை நாடுகளான பாகிஸ்தான், வங்க தேசம், பர்மாவில் ஏற்பட்ட இராணுவ சர்வாதிகாரமே சான்றாக உள்ளன. இன்னும் உகாண்டாவின் இடி அமீன், பனாமாவின் நோரிகா, சிலியின் அலண்டே, ஈரானின் ஷா, ஹெய்தியின் டுவாலியர், பிலிப்பைன்சின் மார்க்கோஸ் — இப்படி ஏராளமான சர்வாதிகாரிகள் தமது சொந்த நாட்டையே சூறையாடிய வரலாற்றைக் கண்டோம். ஜனநாயகத்தின் பெயரால் நடக்கும் பாசிச ஆட்சிகளும் இத்தகையவைதாம் என்பதை அவசரநிலை கால இந்திரா, ஈராக்கின் சதாம் உசேன், தென்கொரியா, தாய்லாந்து, சிங்கப்பூர், மலேசியா, தாய்வான் ஆகிய நாட்டு ஆட்சிகள் காட்டுகின்றன.

இன்னொன்று, நமது நாட்டில் இப்போதுள்ள சட்டமன்ற - நாடாளுமன்ற ஜனநாயகம்தான் உலகிலேயே சிறந்தது. இதற்குள்ளாகவே இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள் பற்றிய பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியும் என்று பலர் வாதிடுகின்றனர். இதற்கு இவர்கள் இரண்டு வழிகளைச் சொல்லுகின்றனர்.

இரண்டு அரசியல் கட்சிகள்தான் இருக்க வேண்டும்; அல்லது பல கட்சி அமைப்பாக இருந்தாலும் தனியொரு கட்சியிடம் ஆளும் அதிகாரம் இருக்கக் கூடாது. கூட்டணி ஆட்சிதான் அமைய வேண்டும். அப்போதுதான் ஒரு கட்சி தவறு செய்தாலும், மற்றவை தட்டிக் கேட்டுத் திருத்த முடியும் என்கிறார்கள்.

ஆனால் அனுபவம் வேறுவிதமாக உள்ளது. இரு கட்சி ஆட்சிமுறை உள்ள அமெரிக்காவிலேதான் "வாட்டர்கேட்" ஊழலும், "ஈரான் - இஸ்ரேல் - காண்ட்ரா" ஆயுதக் கடத்தல் மற்றும் விற்பனை ஊழலும், இப்போது கிளின்டன் மனைவி செய்த ஊழலும் நாறுகிறது. கூட்டணி ஆட்சிகள் நடக்கும் இத்தாலியிலும் ஜப்பானிலும் இலஞ்ச - ஊழல் சாக்கடை பெருக்கெடுத்துப் பாய்கிறது. இதனால் சில மாதங்கள், சில ஆண்டுகள்கூட ஆட்சி நீடிக்க முடிவதில்லை. தேர்தல்கள் நடப்பதும், ஆட்சிகள் கவிழ்வதும் அடிக்கடி வருகின்றன.

மற்றொன்று, "நமது அரசியல் அமைப்பு நல்லதுதான். ஆனால் இப்போதுள்ள தலைவர்களிடம் தொண்டுள்ளமும் தேசபக்தியும் இல்லை. காமராஜ், இராஜாஜி, நேரு போன்ற தூய்மையான, நேர்மையான, எளிமையான மக்கள் தலைவர்கள் ஆட்சிக்கு வந்தால் இப்படி நடக்காது. திராவிடக் கட்சிகள் ஆட்சிக்கு வந்த பிறகுதான் எல்லாம் சீர் கெட்டுவிட்டது" என்று பார்ப்பன ஏடுகள் தொடர்ந்து எழுதி வருகின்றன. இதையே "அனைத்திந்திய தேசிய"க் கட்சிகளும் பிரதிபலிக்கின்றன.

"சைக்கிள்" கடைக்காரனும், "சலூன்" கடைக்காரனும் அரசியலில் நுழைந்து ஆட்சியைப் பிடித்துவிட்டதால் தான் இந்த நிலை. பரம்பரைப் பணக்காரர்களின் ஆட்சியாக இருந்தால் இப்படி நடந்திருக்காது என்பதுதான் இந்த "தேசியங்களின்" வாதம்.

இது இரண்டு அப்பட்டமான பித்தலாட்டங்களை அடிப்படையாகக் கொண்ட வாதமாகும். ஒன்று, இன்று நாம் கண்ணெதிரே காணும் உண்மையை மூடி மறைப்பது; மற்றொன்று வரலாற்றையே திரித்துப் புரட்டுவது.

திராவிடக் கட்சிகளும் அல்லது வேறு பிற பிராந்தியக் கட்சிகளும் ஆளும் மாநிலங்களில்தான் இலஞ்ச - ஊழல் - அதிகார முறைகேடுகள் நடக்கின்றன என்பது அப்பட்டமான புளுகு ஆகும். "அனைத்திந்திய தேசிய" கட்சிகள் ஆளும் மத்திய, மாநில அரசுகளில் இலஞ்ச - ஊழல் இதைவிடப் பன்மடங்கு புழுத்து நாறுகிறது. இதற்குத் தனியே சான்றுகள் எதுவும் தேவையில்லை.

அரியானாவை மாறிமாறி ஆளும் பஜன்லால், பன்சிலால், தேவிலால்; மராட்டியத்தை ஆண்ட சரத் பவார், ஆளும் பா.ஜ.க. - சிவசேனா; ஒரிசாவை மாறிமாறி ஆளும் ஜே.பி. பட்நாயக், பிஜூ பட்நாயக்; வங்கத்தைத் தொடர்ந்து ஆளும் ஜோதிபாசு; பீகாரின் லல்லு பிரசாத்; ம.பி.யின் அர்ஜுன்சிங்; பட்வா; உ.பி.யின் முலயம் சிங்; இவர்களுக்கெல்லாம் திலகமாகத் திகழும் நரசிம்மராவ் ஆகியோர் இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகளுக்கு அப்பாற்பட்டவர்களா? கிரிமினல் - குற்றக் கும்பல்களின் தொடர்புகளே இல்லாத சத்தியவான் - சாந்தமூர்த்திகளா?

அப்படிச் சொல்ல முடியாத அளவுக்கு அவர்கள் அம்பலப்பட்டுப் போய்

பிர்லாவிடம் கையேந்தினார் 'மகாத்மா'



www.padippakam.com

விட்டார்கள். அதனால்தான் இலஞ்ச - ஊழல், தவிர்க்க இயலாதது, அதோடு ஒத்துப் போகப் பழகிக் கொள்ளுங்கள் என்று ஒருபுறம் உபதேசிக்கிறார்கள். அதேசமயம், திராவிட, மாநிலக் கட்சிகளுக்கு ''அனைத்திந்திய தேசிய''க் கட்சிகளை மாற்றாக முன்னிறுத்துகின்றனர்.

அப்புறம் பரம்பரைப் பணக்காரர்கள் இலஞ்ச ஊழலில் ஈடுபட ஆசைப்பட மாட்டார்கள், அவசியமும் இல்லை என்கிற வாதம். ஓலைக் குடிசைக்காரன் ஓட்டு வீடு கட்டினாலும் தெரிந்து விடுகிறது. பணக்காரன் சொத்துக்கு மேல் செத்துச் சேர்த்தாலும் தெரிவதில்லை என்பது தான் உண்மை. அதாவது பரம்பரைப் பணக்காரன் அடிக்கும் கொள்ளை வெளியில் தெரியாமல் மூடி மறைக்கப்படுகிறது. தேவிலால் என்ன ஏழையாக இருந்து திடீர்ப் பணக்காரனானவரா? இந்திராவும் ராஜீவும் பரம ஏழைகளின் பரம்பரையா? மாதவராவ் சிந்தியா மன்னர் பரம்பரைதானே? இவர்கள் எல்லாம் இலஞ்ச - ஊழலில் ஈடுபடவில்லையா?

நல்ல சேனாபதி சக்கரை மன்றாடியார் மிராசு பரம்பரைதான். இவர்தான் காமராஜர் ஆட்சியிலே மந்திரியாகி கீழ்பவானி, பரம்பிக் குளம் - ஆழியாறு திட்டங்கள் மூலம் தனது ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்குத் தனிக் கால்வாய் வெட்டிக் கொண்டார். தொழிலதிபர் டி.டி.கிருஷ்ணமாச்சாரி மந்திரியாக இருந்தபோது, இன்னொரு தொழிலதிபரான முந்திராவின் பங்குச் சந்தை ஊழலுக்கு நேரு ஆட்சியின் போது துணை போனார். அதேபோல பண்ணையதிபர்களான பஞ்சாபின் பிரதாப் சிங் கைரோனும், காஷ்மீரின் பக்சி குலாம் முகமதுவும் இலஞ்ச - ஊழலில் சிக்கி அம்பலமாயினர். இப்படி ஏராளமான சான்றுகள் உள்ளன.

இவற்றையெல்லாம்விட அனைத்திந்திய தேசியங்களின் அண்டப்புளுகை அம்பலப்படுத்தும் செய்திகள் இப்போது வெளியாகியுள்ளன. ''தேசப் பிதா'' என்றும், ''நேதாஜி'' என்றும், ''இரும்பு மனிதர்'' என்றும் ஏற்றிப் போற்றும் காந்தி, சுபாஷ் சந்திரபோசு, வல்லபாய் பட்டேல், நேரு ஆகிய ''தேசிய''த் திலகங்களின் பாரம்பரியமே இலஞ்ச - ஊழலால் மாசுபட்டதுதான் என்பதற்கான ஆதாரம் கிடைத்திருக்கிறது.

1969-இல் இந்திரா காந்தி காங்கிரசைப் பிளந்த பிறகும், அவரது அரசியல் வாரிசுகளாக சஞ்சய் மற்றும் ராஜீவ் காந்திகள் வந்த பிறகுதான் அக்கட்சி இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகளில் இறங்கியது. அதற்கு முன்பு தூய்மையான ''தேசிய''க் கட்சியாக இருந்தது என்றும் ஒரு பிரிவினர் சாதிக்கின்றனர்.

ஆனால் இந்திராவின் தாத்தா, சஞ்சய் - ராஜீவின் கொள்ளுத் தாத்தா மோதிலால் நேருவின் தலைமையிலான, காங்கிரசின் நிழல் கட்சியான சுயராஜ்ஜியக் கட்சியே ஊழலில் மூழ்கித் திளைத்திருக்கிறது.

இந்தியாவை ஆண்ட பிரிட்டானிய வைஸ்ராயின் தனிச் செயலாளர், 1924 ஆகஸ்டில் உள்துறை மந்திரிக்குப் பின்வருமாறு கடிதம் எழுதியுள்ளார்:

''சட்டப் பேரவை சம்பந்தப்பட்ட ஊழல்கள் தனது கவனத்துக்கு வரும் போதெல்லாம் மேதகு வைஸ்ராய்க்கு விட்டன் பிரபு தெரிவித்துள்ளார். அவை: 1. மந்திரிகளின் சம்பளத் தீர்மானத்துக்கு எதிராக ஓட்டுப் போடுவதில் இருந்து ஒதுங்கி இருப்பதற்காக சட்டப் பேரவையின் முகமதிய உறுப்பினர்களுக்கு இலஞ்சம் தர முன் வந்தது. 2. அதன்படி சுயராஜ்ஜியக் கட்சிக்கு ஆதரவாக ஓட்டுப்போட்ட சட்டப் பேரவை உறுப்பினர்



நேதாஜியின் பணபலம்
வங்க முதலாளிகளிடம் இருந்து வந்தது

களுக்கு இலஞ்சம் தரப்பட்டது. 3. அரசாங்கத்துக்கு ஆதரவாக ஓட்டுப் போடாமல் இருப்பதற்காக சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு நல்ல சம்பளம் கிடைக்கும் வாரியங்களில் பதவிகள் தரப்பட்டன. 4. சட்டப்பேரவையில் முக்கிய விவாதங்கள் நடக்கும் போது கலந்து கொள்ளாமல் இருப்பதற்காக நியமன உறுப்பினர்களுக்கு மாதச் சம்பளம் தரப்பட்டது.''

ஓட்டுக் கட்சி அரசியலில் குதித்த காங்கிரசின் முன்னோடியான, சுயராஜ்ஜியக் கட்சி என்னும்'' அனைத்திந்திய தேசியம்'' தான் சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கே இலஞ்சம் கொடுப்பதைத் துவக்கி வைத்தது. திராவிடக் கட்சிகளின் முன்னோடியான நீதிக் கட்சி சென்னை மாகாணத்தில் இதையே செய்தது. ''பரம்பரைப் பணக்காரர்கள், படித்தவர்கள் இலஞ்ச - ஊழலில் ஈடுபட மாட்டார்கள்'' என்ற புளுகையும் இக்கட்சிகள் அப்போதே பொய்ப்பித்து விட்டன. பெரும் மிட்டா - மிராசுதார்கள், அரசர்கள், பெரும் வியாபாரிகள், இலண்டன் போய் படித்தவர்கள்தாம் அக்கட்சிகளின் தலைவர்களும் அப்போதைய மத்திய, மாநில சட்டப்பேரவை உறுப்பினர்களும் என்பதைக் கவனித்தாலே இது புரியும்.

''ஆங்கிலேய காலனிய அரசுக்கு எதிராகப் பல்வேறு போராட்டங்களில் தொடர்ந்து ஈடுபடும் தொண்டர்களின் குடும்பங்களைப் பாதுகாக்கவும், கட்சிப் பணிகளுக்காகவும் ஏராளமாக நிதி தேவையாக இருந்தது. ஒடுக்குமுறை காலனி அரசு கட்சி நிதியைப் பறிமுதல் செய்து விடும் ஆபத்து எப்போதும் இருந்தது. ஆகவே நிதி திரட்டுவதும் சில முக்கியப் பிரமுகர்களின் இரகசியக் கணக்கில் நிதியைப் போட்டு வைப்பதும் தவிர்க்க முடியாததாக இருந்தது'' என்று சொல்லி அப்போதும் இப்போதும் காங்கிரசின் நடவடிக்கைகள் நியாயப்படுத்தப்படுகின்றன.

ஆனால், சுதந்திரப் போராட்டத்தை ஆதரித்த தொழிலாளர்கள், விவசாயிகள், நடுத்தர வர்க்கத்தினர், தேசிய முதலாளிகளிடம் இருந்து நிதி திரட்டப்படவில்லை. இந்திய சுதந்திரப் போராட்டத்தை ஆதரிக்காத, ஏகாதிபத்தியங்களின் தரகு முதலாளிகளிடம் இருந்து தான் நிதி வசூலிக்கப்பட்டது. காலனிய அரசுக்கெதிராக காங்கிரசிடம் தங்களுக்குள்ள பிடிப்பைக் காட்டி, ஏகாதிபத்தியங்களிடம் பேரம் பேசி ஆதாயம் அடையவே தரகு முதலாளிகள் இவ்வாறு நிதியளித்தனர்.

காந்தி, பட்டேல், நேரு, நேதாஜி ஆகியோர் உட்பட அன்றைய தலைவர்கள் காங்கிரசுக்காக தரகு முதலாளிகளிடம் நிதி திரட்டவும், அதைக் கேடாகப் பயன்படுத்திக் கொள்வதற்கான வசதியும், அடிப்படையும் இருந்தது. காலனிய அரசின் ஒடுக்குமுறையைக் காரணங் காட்டி இரகசியமாகவே திரட்டப்பட்ட நிதி இரகசியக் கணக்குகளில் வைக்கப்படுவதால் யார் யாரிடம் இருந்து எவ்வளவு நிதி வசூலிக்கப்பட்டது? எதற்காக எவ்வளவு செலவு செய்யப்பட்டது? எவ்வளவு தொகை எஞ்சியிருக்கிறது? இது போன்ற விவரங்கள் யாருக்கும் தெரிவிக்கப்படவில்லை. யாரும் இதைச் சோதித்தறிவதற்கான வாய்ப்புகள் கட்சியில் எப்போதுமே கிடையாது.

எளிமையாகவே வாழ்ந்த தியாகிகளான காந்தி, நேதாஜியைக் கூட சந்தேகிக்கலாமா என்று 'தேசபக்தர்கள்' கேட்கக்கூடும். ஆம், சுதந்திரப் போராட்டத்தின் பெயரால் வசூலிக்கப்பட்ட நிதி காங்கிரசின் ''கோஷ்டி''த் தகராறு, பதவிச்



படிப்பகம்

www.padippakam.com



படேல் - நேரு கோஷ்டிச் சண்டையில்
நேருவின் ஊழல்கள் அம்பலமாயின

சண்டைகளுக்காகக் கேடாகப் பயன்படுத்தப்பட்டது. அதற்கான ஆதாரங்களும் உள்ளன.

காங்கிரசின் வரலாறே கோஷ்டிச் சண்டைகள், பதவிப் போட்டிகளின் வரலாறுதான். 1937-இல் காந்தியின் கோஷ்டிக்கும் நேதாஜி சுபாஷ் சந்திரபோசின் கோஷ்டிக்கும் இடையிலான தகராறு உச்சத்தை அடைந்தது. ஹரிபுரா மாநாட்டில் காங்கிரசுத் தலைமைக்கான போட்டி கடுமையானது. காந்தி தனது விசுவாசியான பட்டாபி சீதாராமையாவைத் தலைவராக்க சதிவேலைகள் - நிர்ப்பந்தம் செய்வதிலும் ஈடுபட்டனர். நேதாஜி வெற்றி பெற்றால் காங்கிரசில் இருந்து விலகி விடுவதாக மிரட்டினார். அதன்படியே நேதாஜி வெற்றி பெற்று அனைத்திந்திய காங்கிரசுத் தலைவரான போது, காந்தி கட்சியிலிருந்து விலகினார். பட்டேல், நேரு போன்ற தலைவர்கள் வற்புறுத்திய தன் பேரில் வெறுத்துப்போன நேதாஜி, கட்சித் தலைவர் பொறுப்பு மட்டுமல்ல; கட்சியிலிருந்தே வெளியேறினார்.

இந்தக் கோஷ்டித் தகராறை ஒட்டி, ''போசு தனது சொந்தப் பொறுப்பில் நிதி திரட்டி, கட்சியை நடத்துவதற்குள்ள வாய்ப்பு வசதி'' பற்றியும், ''காந்தியின் 'பணமூட்டைகள்' இல்லாமல் போஸ் தொடர்ந்து கட்சியை நடத்த முடியுமா?'' என்றும் அப்போதைய வைஸ்ராய் லின்லித்கௌ அறிய விரும்பினார்.

அதற்காக அன்றைய உளவுத் துறை இயக்குநர் சர் ஜான் எவர்ட் என்பவர், ''காங்கிரசின் மூலாதாரங்கள் பற்றிய பரிசீலனை'' என்று ஒரு குறிப்பு எழுதினார். அதன் அடிப்படையில் ''காங்கிரசின் நிதியும் சொத்துக்களும் பற்றிய குறிப்பு'' என்றொரு அறிக்கையை உளவுத் துறையின் துணை இயக்குநர் குலாம் அகமது தயாரித்தார். அதில் கண்டுள்ள விவரங்கள் ''அனைத்திந்திய தேசியப் பாரம்பரியத்தின்'' இலட்சணத்தைத் தெட்டத் தெளிவாக்கிக் காட்டி விட்டன.

ஜி.டி. பிர்லா, இராமகிருஷ்ண டால்மியா, வால்சந்த், ஹிராசந்த், புருஷோத்தம் தாஸ் தாகூர், தாஸ், கஸ்தூர் பாய் லால்பாய், லக்ஷ்மி நாராயண் கடோடியா, அம்பாலால் சாராபாய், கோவிந்த ராம் சக்சேரியா, சேத் முகுந்த்லால் மற்றும் டாடா ஆகிய மார்வாரி - பனியா தரகு முதலாளிகள் காங்கிரசுக்குத் தொடர்ந்து புரவலர்களாக இருந்துள்ளனர். ஜம்னாலால் பஜாஜ், பி.சி. ராய், புலாபாய் தேசாய் போன்ற பல தரகு முதலாளிகள் காங்கிரசின் முக்கியத் தலைவர்களாகவே இருந்துள்ளனர்.

''நேதாஜி கோஷ்டிக்கு எதிராக காங்கிரசு மாநாட்டிற்கு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு என்று செலவு செய்வதற்காக மட்டும் காந்தி கோஷ்டி சார்பாக பம்பாய் மாகாண காங்கிரசு மூன்று இலட்சம் ரூபாய் இரகசிய நிதியாக வைத்திருந்தது. பின்னாளில் சுவிஸ் நாட்டுத் தூதராகப் பதவி பெற்ற கிருபாய் தேசாய் பெயரில் வைக்கப்பட்டிருந்தது'' என்கிறது குலாம் அகமதுவின் அறிக்கை.

வெள்ள நிவாரணத்துக்காகவும் (1927-28) அரசு பறிமுதல் செய்த நிலத்தை மீட்பதற்காகவும் திரட்டப்பட்ட நிதியில் இருந்து நான்கு இலட்சம் ரூபாய் அளவுக்கு குஜராத்தில் வல்லபாய் பட்டேலிடம் இருப்பு வைக்கப்பட்டிருந்தது என்று உறுதிப்படுத்த முடியாத செய்தியையும் அந்த அறிக்கை கூறுகிறது. அகமதாபாத்தின் தரகு முதலாளி கஸ்தூர் பாய் லால் பாய் காங்கிரசின் பிரதான இரகசிய நிதிக் காப்பாளராக இருந்தார். அம்பாலால் சாராபாய், வாடிலால் லல்லுபாய் மேத்தா ஆகியோரும் காங்கிரசின் இரகசிய நிதிக் காவலர்களாக இருந்தனர்.

1937-இல் நடந்த பொதுத் தேர்தல்களில் மட்டுமல்ல, அனைத்திந்திய காங்கிரசு மாநாட்டிற்காக, தங்கள் தங்கள் மாநில காங்கிரசு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக பிரதான கோஷ்டிகள் பணத்தை வெள்ளமெனச் செலவழித்தன. இது பற்றிய விவரங்கள் டாக்டர் பி.ஆர். தாம்லின்சன் எழுதிய, ''இந்திய தேசிய காங்கிரசும் பிரிட்டிஷ் அரசும்'' என்ற நூலில் உள்ளது.

''காங்கிரசு வேட்பாளர்கள் ஏராளமாகச் செலவு செய்தனர். ஒவ்வொரு தொகுதிக்கும் மூன்று முதல் நாலாயிரம் ரூபாய் வரை செலவழித்ததாக காங்கிரசு தலைவர் ராஜேந்திரப் பிரசாத் மதிப்பிடுகிறார். பிரார் பகுதியில் உள்ள எட்டுக் காங்கிரசு எம்.எல்.ஏ.க்களும் தலா 4,500 ரூபாய் செலவழித்தனர்.

''உ.பி.யில் தாழ்த்தப்பட்டோர் தொகுதிக்கு 500 ரூபாய் முதல் ''மேல் சாதி''யினர் தொகுதிக்கு 11399 ரூபாய் வரை செலவிடப்பட்டது. சராசரி 2,667 ரூபாய் வீதம் 141 தொகுதிகளுக்கு 3,76,068 ரூபாய் என்ற பெருந்தொகை செலவிடப்பட்டது. பல தொகுதிகளில் எதிரணியினர் செலவழித்ததை விட இது குறைவுதான் என்றாலும் காங்கிரசு வெற்றிபெற்ற 129 தொகுதிகளிலும் எதிராளிகளை விடத் தாராளமாக பணம் வாரி இறைக்கப்பட்டது'' என்கிறார் தாம்லின்சன்.

55 ஆண்டுகளுக்கு முன்பு செலவிடப்பட்ட இந்தத் தொகையின் இன்றைய மதிப்போடு ஒப்பிடும் போது பல கோடி ரூபாயாகும் என்பதை மறந்து விடக் கூடாது.

சுபாஷ் சந்திர போசு பற்றி தாம்லின்சன் எழுதுகிறார்; ''காந்தியவாதிகளினுடைய நிதி மூலாதாரங்களில் இருந்து போசினுடையவை வேறானவை. வலதுசாரித் தலைவர்களின் பிரதான நிதி மூலாதாரம் பட்டேல், தேசாய், பஜாஜ், பிர்லா மூலமாக வந்தது.... சிறியதாக இருந்தாலும் போசின் வருமான ஆதாரம் அவருக்கே சொந்தமானது. வங்க மாகாண காங்கிரசுக் கமிட்டி, கல்கத்தா மாநகராட்சி (இவை இரண்டும் போசின் கட்டுப்பாட்டில் இருந்தன) மூலமாக வங்காள தொழிலதிபர்களுக்குச் சாதகமான காரியங்கள் செய்வதற்காக அவர் பணம் பெற்றார். வங்கம், பீகார், அசாம், ஒரிசாவில் தொழிலாளர் நல்லுறவுகளைப் பேணுவதற்கு ஈடாக பெரும் தொழிலதிபர்களிடம் இருந்து ''பாதுகாப்பு மாமூல்'' வசூலித்தார். டில்லி மில் அதிபர் சங்கர்



படிப்பகம்

லால் தலைமையில் வங்காளிகள் அல்லாத ஒரு பிரிவு தொழிலதிபர்களும் போசுக்கு ஆதரவு அளித்தனர். போசும் அவரது சகோதரர்களும் இயக்குநராகவும் சங்கர்லால் நிர்வாக இயக்குநராகவும் இருந்த டிராபிகல் இன்சூரன்சு கம்பெனி நிதியையும் தனது நிலையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகப் பயன்படுத்தினார். திரிபுரி மாநாட்டில் தனது (கோஷ்டியைச் சேர்ந்த) பிரதிநிதிகளுக்கும், ஆள் திரட்டுபவர்களுக்கும் செலவழிப்பதற்கு என்று 50,000 ரூபாய் நிதி திரட்டி வைத்திருந்தார், போசு". ஐம்பதாயிரம் ரூபாய் என்பது இன்றைய மதிப்பில் எவ்வளவிருக்கும்? குறைந்தது ஐம்பது கோடியாவது இருக்கும் அல்லவா?

பிரிட்டிஷாரிடம் இருந்து காங்கிரசு அதிகாரத்தைக் கைமாற்றிக் கொண்ட பிறகு பட்டேலுக்கும் நேருவுக்கும் இடையே கோஷ்டிச் சண்டை தீவிரமானது. நேரு அமைச்சரவையில் உள்துறை மந்திரியாக இருந்த பட்டேல், 1950 மே-யில் நேருவுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் "நேரு கோஷ்டிக்கு" 75,000 ரூபாய் இலஞ்சம் கொடுத்த இரண்டு நபர்களைப் பற்றி, "இந்த இரண்டு பெரிய மனிதர்களும் இமாலயன் ஏர்வேஸ் கம்பெனியைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு எந்தச் சூழ்நிலையில் இரவு விமானத் தபால் சேவை அனுமதி தரப்பட்டது என்பது உங்களுக்கு தெரியும்" என்று குறிப்பிட்டார். நேருவின் மருமகனும் இந்திராவின் கணவனுமான பெரோஸ் காந்தி இதே குற்றச்சாட்டை எழுப்பினார். இந்திராவுடன் அவர் மண முறிவு கொண்டதையடுத்து இப்படி பல புகார்களை அவர் நேருவுக்கெதிராக எழுப்பினார்.

உடனே நேரு அப்போதைய விமானத் துறை மந்திரி கித்வாயைக் கூப்பிட்டு அந்த ஒப்பந்தத்துடன் தனக்கு எவ்விதத் தொடர்பும் இல்லை என்று மறுக்கச் சொன்னார். ஆனால் அதை ஏற்க மறுத்த பட்டேல், "நீங்கள் எடுத்துள்ள நிலையைப் பார்க்கும் போது, இந்தப் பிரச்சினையை மேலும் பரிசீலிப்பது பயனற்றது என்று கருதுகிறேன். அந்த நன்கொடை நேஷனல் ஹெரால்டு நாளிதழுக்கு வந்தது என்று கூறி வருகிறீர்கள் போலத் தெரிகிறது. அது நல்ல தொழில்தான். அதற்கான கடன் மற்றும் பங்கு பத்திரங்களில் முதலீடு செய்வது மோசமானது அல்ல. ஆனால் நேஷனல் ஹெரால்டு நிறுவனத்தில் முதலீடு செய்துள்ள மற்றவர்கள் எனக்குத் தந்த தகவல்கள் வேறு மாதிரி உள்ளன" என்று நேருவுக்கு எழுதி முடித்துக் கொண்டார். இதில் இருந்து நேருவே 75,000 ரூபாய் நன்கொடை பெற்றார்; அதை "நேஷனல் ஹெரால்டி"ல் முதலீடு செய்வதாகப் பொய் கூறினார் என்று வல்லபாய் பட்டேலே குற்றஞ்சாட்டுவது தெரிகிறது.

(தொடரும்)

# பா.ம.க. - கந்து வட்டி ரவுடிக் கும்பல்-போலீசு புனிதக் கூட்டு

விருத்தாசலத்தில் சரவணா அச்சக உரிமையாளர் சரவணனின் அண்ணன் கணேசன். இவர் விருத்தாசலத்தைச் சேர்ந்த கந்து வட்டிக் கொள்ளையன் தன்ராசு மற்றும் வெங்கடேசன் இருவரிடமும் மூவாயிரம் ரூபாய் கடனாகப் பெற்று வெற்றுப் பத்திரத்தில் கையெழுத்துப் போட்டுள்ளார்.

சில மாதங்கள் கழித்து வெற்றுப் பத்திரத்தில் ரூ. 40,000/- கடன் பெற்றதாக தன்ராசு - வெங்கடேசன் கும்பல் எழுதியது. இதுதான் அக்கந்து வட்டிக் கொள்ளையர்களின் வாடிக்கை. பணம் தரவில்லை என நீதிமன்றத்தில் அச்சகத்தைச் சேர்ந்த அனைவரையும் எதிர்வாதியாகப் போட்டு, அச்சகமே தனது உரிமை என நீதி(!)மன்றத் தீர்ப்பும் பெற்றது. அக்கும்பல் அச்சகத்தைக் கொள்ளையிட 26.2.96 அன்று முயன்றது. அண்ணன் வாங்கிய கடனுக்குத் தம்பியின் அச்சகத்தைக் கொள்ளையிட முயன்ற இப்பாதகச் செயலை அச்சக உரிமையாளர் சங்கம் தலையிட்டுத் தடுத்தது.

மீண்டும் 28.2.96 அன்று 20 ரவுடிகளைக் கொண்டு வந்து அச்சகத்தைக் கொள்ளையிட முயன்றது வெங்கடேசன் - தன்ராசு கும்பல். இன்ஸ்பெக்டர் இராமன், டி.எஸ்.பி. சந்திரசேகர் தலைமையில் போலீசார் ரவுடிகளுக்குத் துணை நின்றனர். ஆனாலும், பொதுமக்கள் கூடி இப்பகற் கொள்ளையை முறியடித்ததோடு, ரவுடிக் கும்பலின் மீது வழக்குப் போடக் கோரினர். பு.மா.இ.மு.வும் இயக்கமெடுத்து, ரவுடிகளின் பெயர் குறிப்பிட்டு வழக்குப் போடும்படி சுவரொட்டி இயக்கம் நடத்தியது.

அதன் பின்னரே ரவுடிக் கும்பலைச் சேர்ந்த நான்கு பேர் மீது ஒப்புக்காக வழக்குப் போட்டது காவல் துறை. இவற்றை அம்பலப்படுத்தி பிரசுரம் வெளியிட்டது பு.மா.இ.மு. பிரசுரம் விநியோகித்த தோழர் சூரிய முருகனைத் தாக்கியது கந்து வட்டி ரவுடிக் கும்பல். இதைத் தோழர்கள் சிலர் தலையிட்டு முறியடித்தனர். மறுநாள் அடியாட்களுடன் தோழர்களைத் தாக்க வந்த ரவுடிக் கும்பலை முறியடித்து, மக்கள் மத்தியில் கட்டி இழுத்துச் சென்று அம்பலப்படுத்தினர் பு.மா.இ.மு. தோழர்கள்.

இதைக் காணச் சகிக்காத காவல்துறை ஏவல் நாய்கள், பு.மா.இ.மு. தோழர்கள் 7 பேர், அச்சக உரிமையாளர்கள் சங்கச் செயலாளராக இருந்து தட்டிக் கேட்டமைச அச்சக உரிமையாளர் உட்பட 4 பேர், சரவணா அச்சகத்தைச் சேர்ந்த 2 பேர் என 13 பேர் மீது பொய் வழக்குப் போட்டு சிறையிலடைத்தது. இன்ஸ்பெக்டர் இராமன், டி.எஸ்.பி. சந்திரசேகர் இருவரும் கைதானவர்களின் சாதியைக் கூறி இழிவுப்படுத்திப் பேசினர்.

இவற்றை அம்பலப்படுத்தி பு.மா.இ.மு. சார்பில் சுவரொட்டி இயக்கம் எடுக்கப்பட்டது. ரவுடிகள் சாதிப் பெயரிலும் (வன்னியர்) பல கட்சிகள் பெயரிலும் பு.மா.இ.மு. பற்றி அவதூறு செய்து, சுவரொட்டிகளைத் தயாரித்து ஒட்டினர். எந்தக் கட்சியும் மறுப்பு தெரிவிக்கவில்லை. அவர்களுக்கு ஆதரவும் தரவில்லை, 12.03.96 அன்று கடையடைப்பு நடத்தப் போவதாக அறிவித்தனர், ரவுடிகள்.

இதை அம்பலப்படுத்திப் பிரசுரம் விநியோகிக்கப்பட்டது. அத்தோழர்களையும் கைது செய்து பொய் வழக்கு போட்டது போலீசு. காவல் நிலையத்தில் திரும்ப சாதிப் பெயரைச் சொல்லி இழிவு படுத்தினர். போலீசு நாய்களான இராமனும், சந்திரசேகரும் தவிர, அடித்ததில் ஒரு தோழருக்கு கை எலும்பு முறிவும், மற்றொருவருக்கு படுகாயமும் ஏற்பட்டது. இதன்பின் 16 பேர் நிபந்தனை பிணையில் விடுதலை ஆனார்கள். இருவர் பிணை மறுக்கப்பட்டு, சிறையில் உள்ளனர்.

கந்து வட்டிக் கொள்ளையர்களின் 12.03.96 கடையடைப்பு போராட்டம் மக்களின் எதிர்ப்பால் நடைபெறவில்லை. கந்துவட்டிக் கொள்ளையனுக்கு ஆதரவாக விருத்தாசல நகர பா.ம.க. வரிந்து கட்டிக் கொண்டு களத்தில் நிற்கிறது. பா.ம.க. கட்சித் திட்டம் 'கந்து வட்டியை ஒழிப்போம்' என்கிறது. இங்கோ கந்து வட்டிக் கொள்ளையனுக்கு அடியாள் வேலை பார்க்கிறது.

தமிழகம் முழுவதும் திடீர் பணக்கார அரசியல் ரவுடிகளுக்கு எதிராக இயக்கம் எடுத்தபோது, இப்பகுதியில் டி.எஸ்.பி.யின் லஞ்ச ஊழலை அம்பலப்படுத்திப் பேசியதால், டி.எஸ்.பி.யும் அரசியல் ரவுடி அதிமுக எம்.எல்.ஏ. ஆர்.டி. ரங்கநாதன் போன்றவர்களும் கந்து வட்டிக் கொள்ளையனுடன் மறைமுக கூட்டுச் சேர்ந்து பு.மா.இ.முவை முடக்கி விடலாம் என மனப்பால் குடிக்கின்றனர். சாதிவெறியுடன் பா.ம.கவும் இவர்களுடன் சேர்ந்து செயல்படுகிறது.

ஆனால் இக்கந்து வட்டிக் கும்பலால் பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமின்றி, விருத்தாசலம் பகுதியிலுள்ள வன்னிய மக்களும் பு.மா.இ.மு.வுடன் இணைந்து நியாயத்திற்கு போராடுகின்றனர்.

தகவல்: பு.மா.இ.மு., விருத்தாசலம்.



படிப்பகம்

# புதிய பொருளாதாரக் கொள்கை படுதோல்வி 3

நரசிம்மராவ் - மன்மோகன் சிங் அமலாக்கிய புதிய பொருளாதாரக் கொள்கையின் இரண்டு முக்கிய பகுதிகள் தனியார்மயமாக்கலும் தாராளமயமாக்கலும் ஆகும்.

அதாவது இந்தியப் பொருளாதாரத்தின் அடிப்படை அங்கமாக உள்ள அரசுத் துறை தொழில் மற்றும் வர்த்தக நிறுவனங்களைத் தனியாருக்குத் தாரை வார்ப்பது; ஏற்கனவே உள்ள தனியார் துறை தொழில் மற்றும் வர்த்தகத்தின் மீதுள்ள கட்டுப்பாடுகளை அகற்றி அவர்கள் எவ்விதத் தடையுமின்றி முதலீடுகள் செய்யவும் தொழில்கள் துவங்கி நடத்துவதற்கும் முழுமையான ஊக்கமும் ஆதரவும் தருவது - என்று சொல்லப்பட்டது.

அரசுத் துறை நிறுவனங்களைத் தனியாருக்குத் தாரை வார்க்கும் முடிவுக்கு தொழிலாளர்கள் மற்றும் இடதுசாரி அரசியல் இயக்கங்களிடம் இருந்து எதிர்ப்புக் கிளம்பியது. அதனால் நரசிம்மராவ் - மன்மோகன் சிங் கும்பல் தனது தனியார்மயமாக்கலுக்குப் புது விளக்கம் கொடுத்தது.

''பொதுத் துறைத் தொழில் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் அனைத்தையும் தனியாரிடம் ஒப்படைக்கும் நோக்கம் அரசுக்குக் கிடையாது. நலிவடைந்தவை மட்டுமே தனியாரிடம் ஒப்படைக்கப்படும். அவை அரசு நிதியை விழுங்கி ஏப்பம் விடும் வெள்ளை யானையாகி விட்டன. அவற்றில் தனியார் நிர்வாகத் திறனும் நவீனப்படுத்துவதற்கு மூலதனமும் தேவையாக உள்ளது. ஆனால் அரசிடம் போதிய நிதி கிடையாது. இப்படிப்பட்ட அரசுத் துறை நிறுவனங்கள் தவிர இலாபகரமாகவும் நிர்வாகத் திறனுடனும் இயங்குபவைகளை அப்படியே பாதுகாத்துப் பராமரிக்கப்படும்!'' என்று நரசிம்மராவ் - மன்மோகன் சிங் கும்பல் வாக்குறுதியளித்தது.

''தொழில் முனைவோர் முதலீடு செய்யவும் தொழில்கள் துவங்கவும் தற்போதுள்ள (லைசென்ஸ் - பர்மிட் - கோட்டா) உரிமம் - அனுமதி - ஒதுக்கீடு அமைப்புமுறை தடைக்கல்லாக உள்ளது. அவற்றை அகற்றுவதுதான் தாராளமயமாக்கலின் நோக்கம். இதனால் தனியார் துறையில் ஏராளமாக மூலதனத் திரட்சி நடக்கும். பல புதிய தொழில்கள் துவங்கப்படும்'' என்றும் அக்கும்பல் வாதிட்டது.

ஆனால் இந்தியப் பொருளாதாரம் இதுவரை காணாத அளவுக்கு பொருளாதாரக் கிரிமினல் குற்றங்களால் பகற்கொள்ளைகளைக் கண்டது. முக்கியமாக ஐந்து வகையிலான மோசடிகள் நிதி - மூலதனச் சந்தையில் ஆதிக்கத்துக்கு வந்தன.

முதலாவதாக, நல்ல இலாபம் தரக்கூடிய, சிறந்த உற்பத்தி மற்றும் நிர்வாகத் திறன் மிக்க அரசுத்துறை தொழில், வர்த்தக நிறுவனங்களின் பங்குகள் அடிமாட்டு விலைக்கு, முகம் தெரிய முதலீட்டாளர்களுக்கு இரகசியமாக விற்கப்பட்டு, பேரிழப்புகள் நேர்ந்தன.

இரண்டாவதாக, அரசுத் துறை தொழில் மற்றும் வர்த்தக நிறுவனங்களில் இருந்து கூடுதல் நிதி மூலதனம் விதிமுறைகளை மீறி அரசுடமை வங்கிகள் மூலமாகப் பங்குச் சந்தை தரகர்கள் நடத்தும் சூதாட்டதிற்கான பணயத் தொகையாகத் தரப்பட்டு, சாதாரண முதலீட்டாளர்களைக் கொள்ளையிட வழிவகுக்கப்பட்டது.

மூன்றாவதாக, அரசுடமை வங்கிகளின் நிதி ஈட்டுப் பத்திரங்களை கைமாற்றித் தருவதற்கான கழிவுத் தொகை என்கிற பெயரில் பல ஆயிரம் கோடி ரூபாய் பங்குச் சந்தை சூதாடிகளும் வங்கிகளின் உயர்மட்ட அதிகாரிகளும் கொள்ளையிட்டனர். அந்த வங்கிகளின் சேமிப்புத் தொகையும் பங்குச் சந்தைச் சூதாட்டத்திற்குத் தரப்பட்டது.

நான்காவதாக, தொழில்கள், வர்த்தகங்களில் நேரடியாக முதலீடு செய்து உற்பத்தி - விநியோகத்ததை விரிவுபடுத்துவதை விட, பங்குச் சந்தை நிர்வாகத் தரகுக் கம்பெனிகள் புற்றீசல்கள் போல் பெருகின. அவற்றில் பலவும், சாதாரண முதலீட்டாளர்களை ஏமாற்றி மோசடி செய்யும் போலிக் கம்பெனிகளாக இருந்தன. இதனால் தொழிலும் வர்த்தகமும் பெருகுவதற்குப் பதிலாக பங்குச் சந்தைத் தரகர்களின் கொள்ளைக்கே வழி பிறந்தது.

ஐந்தாவதாக, புதிய தொழில் முனைவு என்கிற பெயரில் பல போலியான தொழில் மற்றும் வர்த்தகக் கம்பெனிகள் தொடங்குவதாக அறிவித்து, ஏராளமாகப் பங்குகளைச் சந்தையில் புழங்கவிட்டு, மோசடிகள் செய்து கொள்ளையடிப்பது பெருகிவிட்டது. இதனால் சாதாரண முதலீட்டாளர்கள் புதிய பங்குகளை வாங்குவதற்கே அஞ்சும் நிலைமை ஏற்பட்டுள்ளது. பங்குச் சந்தையையே பல நாட்கள் மூடி வைக்கும்படியும், பங்குச் சந்தை பரிமாற்ற வாரியத்துக்கும் கம்பெனிகளுக்கும் முரண்பாடுகளும் மோதல்களும் வெடித்து அடிக்கடி நெருக்கடிகள் ஏற்படுவதும் நடக்கிறது.

☆ ☆ ☆

நமது நாட்டில் மொத்தம் 244 அரசுத் துறை தொழில் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் உள்ளன. கடந்த நாற்பதாண்டுகளில் 99,300 கோடி ரூபாய் அளவு இந்த நிறுவனங்களில் நேரடி முதலீடு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் அவற்றின் உண்மையான மதிப்பு இதைவிடப் பன்மடங்காகும். கட்டிடங்கள், தொழிற்சாலைகள், மின் நிலையங்கள், ஆலை இயந்திரங்கள் (மனித உழைப்புத் திறன், அனுபவம்) மற்றும் பல அடிப்படைக் கட்டுமானங்கள் என்று இப்படி மதிப்பிட முடியாதவை அடங்கியுள்ளன. பல நிறுவனங்களும் நமது நாட்டில் ஏகபோக நிலையும், சர்வதேசத் தரத்துக்குத் தொழில் நுட்பத்திறனும், பெருமளவு இலாபம் தரக்கூடியதாகவும் உள்ளன.






படிப்பகம்

www.padippakam.com

நரசிம்மராவ் - மன்மோகன் சிங் கும்பல் வாக்களித்தபடி நலிவடைந்த நிறுவனங்களை விட நல்ல, செழுமையான நிலையில் உள்ள அரசுத் தொழில் மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கான பங்குத் தொகைகளை நிர்ணயிப்பதற்கும், தனியாருக்கு பங்குகளை விற்பதற்கான முறைகளை வகுப்பதற்கும் திட்டக் கமிசன் உறுப்பினர் வி.கிருஷ்ணமூர்த்தி தலைமையில் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது.

இந்த கிருஷ்ணமூர்த்தி, நேரு - இந்திரா - ராஜீவ் பரம்பரையின் அரசியல் மற்றும் தொழில் தரகன். தகுதி எதுவுமின்றி பல அரசுத்துறை தொழில் நிறுவனங்களின் தலைவராக அரசு பதவிகளையும் அடைந்தவன். அந்நியக் கம்பெனிகளின் தரகனாகச் செயல்பட்டு, பல கோடி ரூபாய் ஊழல் செய்தவன். தனது மகன்களுடன் சேர்ந்து தொழில் கம்பெனிகள் துவங்கியதிலும், இலஞ்சம் வாங்கியதிலும் பிடிபட்டு, சிறையிலடைக்கப்பட்டு பிணையில் இருப்பவன். இருந்தாலும் இப்போதும் சோனியா, ராவ் ஆகியோரின் இரகசிய ஆலோசனைக் குழுக்களில் அங்கம் வகிப்பவன்.

அரசுத் துறைத் தொழில் மற்றும் வர்த்தக நிறுவனங்களின் உண்மையான மதிப்பைக் குறைத்து மதிப்பீடு செய்து, அடிமாட்டு விலை நிர்ணயம் செய்து, பங்குகளை வெளியிடுவது என்று கிருஷ்ணமூர்த்தி தலைமையிலான கமிட்டி முடிவு செய்தது. அதுவும் பங்கு மதிப்பு ஏறுமுகமாக உள்ள சமயத்தில் வெளியிடாமல் தாமதித்தது. நிறுவனத் தொழிலாளர்கள் அலுவலர்களுக்கு பங்குகளை விற்பதைவிட பங்கு சந்தைத் தரகர்கள் மூலம் ''வெளிச் சந்தை''யில் விற்பதற்கே அதீத முக்கியத்துவமளித்தது.

முதல் தவணையாக 31 நிறுவனங்களிலும், இரண்டாம் தவணையாக 17 நிறுவனங்களிலும், ஐந்து முதல் இருபது சதவீதம் வரை பங்குகளை விற்பனைக்கு வெளியிட்டது. மீதி 80 சதவீதம் வரை பங்குகள் அரசுத் துறையிலேயே இருப்பதால் அந்த நிறுவனங்கள் அரசின் கட்டுப்பாட்டில் இருந்து கைமாறித் தனியாரிடம் போகாது என்று கிருஷ்ணமூர்த்தி கமிட்டி வாதிட்டது. ஆனால் 5, 6 சதவீத பங்குகளை வைத்திருப்பவர்களே நிர்வாக ஆதிக்கம் பெற்றுவிட முடியும் என்று (கூட்டுப் பங்குக் கம்பெனிகளின் வரலாற்றை அறிந்தவர்) ஒப்புக் கொள்வர். மேலும் நரசிம்மராவ் - மன்மோகன் சிங் கும்பல் வாக்களித்தவாறு நலிவடைந்த நிறுவனங்களில் பங்குகளை விற்றுத் தனியார்மயமாக்குவதற்குப் பதில், அதி இலாபம் ஈட்டக் கூடியவற்றின் பங்குகளே விற்பனைக்கு விடப்பட்டன.

உலோகம் மற்றும் உலோகத் தாதுக் கழகம் (எம்.எம்.டி.சி.), பாரத மிகு மின் நிறுவனம், இந்திய எ∴கு அதிகாரம் (செயில்), அரசு வர்த்தகக் கழகம் (எஸ்.டி.சி), இந்திய மருத்துவக் கழகம் (ஐ.பி.சி.எல்,), ஆண்ட்ரு யூல், தேசிய அலுமினியக் கழகம் (நல்கோ) இந்துஸ்தான் ∴போட்டோ பிலிம் (எச்.பி.எ∴ப்.எம்.எல்.) கழகம் போன்றவற்றின் பங்குகள் முதல் தவணையாக வெளியிடப்பட்டன.

முதல் தவணையாக 3,930 இலட்சம் பங்குகள் ரூ. 10 வீதம் வெளியிடப்பட்டன. ஆனால் திறந்த சந்தையில் வெளியிடுவதற்கு பதில் ரூ. 2.5 கோடி மதிப்புடைய பங்குகளைக் கட்டுக்கட்டாக வாங்குபவர்களுக்கு மட்டுமே விற்க முடியும் என்று வரம்பு விதித்தது. அதையும் காதும் காதும் வைத்தாற்போல் இரகசியமாக சில பங்குச் சந்தைத் தரகுக் கம்பெனிகளுக்கே விற்றது. ஸ்டீவார்ட் அண்ட் கோ, மெக்கார்டிச் அண்ட் கோ, மற்றும் ஒய்.எஸ்.எம் பங்கு மற்றும் பத்திரங்கள் ஆகியவற்றுக்கு மட்டும் விற்க முடிவு செய்தனர். இந்தப் பங்குகள் அக்கம்பெனிகளுக்கு வரும் முன்னரே, 7 வங்கிகளில் அவற்றை முதலீடுசெய்து

> நேரடியாக உற்பத்தி-விநியோகத்தில் ஈடுபடுவதைவிட பங்குச் சந்தை தரகு வியாபாரம் பல மடங்கு இலாபம் தருவதால், அந்நிய முதலீடுகள் இச்சூதாட்டத்தில்தான் பெருமளவு கொட்டப்படுகின்றன.

அவை பணம் பார்த்து விட்டன; வங்கிகள், சிட்டி வங்கி, அமெரிக்கன் வங்கி போன்ற அந்நிய வங்கிகளுக்கும் பெயர் அறிவிக்கப்படாத முதலீட்டாளர்களுக்கும் விற்றுவிட்டன.

இதனால் அந்தத் தரகு கம்பெனிகளும், வங்கிகளும் அடிமாட்டு விலைக்கு பங்குகளை வாங்கி பெயர் அறிவிக்கப்படாத முதலீட்டாளர்களுக்கும் அந்நிய ஏகபோகங்களுக்கும் கமிசன் அடித்துப் பெரும் கொள்ளையடித்தனர். 2091 கோடி ரூபாய் திரட்டியிருக்க வேண்டிய பங்குகள் மூலம் 612 கோடி ரூபாய்தான் திரட்டப்பட்டது.

இரண்டாவது தவணையாக இரண்டு பெட்ரோலிய எண்ணெய் நிறுவனங்கள், ஒரு இரும்பு - எ∴கு நிறுவனம், இரும்பு அல்லாத உலோக உற்பத்தி நிறுவனங்கள் இரண்டு, ஒரு நிலக்கரி சுரங்கம் மற்றும் மின் உற்பத்தி நிறுவனம், ஒரு உர ஆலை நிறுவனம் மற்றும் பல்வகை இயந்திர உற்பத்தி நிறுவனம் ஆகியவற்றின் பங்குகள் அதேபோல அடி மாட்டு விலைக்கு விற்கப்பட்டன.

☆ ☆ ☆

மூலதனத் திரட்சிக்காக தனியாருக்குப் பங்குகளை விற்ற இந்த நடவடிக்கை அதன் நோக்கத்தை அடையவில்லை. இலஞ்ச ஊழல் பெருச்சாளிகள் தின்று கொழுக்கவே வழி வகுக்கப்பட்டது. ஒரு புறம் மூலதனப் பற்றாக்குறையை ஈடு கட்ட பங்குகள் விற்கப்பட்ட அதே சமயம், பல அரசு நிறுவனங்களில் பயன்படுத்தப்படாமல் தேங்கியிருந்த மூலதனம் தரகர்களின் பங்குச் சந்தைச் சூதாட்டத்துக்காகத் தாரை வார்க்கப்பட்டது.

அரசுத் துறைத் தொழில் மற்றும் வர்த்தக நிறுவனங்களிடம் உள்ள செலவிடப்படாத உபரி நிதியை ஒரு குறுகிய காலத்துக்கு இலாபம் ஈட்டும் வகையில் முதலீடு செய்வதற்கு அனுமதி உண்டு. ஆனால் அவை தனியார் துறையில் முதலீடு செய்யக் கூடாது. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் குறிப்பிட்ட விதிமுறைகளுக்குட்பட்டே முதலீடு செய்யவேண்டும்.

ஆனால் இந்த விதிமுறைகளை மீறி பங்குச் சந்தைத் தரகர்களின் சூதாட்டத்திற்குப் பயன்படும் வகையிலும், அந்நிய வங்கிகள் மூலமாகவும் முதலீடு செய்யப்பட்டன. இதனால் சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்களும், உயர் நிர்வாகிகளும் பலகோடி ரூபாய் கொள்ளையடித்தனர்.

வெளிநாடுகளில் இருந்து மலிவான விலைக்கு பெட்ரோலிய எண்ணெய் இறக்குமதி செய்து கொள்ளை விலை வைத்து இலாபமடிக்கும் மத்திய அரசின் நிறுவனம், எண்ணெய்த் தொழில் அபிவிருத்தி வாரியம். இத்துறையின் அமைச்சர் சங்கரானந்த். இவர்தான் போ∴பார்ஸ் பீரங்கி ஊழல் விசாரிக்க அமைக்கப்பட்ட நாடாளுமன்றக் கூட்டுக் குழுவின் தலைவராக இருந்து, ராஜீவ் காந்தி முதலிய ஊழல் பேர்வழிகளைத் தப்பிக்க விட்டவர்.

இவர் அதிகாரிகளுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு, பெட்ரோலிய எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகத்திடம் இருந்த பல நூறு கோடி உபரி நிதியை கனரா வங்கி, சிண்டிகேட் வங்கி, அலகாபாத் வங்கி மற்றும் கார்ப்பரேஷன் வங்கி ஆகியவை நடத்தும் பங்கு நிர்வாகப் பிரிவுகளில் முதலீடு செய்தார். ஒரு குறுகிய காலத்தில் அவை முதலீடு செய்து இலாப மீட்டித் தரும் என்ற காரணம் காட்டப்பட்டது. ஆனால் இப்படி முதலீடு செய்ததன் நோக்கம் வேறானதாக இருந்தது. முன்னாள் கனரா வங்கி தலைவராக இருந்த ஊழல் பெருச்சாளி ரத்னாகர் அரசியல்வாதிகள் மற்றும் அரசு அதிகாரிகளுடன் இரகசியக் கூட்டுச் சேர்ந்து நடத்தி வந்த ∴பேர்குரோத் பங்கு நிறுவனம்; பங்குச் சந்தை தரகர்கள் நடத்தி வந்த கராத்

www.padippakam.com

வங்கி ஆகிய இரண்டுக்கும் அந்த நிதி முழுவதும் திருப்பிவிடப்பட்டது. அதை வைத்து அவர்கள் பங்குச் சந்தையில் சூதாடினர். இதன் மூலம் கிடைத்த கொள்ளையை மந்திரி முதல் பங்குச் சந்தைத் தரகர்கள் வரை கூறுபோட்டுக் கொண்டனர். சாதாரண முதலீட்டாளர்களுக்கு நாமம் சாத்தினர்.

இதேபோலத்தான் ஏர்- இந்தியா, இந்தியன் ஏர்லைன்ஸ் மற்றும் வாயுதூத் ஆகிய விமானக் கம்பெனிகளிடம் இருந்த உபரி நிதியும், வீட்டு வசதி வங்கி, விவசாய மற்றும் உர உற்பத்தி நிறுவனம் ஆகியவற்றின் உபரிநிதியும் தரகர்கள் மூலம் பங்குச் சந்தை சூதாட்டத்துக்கு திருப்பி விடப்பட்டன.

இப்படிப் பங்குச் சந்தையில் விடப்பட்ட அரசு நிறுவன உபரி நிதி மூலம் கணிசமான இலாபம் ஈட்டப்பட்டாலும், இந்த நிதி சாதாரண முதலீட்டாளர்களைச் சூதாட்டம் மூலம் கொள்ளையிடவே பயன்பட்டது. தொடர்ந்து சுழற்சியில் இருந்த மூலதனம் பற்றிய திடீர் சோதனையின் போது, வங்கிக்கோ, அரசு நிறுவனத்துக்கோ நிதி திருப்பப்படாமல் ஏராளமாக நட்டமானது.

☆ ☆ ☆

மேற்கண்ட இரண்டு வகை மோசடிகளை விடவும் பெரிய ஊழலாக அரசு வங்கிகள் - பங்குச் சந்தை தரகர்கள் கூட்டுச் சேர்ந்து நடத்திய கடன் பத்திர மோசடி வரலாறு காணாதது. இது எவ்வளவு காலமாக நடந்து வருகிறது, எவ்வளவு தொகை சம்பந்தப்பட்டது, இதனால் அரசுத்துறை வங்கிகளுக்கும் சாதாரண முதலீட்டாளர்களுக்கும் எவ்வளவு நட்டம் ஏற்பட்டது என்பன இன்னமும் நிர்ணயிக்கப்பட முடியாத மர்மமாகவே இருக்கிறது.

அரசுடைமை வங்கிகளின் உயர் அதிகாரிகள், பங்குச் சந்தை தரகர்கள் மட்டுமல்ல, நிதி மந்திரிகளும் பிரதம மந்திரி, ரிசர்வ் வங்கி ஆளுநர் வரை பல பெரும் புள்ளிகள் இந்த மோசடியில் சம்பந்தப்பட்டுள்ளனர். இந்த மோசடி அம்பலமாகி நான்காண்டுகளாகியும் இதுவரை யாருமே தண்டிக்கப்படவில்லை. வழக்குகளும் ஆமை வேகத்திலேயே நகர்த்தப்பட்டு வருகின்றன.

எந்தவொரு வங்கியும் அங்கீகாரம் பெற, அதன் பற்று - வரவுக்கு ஏற்ப குறிப்பிட்ட அளவு ரிசர்வ் வங்கியில் வைப்புத் தொகை போட வேண்டும். அந்தத் தொகைக்கு ஈடாக ரிசர்வ் வங்கி கடன் ஈட்டுப் பத்திரங்கள் வழங்கும். அந்தப் பத்திரங்களை வைத்திருக்கும் வங்கிகள் தமது நடப்புத் தேவையை ஒட்டி வேறொரு வங்கியில் ஈடு வைத்து நிதி பெற்றுக் கொள்ளலாம். எவ்வளவு தொகை, எவ்வளவு காலத்துக்கு அப்படிப் பெறப்படுகிறது என்பதற்கேற்ப வட்டி கட்ட வேண்டும். ஆனால் வங்கிக்கு வங்கி நேரடியாக ஈடு வைப்பதில்லை. அதற்கான தரகர்களுக்கு, கழிவுத் தொகை கொடுத்து அவர்கள் மூலமே நடக்கிறது.

இந்த முறையைப் பயன்படுத்திக் கொண்டு அரசுடமை வங்கிகளும், தனியார் வங்கிகளும் தங்களுடைய வைப்பு நிதியை விடப் பல மடங்கு போலியான கடன் ஈட்டுப் பத்திரங்களை அச்சிட்டு, (போர்ஜரி) மாற்று வங்கிகளில் ஈடு வைத்துப் பலகோடி ரூபாய் பெற்றன. அந்தத் தொகையையும் தரகர்கள் பங்குச் சந்தையில் சூதாடுவதற்குத் தரப்பட்டது. இதன் மூலம் கடன் ஈட்டுப் பத்திரங்களை ஈடு வைப்பதற்கான கழிவுத் தொகை மற்றும் பங்குச்சந்தை சூதாட்டம் மூலம் அடிக்கும் தொகை என்று இரண்டு வகை கொள்ளையை மேற்படி பொருளாதாரக் கிரிமினல்கள் பங்கு போட்டுக் கொண்டனர்.

மதுரை வங்கி, கராத் வங்கி, நெடுங்காடி வங்கி, பம்பாய் பெருநகரக் கூட்டுறவு வங்கி ஆகிய தனியார் வங்கிகள் பலகோடி ரூபாய்க்கு போலி கடன் ஈட்டுப் பத்திரங்களைத் தயாரித்து மோசடி செய்தன. கனரா வங்கி, ஆந்திரா வங்கி, வீட்டு வசதி வங்கி, யூகோ வங்கி, சிண்டிகேட் வங்கி, ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா அரசுடைமை வங்கிகளும் பல ஆயிரம் கோடி ரூபாய் அளவு மோசடி செய்தன. ஸ்டான்டர்ட் சார்ட்டட் வங்கி, அமெரிக்க வங்கி ஆகிய அந்நிய வங்கிகள் பலநூறு கோடி ரூபாய் சம்பாதித்தன. இதனால் ரிசர்வ் வங்கி மதிப்பீட்டின்படி 50,000 கோடி ரூபாய்க்கு மேல் அரசுடமை வங்கிகள் நட்டமடைந்தன.




பெங்களூரில் உள்ள ரத்னாகர் குடும்பத்தின் ஃபேர் குரோத் பங்குக் கம்பெனி, பம்பாயில் உள்ள அர்சத் மேத்தாவின் குரோமோர் பங்குக் கம்பெனி, பம்பாயின் பூபேன் - இதேன் தலால், நரோத்தம் போன்றவர்கள் நடத்திய தரகுத் தொழில் கம்பெனிகள் இந்தமோசடியில் நேரடியாக ஈடுபட்டன. இவர்கள் கொள்ளையிட்ட தொகை ஹவாலா மூலம் வெளிநாடுகளுக்குக் கடத்தப்பட்டு விட்டன.

☆ ☆ ☆

தொழில்கள் மற்றும் வர்த்தகங்களில் நேரடியாக முதலீடு செய்து உற்பத்தி, விநியோகத்தில் ஈடுபடுவதை விட பங்குச் சந்தை சூதாட்டத்தில் ஏராளமாகக் கொள்ளையிட முடியும். இதைப் புரிந்து கொண்டு கடந்த சில ஆண்டுகளில் பல புதிய பங்குச் சந்தை நிர்வாகத் தரகுக் கம்பெனிகள் புற்றீசல்கள் போலத் தோன்றின. கந்து வட்டித் தொழிலைப் போல இது பெருகுகிறது. திடீர்ப் பணக்கார அரசியல் ரௌடிகளும், இலஞ்ச - ஊழல் மூலம் கோடிகோடியாக சம்பாதித்த அரசு அதிகாரிகள், அரசியல்வாதிகளும் தமது பினாமிகள் மூலம் இப்படிப் பல கம்பெனிகளைத் துவக்கினர். இந்தக் கம்பெனிகளே தமது பங்கு பத்திரங்களைப் புழக்கத்தில் விட்டுக் கொள்ளையடிக்கின்றன. இதுதவிர பிற கம்பெனிகளின் பங்கு பத்திரங்களை வாங்கி - விற்கும் சூதாட்டத்திலும் ஈடுபடுகின்றன.

நேரடியாக உற்பத்தி விநியோகத்தில் ஈடுபடுவதை விட பங்குச் சந்தை தரகு மற்றும் சூதாட்டம் பல மடங்கு இலாபம் தருவதால் அந்நிய முதலீடுகளும் இதற்காகத்தான் பெருமளவு கொட்டப்படுகிறது. ஆனால் இத்தகைய கம்பெனிகள் பலவும் மோசடியானவை. நடுத்தர மற்றும் உயர் மட்ட நடுத்தர மக்களைப் பெருமளவில் ஆசை காட்டி மோசம் செய்வன. இதனால் ஏராளமான மூலதனம், வேலை வாய்ப்பைப் பெருக்குவதற்கும், நுகர் பொருட்களைக் கூட உற்பத்தி செய்து விற்பதற்கும் பயன்படுவதை விட ஒட்டுண்ணிகளைப் போல இரத்தம் குடிப்பதற்கே பயன்படுகிறது.

பத்திரிகைகளிலோ, பெருநகர பெரிய பலகை விளம்பரங்களிலோ பெரும்பாலான இடத்தை இப்படிப்பட்ட கம்பெனிகளே பிடித்துக் கொள்கின்றன. இந்தக் கம்பெனிகள் இன்னொரு வகை மோசடிக்கும் ஊடகமாக இருந்து செயல்படுகின்றன. அதாவது உற்பத்தி மற்றும் விநியோகத்தில் நேரடியாக ஈடுபட்டுள்ள பல கூட்டுப் பங்குக் கம்பெனிகளும் புதிதாகத் தொடங்கப்படும் கம்பெனிகளும் பல ஆயிரம் கோடி ரூபாய்களுக்குப் புதிது புதிதாக பங்கு பத்திரங்களை புழக்கத்தில் விடுகின்றன. உண்மையில் அவை விரிவாக்கத்திலோ உற்பத்தி விநியோக நடவடிக்கைகளிலோ ஈடுபடுவதில்லை. சாதாரண முதலீட்டாளர்களைக் கொள்ளையடிக்கும் நோக்கத்துடனே பங்கு பத்திரங்களைப் புழக்கத்தில் விடுகின்றன. பங்குச் சந்தை தரகர்களைப் பயன்படுத்தி செயற்கையாகவே பங்குப் பத்திரங்களின் மதிப்பை ஏற்றி விடுவது அல்லது செயற்கையாக வீழ்ச்சியடையச் செய்து கணிசமான பங்குகளைத் தாமே வாங்கி, விற்று மொத்தத்தில் தனது ஆளுமையை நிலை நிறுத்திக் கொள்கின்றனர்.

தொடரும்


படிப்பகம்

www.padippakam.com

# காஷ்மீர்:
# அரசு பயங்கரவாதத்தை மறைக்க தேர்தல் கோவணம்!

காஷ்மீர் பள்ளத்தாக்கில் அமைதியைத் திரும்ப ஏற்படுத்துவதற்காகப் பேச்சு வார்த்தை நடத்துவதாகவும் ஜனநாயகத்தை நிலை நாட்ட தேர்தலை நடத்தப் போவதாகவும் பசப்பி வருகிறது பாசிச ராவ் கும்பல். மறுபுறமோ, தங்களின் இம்மோசடி நாடகத்தைத் தடையின்றி அரங்கேற்ற முன்னணிப் போராளிகளையும், அரசு பயங்கரவாதிகளின் அட்டூழியங்களை அம்பலப்படுத்துவோரையும் பகிரங்கமாகவே குறிவைத்துத் தாக்கி அழிக்கத் தொடங்கிவிட்டது. அது. ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி (ஜ.கா.வி.மு.) - அமானுல்லா கான் பிரிவைச் சேர்ந்த 24 போராளிகள் ஸ்ரீநகரில் ஹஸ்ரத்பால் மசூதி அருகே மார்ச் 30-ந் தேதியன்று மோதல் என்ற பெயரில் கொல்லப்பட்டனர். இதற்கு மூன்று நாட்கள் முன்பாக மனித உரிமைகள் அமைப்பைச் சேர்ந்த ஜலில் ஆந்த்ரபியின் சடலம் ஜீலம் நதியில் கண்டெடுக்கப்பட்டது.

மார்ச் 15-ல் மைய அரசு காஷ்மீரின் முன்னாள் போராளிகள் சிலருடன் பேச்சு வார்த்தை நடத்தத் தொடங்கியது. மார்ச் 19-ந் தேதி ஜம்மு - காஷ்மீரில் உள்ள பாராளுமன்றத் தொகுதிகளுக்குத் தேர்தல் நடத்துவதற்கான அறிவிப்பும் வெளியிடப்பட்டது. மைய அரசின் இந்நடவடிக்கைகள் பள்ளத்தாக்குப் பகுதியில் கொந்தளிப்பான சூழலை ஏற்படுத்தின. இதே பொழுதில், ஹஸ்ரத்பால் மசூதியில் இருந்து ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணி - அமானுல்லாகான் பிரிவைச் சேர்ந்த போராளிகளை வெளியேற்றுவதற்காக, இந்திய அரசின் கைக்கூலி அமைப்பான இக்வான் அல் முஸ்லிமுனைக் கொண்டு செய்து வந்த முயற்சிகள் தோல்வியடைந்தன. இதனால் மார்ச் 24 அன்று ஜ.கா.வி.மு. போராளிகளுக்கும், சிறப்பு அதிரடிப் படையினர்க்கும் நேரடி மோதல் ஏற்பட்டது. இம்மோதலில் அக்குழுவின் இராணுவத் தளபதிகள் பஷரத் ரஜா, சல்மான் யாவர் இருவர் உள்ளிட்டு எட்டு போராளிகள் மாண்டனர். ஆனாலும் இக்குழு ஹஸ்ரத்பால் மசூதியைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதில் வெற்றி பெற்றது.

இதையடுத்து எல்லை பாதுகாப்பு படையினரைக் கொண்டு வந்து குவித்து, மசூதி முற்றுகையிடப்பட்டது. ஜ.கா.வி.மு. போராளிகள், இரு நாட்களுக்குள் சரணடைய வேண்டும் என எச்சரிக்கப்பட்டனர். முற்றுகையை எதிர்த்து தேசிய மாநாட்டு கட்சி மற்றும் ஜ.கா.வி.மு. அமைப்பினர் நடத்திய ஆர்ப்பாட்டங்கள் கண்ணீர் புகை குண்டு வீசி கலைக்கப்பட்டன. ஜ.கா.வி.மு. பத்திரிகையாளர்கள் முன்னிலையில் அரசுடன் பேச்சு வார்த்தை நடத்த முன் வந்தது. இரு நாட்கள் நடந்த பேச்சு வார்த்தையில் காஷ்மீரைச் சேர்ந்த ஐந்து முக்கிய பிரமுகர்கள் இடைநிலையாளர்களாகக் கலந்து கொண்டனர்.

இப்பேச்சுவார்த்தையின் முடிவில், ''போராளிகளைத் தங்கள் ஆயுதங்களுடன் மசூதியில் இருந்து வெளியேற அனுமதிப்பது; மசூதியை முற்றுகையிட்டுள்ள துணை இராணுவப் படைகளை விலக்கிக் கொள்வது'' என ஒப்பந்தம் செய்து கொள்ளப் பட்டதாக அறிவித்தது, ஜ.கா.வி.மு. ஆனால் இந்திய அரசோ இந்த ஒப்பந்தங்கள் குறித்து வாயே திறக்கவில்லை. எனினும், மார்ச் 26-ந் தேதி இரவு 17 போராளிகள் தங்கள் ஆயுதங்களுடன் மசூதியில் இருந்து வெளியேறி, அம்மசூதிக்கு அருகிலுள்ள தங்கள் இயக்க அலுவலகத்தில் தஞ்சமடைந்தனர்.

மறுநாள் மாநில கவர்னர் கிருஷ்ணா ராவ் மசூதியைச் சுற்றி பார்த்த பின்னர், போராளிகளை அழித்தொழிப்பதற்கான சதிகளில் இறங்கினர் அரசு பயங்கரவாதிகள். ஹஸ்ரத்பால் மசூதியைப் போராளிக் குழுக்கள் தங்கள் போராட்டக் களமாக மாற்றி வருவதை விரும்பாத அப்பகுதி மக்களின் உணர்வினைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ள முயன்றனர். மசூதிக்குச் சேதமின்றி போராளிகளை அழித்தொழிப்பதற்காக, போராளிகள் அலுவலகத்திற்கான மின்சார மற்றும் குடிநீர் இணைப்புகள் துண்டிக்கப்பட்டன. எல்லை பாதுகாப்பு படை மற்றும் மத்திய ரிசர்வ் போலீசு படையைக் கொண்டு அலுவலகம் முற்றுகையிடப்பட்டது.

மாநில நிர்வாகம் ஒப்பந்த விதிகளை மீறுவதாகக் குற்றஞ் சுமத்திய ஜ.கா.வி.மு. போராளிகள், ''மசூதியினுள் தொழுகை நடத்த வேண்டாம்''

## மனித உரிமை செயல் வீரர் படுகொலை

ஜலில் ஆந்த்ரபி - ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் இயங்கிவரும் மனித உரிமைகள் அமைப்பின் செயல் வீரர். ஹுரியத் கூட்டமைப்போடு இணைந்து செயல்படும் இவர், ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணியின் ஆதரவாளர். இவர் தொடுத்த வழக்குகளின் அடிப்படையிலேயே, ''கைது செய்யப்பட்ட போராளிகளை ஜம்மு - காஷ்மீர் மாநிலத்திற்கு வெளியே கொண்டு செல்லக் கூடாது; மருத்துவ, போலீசு, நீதித்துறை அதிகாரிகள் முறையாக சிறைச்சாலைகளுக்கும், தடுப்புக் காவல் முகாம்களுக்கும் சென்று கைதிகளைப் பார்வையிட வேண்டும்'' என உத்தரவிட்டது மாநில உயர்நீதி மன்றம்.


ஜலில் ஆந்த்ரபி

மார்ச் 18-ல் ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் மாநாட்டிற்கு காஷ்மீர் மாநிலப் பிரதிநிதியாகச் செல்லவிருந்தார், இவர். இதற்குப் பத்து நாட்களுக்கு முன்பாகத் தனது மனைவி ரிபத் ஆந்தரபியுடன் காரில் நீதிமன்றத்துக்குச் சென்று கொண்டிருந்த இவரை வழிமறித்து, ஆயுதமுனையில் கடத்திச் சென்றனர், தேசிய துப்பாக்கி படைப் பிரிவினர். இது குறித்து இவரது மனைவி உடனடியாகப் போலீசிடம் புகார் செய்தார். வழக்கறிஞர்கள் சங்கம், ஜலில் ஆந்தரபியை நீதிமன்றத்தில் ஒப்படைக்கக் கோரி, ''ஹேபியஸ் கார்பியஸ்'' மனு தாக்கல் செய்தது.

ஆனால் நீதிமன்றத்தில் துணை இராணுவப் படையினர் தாங்கள் ஆந்த்ரபியைக் கடத்திச் செல்லவில்லை எனச் சாதித்துத் தப்பிவிட்டனர். நீதிமன்றம் ஆந்த்ரபி 'காணாமல் போனது' குறித்து விசாரிக்க கமிட்டியொன்றை நியமித்தது. அக்கமிட்டி அரசு பயங்கரவாதிகளுக்கு எதிராக ஒரு துரும்பைக் கூட அசைக்கவில்லை.

இந்நிலையில் மார்ச் 28-ந் தேதி ஜீலம் நதியில் கைகள் பின்புறம் கட்டப்பட்டு - முகம் சிதைக்கப்பட்ட நிலையில் ஆந்த்ரபியின் சடலம் மிதந்து வந்தது. இக் கோரமான படுகொலையைக் கண்டித்து, அன்று ஸ்ரீநகரில் கடையடைப்பு போராட்டம் நடைபெற்றது. அவரது இறுதி ஊர்வலத்தன்று 144 தடையுத்தரவை விதித்தது, மாநில நிர்வாகம். ஆனாலும் தடையை மீறி ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டனர்; சவ ஊர்வலத்தைக் கண்டு வீட்டை விட்டு வெளி வந்த பெண்கள் இந்திய அரசினை எதிர்த்துக் கோஷமிட்டனர். ''கைக்கூலிகளைக் கொண்டு காஷ்மீரைச் சேர்ந்த அறிவு ஜீவிகளை இந்திய அரசு கொன்றொழித்து வருவதாக''த் தனது இரங்கல் உரையில் குற்றஞ் சுமத்தினார், ஜ.கா.வி.மு. தலைவர் ஜாவேத் மீர்.


படிப்பகம்

www.padippakam.com



மோதல் என்ற பெயரில் சுட்டுக் கொல்லப்பட்ட ஜ.கா.வி.மு. போராளிகள்

எனக் கோரிக்கை விடுத்தனர். பேச்சு வார்த்தையில் கலந்து கொண்ட, காஷ்மீரில் மசூதிகளைப் பராமரித்து வரும் முஸ்லீம் ஆகாப் டிரஸ்டும் போராளிகளின் கோரிக்கைக்கு ஆதரவளித்தது.

ஆனால் அரசு பயங்கரவாதிகளோ, "தாங்கள் எந்தவிதமான ஒப்பந்தமும் செய்து கொள்ளவில்லை; மசூதியில் இருந்து வெளியேறிய தீவிரவாதிகளை வீட்டுக் காவலில் வைத்திருப்பதாக"க் கூறித் தங்களின் நயவஞ்சகத்தை வெளிக் காட்டிக் கொண்டனர். மேலும், "தீவிரவாதிகள் மசூதியில் மீண்டும் நுழைய முயலுவதாகவும், அம்மசூதியிலுள்ள உள்ள புனித முடியை சேதப்படுத்த முயற்சிப்பதாகவும்" கட்டுக் கதைகளை அவிழ்த்து விட்டனர்.

மார்ச் 30-ந் தேதி அதிகாலையில், போராளிகளை உடனடியாகச் சரணடையக் கோரி ஐந்து நிமிட அவகாசம் தரப் பட்டது. அதன் பின்னர் எதிரியின் கோட்டையினைத் தகர்ப்பதைப் போல, சிறு பீரங்கி குண்டுகளை வீசி போராளிகள் தங்கியிருந்த அலுவலகத்தைத் தரைமட்டமாக்கினர், அரசு பயங்கரவாதிகள். இத் தாக்குதலில் இறந்து போன 24 போராளிகளில் பலரின் சடலங்கள் அடையாளம் காண முடியாதவாறு, தீயில் எரிந்து கருகிப் போயின. இம் மோதலில், அவ்வமைப்பின் தலைவரான ஷாப்பிர் சித்திக்கும் மாண்டு போனார்.

முதலாளித்துவ பத்திரிகைகள்கூட இப்படுபாதகக் கொலைச் செயலை நியாயப்படுத்தவில்லை. "மசூதியை விட்டு அமைதியாக வெளியேறிய போராளிகள் மீது, படைபலத்தோடு தாக்குதல் நடத்த வேண்டிய அவசியமென்ன?" என்ற வினாவை எழுப்பியுள்ளன, அவை. இதற்குப் பதில் அளிக்க வக்கற்ற அரசு பயங்கரவாதிகள், ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணி - அமானுல்லா கான் பிரிவின் உயர் மட்டத் தலைமையை முற்றிலும் அழித்தொழித்து விட்டதாகக் கொக்கரித்து வருகின்றனர். ஆனால் காஷ்மீர் மக்களோ தியாகிகளாய் மறைந்து போன அப்போராளிகளின் நினைவாகத் தொடர்ந்து நான்கு நாட்கள் பள்ளத்தாக்கு முழுவதும் கடையடைப்பு போராட்டம் நடத்தி, பாசிசக் கும்பலின் முகத்தில் கரி பூசினர்.

● செல்வம்

## இந்து மதவெறிக் கும்பலின் ரௌடித்தனம்

ஹூரியத் கூட்டமைப்பின் தலைவர்களுள் ஒருவரான ஷாபிர் ஷா, கடந்த ஏப்ரல் முதல் வாரம் டெல்லிப் பல்கலைக்கழகத்தில் நடந்த காஷ்மீர் பற்றிய கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசினார். அவர் பேசிக் கொண்டிருந்த பொழுதே, ஊளையிடத் தொடங்கிய இந்து வெறி மாணவர் பட்டாளம் (ஏ.பி.வி.பி.) ஷாபிர் ஷாவையும், பிறரையும் மேடையேறித் தாக்கவும் முயற்சித்தது. இதனால் கருத்தரங்கைத் தொடர்ந்து நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. இதற்குச் சில நாட்கள் முன்னர் தான், டெல்லியில் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் நடந்த, "காஷ்மீரில் இருந்து இராணுவத்தை வெளியேற்று" என்ற கருத்தரங்கையும், இக் கும்பலின் வன்செயலின் காரணமாக நிறுத்த வேண்டியதாயிற்று. "இடதுசாரி மாணவர்களின் இவைபோன்ற, இந்தியாவுக்கு எதிரான கருத்தரங்குகள் அனைத்தையுமே தடுத்து நிறுத்துவோம்" எனக் கொக்கரித்து வருகிறது அப்பாசிசக் குண்டர் படை.

2-ம் பக்கத் தொடர்ச்சி

துக் கொண்டு புரசைவாக்கம், டவுட்டன், சென்ட்ரல், அண்ணா சாலை ஆகிய இடங்களில் மே தினப் பிரச்சாரம் செய்தனர். தேர்தல் ஆணையம் மே தின ஊர்வலத்திற்குத் தடை விதித்திருப்பதைக் கண்டித்து ஆர்ப்பாட்ட இயக்கமாக இதனை எடுத்துச் சென்றனர்.

● திருச்சி தாராநல்லூர் பகுதியில் 14.4.96-அன்று முதலில் நுழைந்த தி.மு.க. வேட்பாளர் பரணி குமாரை, பு.மா.இ.மு. அமைப்பினர் வழிமறித்துக் கேள்விகள் எழுப்பினர். திக்குமுக்காடிய பரணி வந்த வழி திரும்பிச் சென்றார். உள்ளூர் சர்வகட்சி எடுபிடிகள் காந்தி மார்க்கெட் காவல் நிலையத்தில் தோழர்கள் மீது பொய்ப்புகார் கொடுத்தனர். போலீசும் குமார், சுப்பிரமணி, ஜெகன் என்ற மூன்று தோழர்களைக் குற்றவியல் சட்டம் 147,341, 506 பிரிவுகளின் கீழ் பொய் வழக்குப் போட்டுக் கைது செய்து சிறையிலடைத்தது. இப்பகுதியில் 19.4.96 அன்று திட்டமிட்டபடி பொதுக்கூட்டம் சிறப்பாக நடைபெற்றது.

22.4.96 அன்று மந்திரி கு.ப.கிருஷ்ணன் வந்த போது, பகுதி பு.மா.இ.மு. தோழர்கள் மக்களைத் திரட்டி, மறித்தனர். அ.தி.மு.க.வினரும் போலீசும் 'மந்திரியைத் தாக்கி விடாதீர்கள்' எனக் கெஞ்சிக் கூத்தாடி தோழர்கள் - பொது மக்களிடமிருந்து மந்திரியை மீட்டுச் சென்றனர்.

● விழுப்புரத்தில் புதிய ஜனநாயகம் வாசகர் வட்டம் சார்பில் 16-4-96 அன்று எழுச்சிமிகு மாபெரும் தேர்தல் புறக்கணிப்புப் பொதுக்கூட்டம் நடந்தது. 2000 பேர் கடைசி வரை கலையாமலிருந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ஜெயகாந்த் சிங், நாராயணன் பேசிய பின், தோழர் காளியப்பன் சிறப்புரையாற்றினார். எழுச்சிமிகு கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

எஸ்.எஸ். பன்னீர் செல்வம், புஷ்பராஜ், மின்னல் ராஜா ஆகிய திடீர்ப் பணக்கார அரசியல் ரவுடிகள் முதலில் நமது தோழர்களைத் தாக்கி, பின் நமது இயக்கத்திற்குப் பணிந்து, நடந்த சம்பவத்திற்கு மன்னிப்புக் கடிதம் எழுதித் தந்ததைத் தோழர்கள் பொதுக்கூட்டத்தில் விளக்கிப் பேசினர்.

19.4.96-இல் கோவையிலும், 23.04.96 அன்று திருப்புவனத்திலும் தேர்தல் புறக்கணிப்புப் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன. கோவை, திருச்சி, தருமபுரி, பெண்ணாகரம், நாமக்கல் எனப்பல ஊர்களில் நடந்த பொதுக்கூட்டங்களுக்கு நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்த பின்தான் போலீசு அனுமதி வழங்கியது. இந்திய 'சனநாயகத்தின்' யோக்கியதை இதுதான்!



படிப்பகம்

www.padippakam.com



## ஒழுக்கமும் கட்டுப்பாடும் கொண்டதா இந்திய இராணுவம்?

கடந்த மார்ச் மாதம் 23-ந் தேதி நள்ளிரவில் மகாராஷ்டிரா மாநிலம் தபோடி நகரில் டென்னிஸ் தெருவிலுள்ள விடுதிக்கு 12 இளம் இராணுவ அதிகாரிகள் மது அருந்த வந்தனர். விடுதியை மூட வேண்டிய நேரம் நெருங்கிவிட்ட காரணத்தால், நிர்வாகிகள் அவர்களை விடுதியினுள் நுழைய அனுமதிக்கவில்லை. "இராணுவப் பொறியியல் கல்லூரியில் பயிற்சி பெறும் இராணுவ அதிகாரிகள்" எனத் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டு, நிர்வாகிகளை மிரட்டினர் அவ்வீரர்கள். ஆனாலும் விடுதி நிர்வாகிகள் அச்சுறுத்தல்களினால் மிரண்டு விடாது, அவர்களை வலுக்கட்டாயமாகத் திருப்பி அனுப்பி விட்டனர்.

தங்களை அவமதித்துவிட்டதாகக் கருதிய அக்கும்பலைச் சேர்ந்த ஐந்து வீரர்கள், மறுநாள் அதிகாலையில் பெட்ரோல் குண்டுகள், ஹாக்கி மட்டைகள், இரும்புக் கம்பிகளோடு வந்து அவ்விடுதி இருந்த வணிக வளாகத்தைத் தாக்கினர். கீழ்த்தளப் பகுதியில் இருந்த கடைகளின் மீது பெட்ரோல் குண்டுகள் வீசப்பட்டன. இதனால் கண்ணாடி கொண்டு அலங்கரிக்கப்பட்டிருந்த பல கடைகள் மிகுந்த சேதமடைந்தன. கடைகளுக்குள் அத்துமீறி நுழைந்து, அங்கிருந்த பொருட்களையும் சேதப்படுத்தியது அக்கும்பல். தாக்குதலின் பின் தப்பிப் போக அக்கும்பல் பயன்படுத்திய வாகனங்களைக் கொண்டு அவ்வீரர்களை அடையாளங் காட்டினர், அவ்வணிக வளாகத்தின் பாதுகாப்பு ஊழியர்கள்.

இதே கல்லூரியில் பயிற்சி பெற வந்த சில இராணுவ வீரர்கள், அவ்வூர் காவல் நிலையத்தைத் தாக்கிய சம்பவமொன்றும் ஒரு வருடத்திற்கு முன்பாக நடந்தது. இராணுவத்தினரின் தொடர்ச்சியான ரௌடித்தனங்களால் பொது மக்கள் மத்தியில் மிகுந்த அதிருப்தி எழவே, இராணுவத் தலைமை, "இச்சம்பவம் பற்றி இராணுவ நீதிமன்றம் விசாரிக்கும்; ஒரே வாரத்தில் விசாரணை முடிவடையும்" என அறிவித்தது.

இந்தக் கண் துடைப்பு நாடகம் ஒருபுறமிருக்க, தங்களைக் காட்டிக் கொடுத்த பாதுகாப்பு ஊழியர்களைத் தங்களின் அதிகார பலத்தைக் கொண்டு பழிவாங்கத் துவங்கியது, இராணுவக் கும்பல். தாக்குதலைத் தலைமையேற்று நடத்திய துணை நிலை அதிகாரி மிஸ்ரா, "அப்பாதுகாப்பு ஊழியர்கள் தன்னையும், தனது சகாக்களையும் கூர்மையான ஆயுதங்களைக் கொண்டு தாக்கியதாக"ப் பொய் வழக்குத் தொடுத்துள்ளார். இதுதான் இந்திய இராணுவத்தின் யோக்கியதை!

## மும்பைத் துறைமுகம் - பெட்ரோலியத் துறை அதிகார முறைகேடுகள்: காங்கிரசின் கைவரிசை

மகாராஷ்டிரா மாநிலத் தலைமைச் செயலர் தினேஷ் அப்சல்புர்கர், அரியானா மாநில முன்னாள் காங்கிரஸ் தலைவர் பன்சிலாலின் மருமகளும், வழக்கறிஞருமான கிரண் சௌத்ரி, மும்பைத் துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் துணைத் தலைவர் பாண்டே, டெல்லி காங்கிரசு கமிட்டி பொதுச் செயலர் - இந்நால்வர் மீதும் ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் மும்பை சிவில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளது, மத்தியப் புலனாய்வுத் துறை. இந்நால்வரின் சதித் செயல் காரணமாக மும்பை துறைமுகப் பொறுப்புக் கழகத்திற்கு கோடிக்கணக்கான ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் சி.பி.ஐ. தனது குற்றச்சாட்டில் குறிப்பிட்டுள்ளது.

அப்சல்புர்கர் மும்பை துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் தலைவராக இருந்தபொழுது, இந்தியாவிலுள்ள துறைமுகங்களின் வழக்குகளைக் கவனித்துக் கொள்ள, கிரண் சௌத்திரி, மத்திய மந்திரி ஜகதீஷ் டைட்லரால் நியமிக்கப்பட்டார். மும்பை துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் ஒப்புதல் இன்றி, அதற்குச் சொந்தமான இம்பீரியல் கட்டிடத்தில் மூன்று அறைகளை ஏலம் விடாது, சட்டத்திற்குப் புறம்பாக மிகக் குறைந்த வாடகையில் கிரண் சௌத்திரிக்கு அப்சல்புர்கர் வாடகைக்குக் கொடுத்தார் என்பது தான் சி.பி.ஐ.யின் குற்றச்சாட்டு. மேலும், கிரண் சௌத்திரி அந்த மூன்று அறைகளையும் தானே மறு வாடகைக்கு விடவும், தனக்குப் பிறகு தனது வாரிசுதாரர்கள் இச்சலுகையை அனுபவித்துக் கொள்ளும் வகையிலும் ஒப்பந்த விதிகள் திருத்தப்பட்டன; இது பற்றி விசாரணை வருகிறது என அறிந்தவுடன், ரூ. 57.20 என இருந்த சதுர அடிக்கான வாடகை மதிப்பை, ரூ. 542.57 எனத் திருத்தி, போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டன" என்றும் சி.பி.ஐ. குற்றஞ்சாட்டியுள்ளது.

ஹவாலா வழக்கைப் போலவே இந்த முறைகேடும் வழக்கு விசாரணை ஏதுமின்றி ஒரு வருடத்திற்கும் மேலாக முடக்கி வைக்கப்பட்டு இருந்தது. மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சராக ஜகதீஷ் டைட்லர் இருந்த வரை, தனது நெருங்கிய சகாவான கிரண் சௌத்திரி மீது வழக்குத் தொடர சி.பி.ஐ.க்கு அனுமதி தர மறுத்து விட்டார். அவரைத் துரத்திவிட்டு, ராஜசேகர மூர்த்தி மந்திரியான பின் தான், தூசி தட்டி வழக்கை வெளியே எடுத்தது ராவ் கும்பல்.



தினேஷ் அப்சல்புர்கர்

அப்சல்புர்கர் மகாராஷ்டிராவின் தலைமைச் செயலராக நியமிக்கப்பட்ட சிறிது நாட்களிலேயே இவ்வழக்குத் தொடரப்பட்டுள்ளதால், "தேர்தல் நேரத்தில் எங்கள் அரசுக்குக் களங்கம் கற்பிக்கும் செயல் இது" எனக் குற்றஞ்சுமத்தி உள்ளது, பா.ஜ.க. - சிவசேனா கூட்டணி அரசு. கிரண் சௌத்திரியின் மாமனார் பன்சிலால், காங்கிரசில் இருந்து விலகி அரியானா விகாஸ் கட்சியைத் தொடங்கி, காங்கிரசுக்கு போட்டியாக தேர்தல் களத்தில் குதித்துள்ளார். எனவே இவ்வழக்கு ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கும் காங்கிரசின் ராஜ தந்திரமாகும்.

அதிகார முறைகேடுகளுக்கு எதிரான ராவின் நிழல் யுத்தம் ஒரு புறம் நடந்து கொண்டிருக்க, பெட்ரோலியத் துறை மந்திரி சதீஷ் சர்மா தனக்குள்ள சிறப்பு அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்தி, "பாராளுமன்ற சபாநாயகர் சிவராஜ் பாட்டிலின் மகன் ஷைலேஷ் பாட்டில், உள்துறை மந்திரி சவானின் மகள் சிநேகலதா பாட்டில், ராவின் நெருங்கிய உறவினர்கள் ரகுநாத ராவ், ரவீந்தர் ராவ், வேணுகோபால் ராவ், பிரசாத் ராவ், சம்பத் குமார் ராவ்" எனப் பலருக்கு சமையல் எரிவாயு மற்றும் பெட்ரோல் விற்பனை உரிமையை வாரி வழங்கியுள்ளார். ஆந்திராவில் மட்டும் ராவுக்கு நெருக்கமான 33 பேருக்கு இவ்வுரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. இம்முறைகேடு பற்றி தற்பொழுது விசாரிக்கத் தொடங்கியுள்ளது, உச்சநீதி மன்றம். சதீஷ் சர்மாவோ, "உரிமம் பெற்றவர்கள் அனைவரும் ஏழைகள், சமூக சேவர்கள்" என அண்டப்புளுகை அவிழ்த்து விட்டுள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com



## குஜராத்: பணக்கார விவசாயிகளுக்குப் பலியாகும் சிறு - நடுத்தர விவசாயிகள்

குஜராத் மாநிலத்தில் சூரத் நகரிலுள்ள கன்ஷியாம் ஷா சமூகவியல் நிறுவனம் அம்மாநில விவசாயத்தில் எழுந்துவரும் மாற்றங்களை ஆய்வு செய்து, பணக்கார விவசாயிகளின் நில உடமை அதிகரித்து வருவதையும், ஸ்தலத்தில் இல்லாத நிலப்பிரபுக்களின் எண்ணிக்கை கூடி வருவதையும் சுட்டிக் காட்டியுள்ளது.

குஜராத்தின் வளமான மெஹ்சானா மற்றும் பரோடா மாவட்டங்களில், பல கிராமங்களைச் சேர்ந்த சிறு விவசாயிகள், தாராளமயமாக்கலின் காரணமாக அரசின் மானிய உதவிகள் தடைப்பட்டுப் போனதால், பணத் தேவைகளுக்காக கந்து வட்டி - லேவாதேவிக்காரர்களிடம் சரணடைந்தனர். நாளடைவில் கடன் கட்ட முடியாது போகவே, நிலத்தைப் பணக்கார விவசாயிகளிடம் குத்தகைக்குக் கொடுத்துவிட்டு, தங்களது சொந்த நிலத்திலேயே கூலி விவசாயிகளாக உழைக்க வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

குஜராத்தின் பாவ் நகர் மற்றும் ஜுனாகத் பகுதிகளைச் சேர்ந்த பணக்கார விவசாயிகளில் 22 சதவீதம் பேர் தொலை தூரத்தில் பாசன வளமிக்க வடக்கு மற்றும் மைய குஜராத் பகுதிகளில் நிலத்தை வளைத்துப் போட்டிருப்பதாக இவ்வறிக்கைச் சுட்டிக் காட்டியுள்ளது. மேலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட 16 மாவட்டங்களுள், ஒன்பது மாவட்டங்களைச் சேர்ந்த பெரு நில உடமையாளர்களுள் 53 சதவீதம் பேர் தான், நிலமுள்ள கிராமங்களிலேயே வாழ்கின்றனர்; குஜராத்தில் பா.ஜ. கட்சியின் ஓட்டு வங்கியாகத் திகழும் பட்டேல் சாதியினர் விவசாயத்தில் புதிய ஆதிக்க சக்திகளாக எழுந்து வருவதோடு, நர்மதா பாசனத் திட்டம் அமையவுள்ள பகுதிகளில் நில ஆக்கிரமிப்பில் முன்னிலையில் இருப்பதாகப் பட்டியல் இட்டுள்ளது, அந்த அறிக்கை.

இந்நிலையில் ஆளுங்கட்சியான பா.ஜ.க. சாகுபடி நிலத்தை வாங்கவும் / விற்கவும் முன்பிருந்த தடைகளை நீக்கியும், ஒரு 'விவசாயி' எட்டு கிலோ மீட்டருக்கு அப்பாலும் நிலங்களை வாங்கி சாகுபடியில் ஈடுபடலாம் என்றும் இரு திருத்தங்களை நிலச் சீர்திருத்தத் திட்டத்தில் கொண்டு வந்துள்ளது. இத்திருத்தங்களினால் 30 இலட்சம் சாகுபடியாளர்கள் பலனடைவார்கள் என்ற புளுகு மூட்டையினையும் அவிழ்த்துவிட்டுள்ளது, அக்கட்சி.

ஆனால் இத்திருத்தங்கள் ஆய்வறிக்கைச் சுட்டிக் காட்டும் இந்த இரு போக்குகளையும் மேலும் வலுப்படுத்தும்; குளிர் பானங்கள், நொறுக்குத் தீனிகள், தயார் உணவு வகைகள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பன்னாட்டு நிறுவனங்கள் தங்களின் காய்கறி - கனித் தேவைகளுக்காக, தாங்களே நேரடியாக விவசாயத்தில் கால் பதிக்கும் அபாயமும் இத்திருத்தங்களினால் ஏற்பட்டுள்ளது. பணப் பயிர் உற்பத்திக்காக நிலத்தடி நீரும், இரசாயன உரங்களும் வரைமுறையற்றுப் பயன்படுத்தப்படுவதால், நிலம் மாசுபட்டுப் போகும்; செயற்கையான வறட்சி உருவாக்கப்பட்டு, மாநிலமே மயான பூமியாகிவிடும்.

## இந்திரகுமாரி தொட்டதெல்லாம் ஊழலாகும்

தமிழக அரசின் சமூக நலத் துறையின் கீழ் செயற்படுத்தப்படும், கர்ப்பிணிப் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் ஊட்டச் சத்து நிறைந்த மருந்துகள் வழங்கும் திட்டத்திலும், பெண் சிசுக் கொலையைத் தடுப்பதற்காகத் தங்க மோதிரம் வழங்குவதிலும் இந்திரகுமாரி கும்பல் கோடிக்கணக்கில் சுருட்டிக் கொண்டது தற்பொழுது அம்பலமாயுள்ளது.

**பதவி வாய்ப்பு பறிபோனதுதான் இந்திர குமாரிக்குத் தண்டனையா?**

இரு பெண் குழந்தைகளை ஈன்றெடுத்த ஏழைத் தாய்மார்களைக் கருத்தடை செய்து கொள்ள ஊக்குவிக்கவும், அப்பெண் குழந்தைகளைச் சுமை எனக் கருதி கொன்றுவிடாமல் தடுக்கவும் 93-ம் ஆண்டில் பல உதவித் திட்டங்களை அறிவித்தது ஜெயா அரசு. அவற்றுள் ஒன்றுதான் அத்தாய்மார்களின் பெண் குழந்தைகளுக்கு, ஒரு வயது நிறைவடையும் பொழுது 800 ரூபாய் பெறுமான தங்க மோதிரம் வழங்கும் திட்டம். இம்மோதிரங்களை மாவட்ட சமூக நல அதிகாரிகள் உள்ளூரிலேயே ஏலத்தின் மூலம் வாங்கிக் கொடுக்க வேண்டும் என்பது சட்ட ரீதியான நடைமுறை.

ஆனால் இதற்குப் புறம்பாக, வருமான வரிச் சோதனையில் மாட்டிக் கொண்ட சமூக நலத்துறையின் முன்னாள் இயக்குநர் தீனதயாளன், "அதிகாரிகள் மோதிரங்களை உள்ளூரில் வாங்கக் கூடாது" என்று வாய்மொழி உத்தரவிட்டுள்ளார். "மோதிரம் வாங்கும் தொகையை சென்னையில் தி.நகரிலுள்ள சசிகலா கும்பலுக்கு நெருக்கமான நகைக் கடையின் பெயரில் வங்கிக் காசோலை (டி.டி) எடுத்து நேரிடையாக இந்திரகுமாரியிடம் கொடுத்து விட வேண்டும். பின்னர் அவர் தரும் துண்டுச் சீட்டை எடுத்துப் போய் குறிப்பிட்ட நகைக் கடையில் கொடுத்து மோதிரத்தைப் பெறலாம்" என்ற குறுக்குவழி கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. முதல் தவணையில் மட்டும் 1 மாவட்டத்துக்கு 1200 முதல் 1500 மோதிரங்கள் இக்குறுக்கு வழியின் மூலமாக வாங்கி வழங்கப்பட்டுள்ளன. மோதிரத்தின் தரம், விலை பற்றியெல்லாம் அலட்டிக் கொள்ளாது, வேறு போட்டியாளர்களையும் அனுமதித்து விடாமல் நடந்துள்ள இக்கூட்டுக் கொள்ளையில், முந்தைய ஊழல் சாதனைகளைப் பின்னுக்குத் தள்ளிவிடும் வாய்ப்புகள் உண்டு.



உலக வங்கி உதவியுடன் செயற்படுத்தப்படும் ஊட்டச் சத்து மாத்திரைகள் வழங்கும் திட்டத்தில் மட்டும் இரண்டு கோடி ரூபாய்க்கு மோசடிகள் நடந்திருப்பதாகக் குற்றஞ்சாட்டியுள்ளது உலக வங்கி. மருந்து வாங்கியதற்கான 5 கோடி ரூபாய் பெறுமான ரசீதுகளை ஆய்வு செய்த உலக வங்கி, "பல ரசீதுகள் போலியாகத் தயாரிக்கப்பட்டுள்ளன; மருந்துகள் வழங்கியதாகக் கூறப்படும் பல நிறுவனங்கள் போலியானவை; மருந்துக் கட்டுப்பாடு அதிகாரிகளால் அங்கீகரிக்கப்படாதவை; இதே மருந்துகளை அரசு நிறுவனங்களிடமிருந்து மூன்று கோடி ரூபாய்க்குள் வாங்கியிருக்கலாம்" என குறிப்பிட்டுள்ளது. இதன் காரணமாக இத்தொகையைத் தமிழக அரசுக்கு வழங்க இயலாது எனக் கூறி, அந்த ரசீதுகளைத் திருப்பி அனுப்பி விட்டது அவ்வங்கி.

வேட்டி - சேலை தொடங்கி சத்துணவில் போடப்படும் முட்டை வரை ஊழலில் ஊறித் திளைத்த இந்திரகுமாரிக்கு, தேர்தலில் நிற்க சீட்டு கொடுக்காததுதான் அல்லிராணி ஜெயா அளித்திருக்கும் தண்டனை.

## 'சமூக நீதி'க் காவலர்களின் கோரக் கொலைகள்

கடந்த 94 மற்றும் 95-ம் ஆண்டுகளில் பீகாரில் போலீசாருக்கும் நக்சல்பாரிகளுக்கும் இடையே நடந்ததாகக் கூறப்படும் மூன்று மோதல்களில் 17 விவசாயிகள் கொல்லப்பட்டனர். இது பற்றி விசாரணை நடத்திய ஜனநாயக உரிமைகள்


படிப்பகம்

www.padippakam.com



சங்கம். "இம்மூன்று மோதல்களுமே போலியானவை; தங்களின் படுகொலையினை மறைக்க போலீசார் கீழ்த்தரமான கட்டுக் கதைகளை அவிழ்த்து விட்டுள்ளனர்" என ஆதாரங்களுடன் அரசு பயங்கரவாதத்தை அம்பலபடுத்தியுள்ளது.

• 1994-ஆம் ஆண்டு ஏப்ரல் 12-ந் தேதி மத்காரா எனுமிடத்தில் 11 பேர் போலீசாரல் சுட்டுக் கொல்லப்பட்டனர். "தீவிரவாதிகள் மறைந்திருந்து தங்களைத் தாக்கினர்; பதிலுக்கு நாங்கள் சுட்டத்தில் இவர்கள் இறந்து போனார்கள்" என்பது போலீசு தரப்பின் வாதம்.

"லால் கிராமத்தில் இருந்து இந்த பதினோரு அப்பாவிகளைப் பிடித்துச் சென்ற போலீசு, மிக அருகாமையில் வைத்து சுட்டுக் கொன்றது" என்ற உண்மை விசாரணையில் அம்பலமானது.

• குல்சர் பிகா எனுமிடத்தில் 1995-ம் ஆண்டு ஜூலை 3-ந் தேதி போலீசாருக்கும், இ.பொ.க. (மா-லெ.) குழுவினருக்கும் நடந்த மோதலில் நான்கு பேர் கொல்லப்பட்டதாக போலீசு கூறி வருகிறது.

"இம்மோதலின் பொழுது ஒருவர் மட்டுமே இறந்து போனார்; காயமடைந்த ஒருவரும் பிறரும் போலீசில் சரணடைந்தனர். காயம் அடைந்தவரை அங்கேயே சுட்டுக் கொன்றுவிட்டு, 10 பேரை ஜீப்பில் ஏற்றிக் கொண்டு சென்றது போலீசு. இவர்களுள் இருவரை ஜீப்பில் இருந்து இறக்கி ஓடவிட்டு சுட்டுக் கொன்ற போலீசார், பிறரின் மீது கொடூரமான சித்திரவதைத் தாக்குதலை ஏவிவிட்டனர்" என்ற உண்மைகளை அப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள், ஜனநாயக உரிமைகள் சங்கத்தாரிடம் தெரிவித்தனர்.

• பெகுசாரய் சம்பவத்தில், "இ.பொ.க. (மா - லெ) குழுவின் ஆதரவாளர்கள், போலீசு அதிகாரியைக் கடத்திச் செல்ல முயன்றனர்; அவரைக் காப்பாற்ற நாங்கள் முயன்ற பொழுது, கூட்டத்தில் இருந்த சிலர் துப்பாக்கியால் சுட்டனர். அதன் காரணமாக இருவர் இறந்து போயினர்" எனப் புளுகியுள்ளது போலீசு.

ஆனால், சட்டவிரோதமாக நிலப்பிரபுக்களிடம் குவிந்துள்ள நிலங்களைப் பறிமுதல் செய்யுமாறு ஆர்ப்பாட்டம் நடத்திய இ.பொ.க. (மா - லெ) ஆதரவாளர்களை தடியடி நடத்திக் கலைத்தனர், போலீசார். ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கள் அலுவலகத்துக்குத் திரும்பிச் செல்லும் பொழுது, வழியை மறித்து போலீசார் சுட்டதில்தான் இரு ஆதரவாளர்கள் இறந்து போயினர். இப்படுகொலைகள் பீகார் போலீசின் உண்மை முகத்தை மட்டுமல்லாது, அம்மா நிலத்தை ஆளும் 'சமூக நீதி'க் காவலர்களின் பகல் வேடத்தையும் அம்பலப்படுத்திக் காட்டிவிட்டன.

## இஸ்ரேலின் சமாதான அரிதாரம் கலைகிறது

"பாலஸ்தீன விடுதலை இயக்கம் உள்ளிட்ட இஸ்ரேலுக்கு எதிரான தீவிரவாத இயக்கங்களை வெளியேற்றுவது" என்ற முகாந்தரத்தில் 1982-ஆம் ஆண்டு லெபனான் நாட்டினுள் நுழைந்த இஸ்ரேல், அந்நாட்டின் தென் பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டது. இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை எதிர்த்து ஷியா முஸ்லீம் மதப் பிரிவைச் சேர்ந்த ஹிஸ்புல்லா முஜாஹிதீன் குழு லெபனான் நாட்டில் இருந்து கடந்த பல ஆண்டுகளாப் போராடி வருகிறது. இவ்விடுதலைப் போரை பயங்கரவாதமாகச் சித்தரித்து ஒடுக்கு முறையை ஏவி வரும் இஸ்ரேல், ஏப்ரல் 11-ந் தேதி அக்குழு மீது இராணுவத் தாக்குதலைத் தொடுத்தது. ஹிஸ்புல்லா குழுவின் நிலைகளையும் இரகசிய மறைவிடங்களையும் தாக்கி அழிப்பது எனும் பெயரில் வான்வழி, பீரங்கி, ராக்கெட், ஏவுகணைத் தாக்குதல்களைக் கட்டவிழ்த்து விட்ட இஸ்ரேல், லெபனான் மீது ஒரு சிறிய போரினையே நடத்தியது எனலாம்.



இஸ்ரேலிய ஹெலிகாப்டர் ராக்கெட் வீச்சுத் தாக்குதலில் இறந்து போன குழந்தை

இத்தாக்குதலில் லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் மின்நிலையமொன்று முற்றிலும் அழிந்து போனது; சிடான் நகரிலுள்ள ஐ.நா. அகதி முகாமின் மீது நடந்த ராக்கெட் தாக்குதலில் கிட்டதட்ட 150 லெபனான் அகதிகள் மாண்டு போயினர். ஹிஸ்புல்லா குழுவினர்க்கு ஆயுதம் கிடைப்பதைத் தடுப்பது எனும் பெயரில், லெபனானின் பெய்ரூட், டயர், சிடான் துறைமுகங்களைத் தனது போர்க் கப்பல்களைக் கொண்டு முற்றுகையிட்டு முடக்கியது, இஸ்ரேல். 16 நாட்களாகத் தொடர்ந்து நடந்த இத்தாக்குதலில் 200-க்கும் அதிகமான பொது மக்கள் இறந்து போயினர்; லெபனானின் தென்பகுதியைச் சேர்ந்த நான்கு இலட்சம் கிராம மக்கள், அகதிகளாக வடபகுதியில் உள்ள நகரங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

அமெரிக்கா "இஸ்ரேலைக் கண்டிக்கும் எந்தவொரு தீர்மானத்தையும் ஐ.நா. சபையில் அனுமதிக்க முடியாது" என எச்சரித்து, இஸ்ரேலுக்கு கொம்பு சீவிவிட்டது. ஐ.நா. மன்றம் இந்த அச்சுறுத்தலுக்கு அடி பணிந்து, மேம்போக்காக ஒரு தீர்மானம் நிறைவேற்றி, இஸ்ரேலின் அடாவடித்தனத்துக்கு துணை போனது. இதன் பின்னர் அமெரிக்கா, இஸ்ரேல், லெபனான், ஹிஸ்புல்லா குழு - மூன்றும் கையொப்பமிட்ட போர் நிறுத்த ஒப்பந்தமொன்றை அறிவித்தது. ஆனால் அந்த ஒப்பந்தத்தின் மை உலருவதற்கு முன்பாகவே, "இஸ்ரேலின் பாதுகாப்பு பலவீனமாக உள்ளது" எனப் புளுகி, இஸ்ரேலுக்கு அதிநவீன லேசர் கதிர் ஆயுதங்களை வழங்க முன் வந்தது அமெரிக்கா. மேலும் மேற்காசியாவில் தனது மேலாதிக்கத்தை வலுப்படுத்திக் கொள்ளும் முகமாக, துருக்கி மற்றும் ஜோர்டான்நாட்டு வான் வழிகளில் தனது விமானப் படை பயிற்சி பெறவும் ஒப்பந்தம் இட்டுக் கொண்டது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஹிஸ்புல்லா குழுவோடு போட்டுக் கொண்ட அமைதி ஒப்பந்தத்தை இத்தாக்குதலின் மூலம் செல்லாக்காசாக்கி விட்டது இஸ்ரேல். மேலும் சமாதானக் காவலனாகப் போற்றப்படும் இஸ்ரேலின் பிரதமர் ஷிமான் பெரேஸ் சுயலாபம் கருதி, இத்தாக்குதலை மே 29-ந் தேதி இஸ்ரேலில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் ஓட்டுப் பொறுக்கும் ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தி வருகிறார். இஸ்ரேலின் இப்பேட்டை ரௌடித்தனத்தை நேரடியாக எதிர்க்கத் துணியாத அரபு நாடுகள், இஸ்ரேலைக் கண்டித்து அறிக்கை விடுவதோடு தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு விட்டன.



படிப்பகம்

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## டில்லியில் மீண்டும் ஒரு சுசீல் சர்மா

டில்லி இளைஞர் காங்கிரசின் பொதுச் செயலாளர்களில் ஒருவரான ராகேஷ் தேவன் மற்றும் அவரது சகோதரர் கமல் தேவன் உட்பட 43 பேர் விபச்சார விடுதி நடத்தியதாகக் கைது.

டில்லி ஆனந்த் பிரபாத்திலுள்ளது கமல் ரெஸ்டாரெண்ட். இங்கு இரவில் காபரே டான்ஸ் நடத்திக் கூட்டம் சேர்த்து, விபச்சாரமும் நடத்தி வந்துள்ளனர். காபரே டான்ஸ் நடத்துவது ராகேஷ் - கமல் தேவன்களின் தந்தை தேவராஜ் தேவன். இவர் ஹரியானா காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்.

ஏற்கனவே ராகேஷ் தேவன் மற்றும் அவரது தந்தை மீது கொலை முயற்சி, அரசு ஊழியரைத் தாக்கியது, வருமான வரிச் சட்டம், ஆயுதச் சட்டம் உட்பட பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. நேற்று சுசீல் சர்மா! இன்று ராகேஷ் தேவன், கமல் தேவன்கள்; டில்லி காங்கிரசு 'முன்னேறி' வருகிறது!

## போலீசில் பாதிப் பேர் பைத்தியம்

நம் நாட்டுத் தலைநகர் தில்லியிலுள்ள போலீசாரில் நூற்றுக்கு 52 பேர் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள். அதிகாரிகளில் 47 சதவீதம் பேர் உடல்நிலை பாதிக்கப்பட்டவர்கள்.

போலீசு ஆய்வு மற்றும் வளர்ச்சி நிறுவனம் பெங்களூரிலுள்ள மனநலம் மற்றும் நரம்பியல் விஞ்ஞான தேசிய கழகத்தின் மூலம் நடத்திய ஆய்வில் தெரிய வந்த உண்மைகள் இவை.

மேலும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களில் 95 சதவீதம் பேருக்கு அது பற்றி எதுவுமே தெரியாது. இதுவரை மனநல மருத்துவரை சந்தித்ததே கிடையாது.

இதே போல கர்நாடக போலீசாரிடம் ஆய்வு செய்ததில் அவர்களில் 37 சதவீதம் பேர் மனநிலை பாதிக்கப்பட்டவர்களாக உள்ளனர். தவிர போலீசாரில் சுமார் 75 சதவீதம் பேர் குடிகாரர்களாகவும், போதைப் பொருள் பயன்படுத்துபவர்களாகவும் உள்ளதை போலீசாரே சுட்டிக் காட்டியுள்ளனர்.

## ரசிய திடீர்ப் பணக்காரர்கள்

சீரழிந்த ரசியாவில் மிகச் சிலரேயான புது (திடீர்)ப் பணக்காரர்களின் வாழ்வோ கற்பனை செய்ய முடியாதது.

1992-ஆம் ஆண்டின் கடைசி மூன்று மாதங்களில் இவர்கள் வாங்கிய அன்னிய பங்குப் பத்திரங்களின் மதிப்பு மாதத்திற்கு 70 கோடி டாலரிலிருந்து 80 கோடி டாலர்கள். 93,94-ஆம் ஆண்டுகளில் இது பல மடங்கு அதிகரித்தது.

92-ம் ஆண்டுகளிலிருந்து அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, கனடா, தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரியா, ஸ்பெயின், போர்த்துக்கல், மால்ட்டா, சைப்ரஸ் முதலிய நாடுகளில் நிலங்கள், பண்ணை வீடுகள், அடுக்கு மாடிகள், விடுதிகள் என வாங்கிக் குவிக்கிறார்கள் ஜெ - சசி போல.

தமது சொத்துக்களை ரொக்கப் பணமாக மாற்றி வைத்துக் கொள்ளலாம் என அரசு அறிவித்த பின் கைமாறிய பண மதிப்பு 1993-ஆம் ஆண்டில் 1000 கோடி டாலர். 1994-ஆம் ஆண்டில் இது 1600 கோடி டாலரானது. 95 முதல் ஆறு மாதத்தில் கைமாறிய பண மதிப்பு - புழக்கத்திலிருந்த ரசிய ரூபிளை விட மூன்று மடங்கிற்கும் அதிகம்.

94-ஆம் ஆண்டில் இவர்கள் வெளிநாடு செல்ல செலவழித்த பணம் 680 கோடி டாலர். இந்தப் பண மதிப்பு இயற்கை எரிவாயுவை இரசியா ஏற்றுமதி செய்து திரட்டிய பணத்தை விட மிக அதிகம். மேலும் ரசியாவுக்கு 1995-ம் ஆண்டு ஐ.எம்.எஃப். கொடுத்த கடன் மதிப்பையும் விட இது அதிகம்.

தனி நபர்களாக ஐந்து நட்சத்திர ஆடம்பரப் பொருட்கள் வாங்க செலவழித்த தொகை 4500 கோடி அமெரிக்க டாலர்கள். இவர்கள் அனைவரும் இரண்டாவது பாஸ்போர்ட் வாங்கி வைத்துள்ளனர். ஏதாவது பிரச்சினை என்றால் ரசியாவை விட்டு ஓட! 'நல்ல தேசப்பற்று'!

## பா.ஜ.க.வின் எம்.பி. சீட்டுக்கு ஆபாச லாவணிப் பாடகி

கொள்கையும், ஒழுங்கு கட்டுப்பாடும் கொண்ட கட்சி என மார்தட்டி வந்த பா.ஜ.க. வின் யோக்கியதை குஜராத்திலும், ஹவாலா அத்வானி, குரானா போன்றவர்களாலும் சந்தி சிரிக்கிறது. இந்த தேர்தலில் இந்திப் பட கவர்ச்சி நாயகி மாதுரி தீட்சித்தை தங்களது தேர்தல் பிரச்சாரத்திற்கு இழுத்து வருவது என்ற பா.ஜ.க. வின் பகீரத முயற்சி தோல்வியடைந்தது. சற்றும் மனம் தளராமல், 'தமாசா ராணி' எனப் புகழ் பெற்ற ஆபாச லாவணி பாடல்களை கிராமம் கிராமமாக கடந்த 35 ஆண்டுகளாகப் பாடி இளைஞர்களைச் சீரழித்து வரும் மங்களா பன்சோட் என்பவரை மஹாராஷ்ட்டிர பந்தர்பூர் தொகுதி வேட்பாளராக அறிவித்துள்ளனர். ஒரு வேளை மத்தியில் ஆட்சியைப் பிடிக்க முடியவில்லை என்றால் பாராளுமன்றத்தில் ஆபாச லாவணி பாட உமாபாரதியுடன் ஒரு ஜோடி வேண்டும் எனக் களத்தில் நிறுத்தியிருக்கிறார்கள் போலும்.

## தென்கொரிய மாணவர்களின் முன்னுதாரணமிக்க போராட்டம்!

தென் கொரியாவின் புதிய ஜனாதிபதி கிம் யங் சாம் தனது தேர்தல் பிரச்சார செலவுகளுக்காக பாசிச இராணுவ சர்வாதிகாரி ரோ டே வூ விடமிருந்து கோடிக்கணக்கான கருப்புப் பணத்தை பெற்றுக் கொண்டார். இது அம்பலமானதைத் தொடர்ந்து ஊழல் ஜனாதிபதிக்கு எதிராக அந்நாட்டில் மாணவர்களின் போராட்டம் புதிய எழுச்சியுடன் முன்னேறி வருகிறது.

வீரப்போரில் தென்கொரிய மாணவர்கள்



கடந்த ஏப்ரலில் தலைநகர் சியோலில் நடந்த ஓர் ஆர்ப்பாட்டத்தில் போலீசு தாக்குதலில் 20 வயது நோ சூ சக் என்ற மாணவர் இறந்துவிட்டார். இதைத் தொடர்ந்து நாடு முழுவதும் மாணவர்களின் போராட்டம் காட்டுத் தீயென பற்றிப் படர்ந்து வருகிறது.

பீதியடைந்த ஆட்சியாளர்கள் அரசாங்க கட்டிடங்களையும் எஜமானான அமெரிக்க தூதரகத்தையும் பாதுகாக்க ஆயிரக்கணக்கான ஆயுதந்தாங்கிய போலீசையும் பீரங்கி வாகனங்களையும் குவித்துள்ளனர். மாணவர்களின் எழுச்சிக்கு முன் இவை நொறுங்கப் போவது உறுதி.

www.padippakam.com

# கழிசடை அரசியலில் தேர்தல் அணிவகுப்பு

கொள்ளை நோய் போன்று நாட்டை உலுக்கிய தேர்தல் கால காய்ச்சல் ஒருவாறு இறங்கியிருக்கிறது.

நயந்தும் குழைந்தும், பீதியூட்டியும் பிரமிப்பூட்டியும், கோமாளித்தனமாகவும் குரூரமாகவும், வாஞ்சையாகவும் வக்கிரமாகவும், ஆசை காட்டியும் அச்சுறுத்தியும் மக்களிடமிருந்து ஓட்டுக்களை உருவிக் கொண்டு ஓடிவிட்டார்கள். இமயம் முதல் இந்துமாக்கடல் வரை, அந்தமான் தீவு முதல் அரபிக் கடல் வரை தரையில் நடந்தும், விமானத்தில் பறந்தும் பெரும் புழுதியைக் கிளப்பினார்கள்.

ஆனால் சுவரெழுத்து கூடாது, இரவு 12 மணிக்கு மேல் ஒலிபெருக்கி பிரச்சாரம் கூடாது போன்ற தேர்தல் கமிஷனின் கெடுபிடிகளால், ஒரு வகையில் அரசியல் விவாதங்கள் முடக்கப்பட்டு மக்களையும் தேர்தலையும் அரசியலற்றதாக மாற்றும் முயற்சிதான் நடந்தது. பெரு முதலாளிகள், நிலப்பிரபுகள் மற்றும் உயர் சாதி மேட்டுக் குடியினர் ஓட்டுச் சீட்டு கட்சி ஊழியர்கள் மீதும் அவர்களின் அரசியல் நடவடிக்கைகள் மீதும் காட்டும் வெறுப்பின் அடிப்படையிலானதுதான் தேர்தல் கமிஷனின் உத்திரவுகள். ஓட்டுச் சீட்டு அரசியல், மக்களை மோசடி செய்கிறது என்ற போதிலும் எல்லா அரசியல் நடவடிக்கைகள் மீதும் அடிப்படை வர்க்கத்தினர் மீதும் காட்டப்படும் துவேசம்தான் இது.

இதை அம்பலப்படுத்தி முறியடிப்பதற்குப் பதிலாக, எல்லா ஓட்டுக் கட்சிகளும் மவுனம் சாதித்து பணிந்து போகின்றன. எல்லாக் கட்சிகளுமே அயோக்கியர்கள்தான் என்று மக்களிடம் அம்பலப்பட்டுள்ள நிலையில், தங்களது சந்தர்ப்பவாத - பித்தலாட்ட அரசியல் பற்றி அதிகம் பேசாமல் எல்லாக் கட்சிகளும் மவுனம் சாதிப்பதற்கு தேர்தல் கமிஷனின் உத்திரவுகள் அவர்களுக்கு வசதியாக இருக்கிறது. எனவேதான் எந்தக் கட்சியும் இதை எதிர்க்கவில்லை.

ஓட்டுக் கட்சிகளும் தமது பிரச்சாரத்துக்குத் தொழில்முறை விளம்பரம் மற்றும் உயர் நுட்ப முறைகளுக்கு மாறிவிட்ட போது, தேர்தல் கமிசனின் கட்டுப்பாடுகள் காலாவதியாகிப் போனவை ஆகிவிட்டன.

## கருப்புப் பணத்தை வாரியிறைத்து விளம்பர வாண வேடிக்கை

எல்லாக் கட்சிகளுமே தமது கொள்கை - லட்சியங்களைக் காற்றில் பறக்கவிட்டு திவாலாகி விட்டதால், எந்தக் கட்சியிலும் அணிகளிடம் உற்சாகமோ, உணர்வுபூர்வமான செயல்பாடோ இல்லாமல் முடங்கிவிட்டது. எனது பகுதிக்கு கூடுதலாக சுவரொட்டிகளும், பிரசுரங்களும் வேண்டும் என்று ஒவ்வொரு ஊழியரும் கட்சித் தலைமையகத்தில் போட்டி போட்டுக் கொண்டு வாங்கிச் சென்ற காலம் மலையேறிவிட்டது. இப்போது ஓட்டுக் கட்சிகள் தமது தொண்டர்கள் மூலம் பிரச்சாரம் செய்வதில் நம்பிக்கை வைக்கவுமில்லை. தேர்தல் சந்தையில் தமது கட்சியை விளம்பரப்படுத்தவும் விலை போகச் செய்யவும் வர்த்தக ரீதியான உத்திகளிலேயே அவர்கள் நம்பிக்கை வைத்தனர்.

வர்த்தக விளம்பர நிறுவனங்களின் தயவில் தேர்தல் அறிக்கைகள், முழக்கங்கள், வாக்குறுதிகள், பிரச்சார உரைகள், ஒலி - ஒளி நாடாக்கள், விளம்பரங்கள் அனைத்தையும் ஓட்டுக் கட்சிகள் ஒப்படைத்து விட்டன. கட்சியின் அரசியல் தலைமைக் குழுவும், கொள்கைப் பரப்புக் குழுவும் செய்ய வேண்டிய வேலைகளை முதலாளித்துவ வர்த்தக நிறுவனம் போல் ''தேர்தல் பிரச்சார நிர்வாகிகள்'' கவனித்துக் கொண்டனர்.

ஹிமான்சு ரத் என்பவர் ''ஸ்வாக்'' எனும் நிறுவனத்தை டெல்லியில் நடத்தி வருகிறார். வேட்பாளர்களுக்கான முழக்கங்கள், பிரச்சார உரைகளைத் தயாரித்துத் தருவதுதான் இவரது தொழில்! உயர் தொழில் நுட்பங்களைக் கொண்ட இவரது அலுவலகத்தில் 10,000 ஜனரஞ்சக முழக்கங்களும், 3000 தேர்தல் பிரச்சார உரைகளும் ''தயார் நிலையில்'' உள்ளன. கட்சி வேட்பாளர்கள் தமக்குத் தேவையானதைத் தேர்ந்தெடுத்துக்



ஹிமான்சு ரத்: தேர்தல் முழக்க வியாபாரி

கொள்கிறார்கள். 1986-யிலிருந்தே தான் இந்தத் தொழிலைச் செய்து வருவதாகவும், கடந்த இரு தேர்தலில் 172-க்கும் மேலான வேட்பாளர்களுக்கு முழக்கங்கள் - உரைகள் தயாரித்துக் கொடுத்துள்ளதாகவும் அவர் பெருமையுடன் கூறுகிறார். தற்போதைய தேர்தலில் 250-க்கும் மேலான வேட்பாளர்கள் இவரிடம் படையெடுத்தனர்.

தேர்தல் முழக்கம், பிரச்சார உரைகள் தயாரிப்பதற்கு மட்டுமல்ல; கூட்டத்திற்கு ஆள் சேர்க்கவும், கோஷம் போடவும் கூட ஓட்டுக் கட்சிகள் இப்போது கட்சித் தொண்டர்களை நம்பியிருப்பதில்லை. இந்த வேலையை அந்தப் பகுதியிலுள்ள கூலிக்கு கூட்டம் சேர்க்கும் ஒப்பந்தக்காரர்களிடம் விட்டுவிட்டார்கள்.

டெல்லியைச் சேர்ந்த ஜவஹர் என்பவர் 1971-லிருந்து கூலிக்கு கூட்டம் சேர்க்கும் தொழிலைச் செய்து வருகிறார். கட்சி வேறுபாடின்றி எல்லோருக்கும் கூட்டம் சேர்க்கும் இவர், ஒவ்வொருவருக்கும் ஒருவேளை சாப்பாட்டுடன் ரூ. 20/- கூலி தருகிறார். உற்சாகமாக கோஷம் போட வேண்டுமானால், கூடுதல் கூலி உண்டு.

இதேபோல, உ.பி.யைச் சேர்ந்த ''ஆட்டோ'' ஓட்டுநர் முஸ்டாக், 12 ஆண்டுகளாக இத்தொழிலைச் செய்து வருகிறார். ஜெகதீஷ் டைட்லர், ராஜேஷ் கன்னா முதலான பலருக்கு கூட்டம் சேர்த்துக் கொடுத்துள்ளார். இவரது சேவையைப் பாராட்டி காங்கிரசு நடிகரும், எம்.பி.யுமான ராஜேஷ் கன்னா, இவருக்குக் கைக் கடிகாரம் பரிசளித்துள்ளதை பெருமையுடன் கூறுகிறார்.

இவர்கள் தவிர, டெல்லியைச் சேர்ந்த அஸ்ரக் என்பவன், கூட்டத்திற்கு ஆட்கள் திரட்டித் தருவதோடு, கள்ள ஓட்டுப் போடவும் வாக்குச் சாவடிகளைச் சூறையாடவும் ஆட்களை ஏற்பாடு செய்து தருகிறான். கடந்த பொதுத் தேர்தலின் போது கரோல்பாக்கிலுள்ள ஒரு வாக்குச் சாவடியில் பாரதீய ஜனதா வேட்பாளருக்கு 1000 கள்ள ஓட்டுப் போடதான் ஏற்பாடு செய்ததாக இவன் பெரு



படிப்பகம்

www.padippakam.com



மையுடன் கூறுகிறான்.

இப்படி கூலி எழுத்தாளர்கள், கூலிப் படையினரை நம்பி தேர்தல் களத்தில் இறங்கிய ஓட்டு கட்சிகள், இப்போது அதி நவீன தொழில்நுட்ப - தகவல் தொடர்புச் சாதனங்களைக் கொண்டு தேர்தல் பிரச்சாரத்தில் இறங்கின. சோப்பு, சீப்பு, பற்பசை விளம்பரம் போல, ஓட்டுக் கட்சித் தலைவர்களும் ஒரு வியாபாரப் பொருளாக மாற்றப்பட்டு தேர்தல் சந்தையில் விளம்பரப்படுத்தப்பட்டார்கள். சரக்கு தரமானதா, இல்லையா என்பதைவிட, கவர்ச்சிகரமான அதி நவீன விளம்பரம்தான் இங்கே வியாபாரத்துக்கு முக்கியமானது. இந்த நோக்கத்துடன் பல்வேறு வீடியோ சினிமா, விளம்பரத் திரைப்பட தயாரிப்பு நிறுவனங்கள் மூலம் ஓட்டுக் கட்சிகள் கோடி கோடியாய் வாரியிறைத்து பிரச்சாரம் செய்தன. கட்சியின் கொள்கை, லட்சியம், சாதனைகளைப் பேசி ஓட்டுப் பொறுக்கும் காலம் மலையேறி விட்டது.

பிரதமர் ராவ் புல்வெளியில் உலாவுகிறார்; காட்சி மாறுகிறது. பிரதமர் கம்ப்யூட்டரில் வேலை செய்கிறார்; காட்சி மாறுகிறது. பள்ளிக் குழந்தைகளுக்கு ராவ், மதிய உணவளிக்கிறார்; காட்சி மாறுகிறது. திரை முழுவதும் பிரதமரின் முகம் வியாபித்து நிற்கிறது. காங்கிரசுக் கட்சி தயாரித்த "வீடியோ" சினிமா படங்களில் ஒன்றின் காட்சி இது. விவசாயம் முதல் தாராளமய பொருளாதாரம் என பல விசயங்களைப் பற்றி சாதனையாக குறிப்பிட்டாலும் மையமான செய்தி பிரதமர்தான்.

"காங்கிரசு வரலாற்றில் வேறு எந்தவொரு தலைவருக்கும் இத்தனை திரைப்படங்கள் கிடையாது. ஒவ்வொரு அரசு அலுவலகமும் இதற்கு ஒத்துழைத்துள்ளது" என்று ஒரு காங்கிரசு எம்.பி. பெருமையுடன் கூறுகிறார். இத்தகைய வீடியோ சினிமாக்களுக்கு ரூ. 10 கோடி செலவிடப்பட்டுள்ளதாக கூறப்பட்டாலும், மொத்த தயாரிப்புச் செலவு ரூ.30 கோடிக்கு மேலிருக்கும் என்று செய்தித் துறையினர் கூறுகின்றனர். பிரதமரின் மகன் பிரபாகர் ராவ் மற்றும் பிரதமரின் செய்தி ஆலோசகர் ஆர்.கே. பிரசாத் ஆகியோரின் மேற்பார்வையில், ஏறத்தாழ 35 வீடியோ சினிமாக்கள் எடுக்கப்பட்டு பிரதமர் அலுவலகத்தால் ஏற்கப்பட்டது.

ஹைதராபாத்தைச் சேர்ந்த காங்கிரசின் வீடியோ இயக்குனரான மணிசங்கர் பொறுப்பில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த விளம்பரப் படங்கள் நூற்றுக்கும் மேற்பட்ட வீடியோ வாகனங்களில் நாடு முழுதும் பிரச்சாரம் செய்தன. இதுதவிர பல மாநிலங்களிலும் உள்ளூர் கேபிள் டி.வி.க்கள் மூலம் பிரதமரை தேர்தல் சந்தையில் விளம்பரப்படுத்தினர். இவை தவிர, ஜீ.டி.வி. எனும் தனியார் தொலைக்காட்சியில் பிரதமரின் சாதனை விளக்கத் திரைப்படம் ஒளிபரப்பப்பட்டது.



காங்கிரசு கட்சியின் வீடியோ வாகனப் பிரச்சாரம்

வீடியோ திரைப்படங்கள் மட்டுமின்றி, பல்வேறு பாடல் ஒலிப்பேழைகளைக் கொண்டு காங்கிரசுப் பெருச்சாளிகள் கிராமப்புறங்களில் பிரச்சாரம் செய்தனர். ஜீ டி.வி. தொடரில் வரும் ஒரு பிரபலமான பாடல் மெட்டில், பாபர் மசூதி இடிப்புக்குப் பின் இந்து - முஸ்லீம் ஒற்றுமை பற்றி ஒரு பாடல் ஒலிப்பேழை வெளியிடப்பட்டது. "முஜ்கோ ஹை ஆஷா" மற்றும் "தப் அவுர் அப்" எனும் இரு ஒலிப்பேழைகள் தொலைக்காட்சியில் ஒலிபரப்பப்பட்டது.

காங்கிரசுக்கு உண்மையான தேசிய மாற்று என்று மார்தட்டிக் கொள்ளும் பாரதீய ஜனதா கட்சி டெல்லியிலுள்ள "ராஷ்ட்ரியா" என்ற விளம்பர நிறுவனம் மூலம் வீடியோ படங்களைத் தயாரித்தது. பாரதீய ஜனதாவின் லட்சியம் "சுதேசி" என்று கூறப்பட்டாலும், கனடா நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மின்னணு தொழில் நுட்பச் சாதனங்களைக் கொண்டுதான் அது தேர்தல் பிரச்சாரத்தில் இறங்கியது. பாரதீய ஜனதாவின் கொள்கையை விளக்கும் "கமல் சித்ரகார்" எனும் இசை நிகழ்ச்சி "ஜெயின் டி.வி." யில் ஒளிப்பரப்பானது. இதுதவிர சினிமா அரங்குகளில் இரு நிமிடங்கள் ஓடக் கூடிய சாதனை விளக்கப்படம் வட மாநிலத் திரையரங்குகளில் திரையிடப்பட்டது. "ஃபாக்ஸ்" எனும் அதி நவீன தகவல் தொடர்பு சாதனம் வைத்துள்ளவர்கள், தொலைபேசி வைத்துள்ளவர்களின் எண்களைக் குறித்து வைத்துக் கொண்டு அந்தந்தப் பகுதியில் அவர்களுடன் தொலைபேசி மற்றும் ஃபாக்ஸ் மூலம் தமது கட்சிக்கு வாக்களிக்குமாறு பாரதீய ஜனதா கோரியது. இதுதவிர, குறிப்பிட்ட தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டால், பாரதீய ஜனதாவின் பலவகை தேர்தல் பிரச்சாரத்தை இலவசமாகக் கேட்கலாம். பிரபலமான இந்தி சினிமாப் பாடல்களின் மெட்டில் அமைந்த 12 பாடல்களைக் கொண்டு "பி.ஜே.பி. ஹை மேட் ஃபர் இந்தியா" என்ற தலைப்பில் ஒரு ஒலிப்பேழையையும் பாரதீய ஜனதா வெளியிட்டது. இதே போல அதன் பாசிசக் கூட்டாளியான சிவசேனா, நான்கு வீடியோ சினிமாக்களுடன் தேர்தல் பிரச்சாரத்தில் இறங்கியது.

காங்கிரசும், பாரதீய ஜனதாவும் பெரும் முதலாளிகள் ஆதரிக்கும் பணக்கார கட்சிகள் என்று சாடும் போலிக் கம்யூனிஸ்டுகள், அக்கட்சிகளுக்குப் போட்டியாக வீடியோ பிரச்சாரத்தில் இறங்கினர். கேரளத்தின் தனியார் தொலைக்காட்சியான "ஏசியா நெட்"டில் தினமும் 30 நிமிடங்களுக்கு தேர்தல் செய்திகள் ஒளிபரப்பாகிறது. இந்நிறுவனத்தின் முதலாளியான சசிகுமார், 'இடது'களின் 'தோழராக' இருப்பதால் 'இடது முன்னணி'க்கு ஆதரவாக 'ஏசியா நெட்'டில் பிரச்சாரம் நடந்தது.

இது தவிர சினிமா தயாரிப்பாளரும் 'இடது'களின் தோழருமான குஞ்சு முகம்மது "விசாரணா" என்ற தலைப்பில் ஒரு வீடியோ படம் எடுத்து ஒளிபரப்பினார். இந்த படத்தில் காங்கிரசு ஆட்சியில் ஒரு பாமர மனிதனுக்கு நேரும் அவலங்கள் காட்டப்பட்டது. இதுதவிர, கேரளாவை உலுக்கிவரும் இளஞ்சிறுமி கடத்தல் - விபச்சார விவகாரம் வீடியோ படமாக்கப்பட்டு காங்கிரசு ஆட்சிக்கு எதிரான பிரச்சாரமாக ஒளிப்பரப்பப்பட்டது.

தமிழகத்தில், நடுநிலை வகிப்பதாகக் கூறிக் கொள்ளும் முரசொலி மாறனின் "சன்" டி.வி. நாசுக்கான முறையில் தி.மு.க. ஆதரவு பிரச்சாரம் செய்தது. ஜெயாவின் ஜெ.ஜெ. டி.வி. வெளிப்படையாகவே அ.தி.மு.க. பிரச்சாரத்தை நடத்தியது. ஜெயாவின் கூட்டாளியான சாராயத் தொழிலதிபர் விஜய் மல்லையாவின் "விஜய் டி.வி." அ.தி.மு.க. - காங்கிரசு கூட்டணியை ஆதரித்து "மக்கள் மனசு" நிகழ்ச்சியில் பிரச்சாரம் செய்தது.

ஆந்திராவிலிருந்து ஒளிபரப்பாகும் ஜெமினி டி.வி., ஈநாடு டி.வி. ஆகிய தனியார் தொலைக்காட்சிகளுக்கு தனி செயற்கைக் கோள் வசதியின்மையால் அவற்றில் தேர்தல் பிரச்சாரம் மந்தமாகவே இருந்தது. இருப்பினும் லட்சுமி பார்வதி கட்சியும், சந்திரபாபு நாயுடு கட்சியும் ஒலிப்பேழைகள் மூலம் தேர்தல் பிரச்சாரத்தை சூடேற்றின.

● குமார் சூரியன்



படிப்பகம்

www.padippakam.com

# தடி எடுத்தவன் தண்டல்காரன்

## கட்சிகளின் வேட்பாளர் பட்டியலில் கிரிமினல்கள் முதலிடம் பெற்றனர்.

தேர்தலில் வெற்றியைத் தீர்மானிப்பது கொள்கை லட்சியமல்ல. ஆள்பலம், பண பலம், ஆயுத பலம் - இம்மூன்றும் தான் இன்று தேர்தல் வெற்றியைத் தீர்மானிக்கின்ற சக்திகளாயுள்ளன.

பீகார் சட்ட மன்றத்தில் பான்பராக்கை மென்று கொண்டே லல்லு பிரசாத் யாதவ், ''பாராளுமன்ற, சட்ட மன்ற விவாதங்களை உறுப்பினர்கள் தமது துப்பாக்கியால் முடித்து வைக்கின்ற காலம் வெகு தூரமில்லை'' என அலட்சியமாகக் ஒருமுறை கூறினார்.

ஆரம்ப காலங்களில் ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகள் கள்ள ஓட்டுப் போடவும், மக்களை விரட்டியடித்து வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றவும் ரௌடிகளைப் பயன்படுத்தினர். பின்னர் ரௌடிகளே கட்சிகளில் சேர்ந்து வேட்பாளர்களாகி வென்று, இன்று மந்திரிகளாகவும் வலம் வருகின்றனர்.

கிரிமினல் அரசியல் ரவுடிகளில் முதலிடம் வகிப்பவை பீகாரும் உத்திரப் பிரதேசமும் தான். ஹரியானா, மத்தியப் பிரதேசம் முதல் பிற எல்லா மாநிலங்களுமே இவற்றுக்கு சற்றும் குறைந்ததல்ல என கிரிமினல் மாஃபியாக்களின் கூடாரங்களாக மாறி வருகின்றன.

பீகாரில் 1977-ல் ஒரு சில கிரிமினல்களே எம்.எல்.ஏ.க்களாக வெற்றி பெற்றனர். ஆனால் 1990-ல் கிரிமினல் குற்றவாளிகள் 30 பேர் எம்.எல்.ஏ.க்கள் ஆனார்கள். உத்தரப் பிரதேசமோ இதில் பாய்ச்சல் வேகத்தில் முன்னேறியது. 1984-ல் 35 கிரிமினல் எம்.எல்.ஏ.க்கள் இருந்தனர். 1993 லோ 141 கிரிமினல்கள் எம்.எல்.ஏ.க்களாக வெற்றி பெற்றனர். இந்தத் தேர்தலில் சிலரின் முகவிலாசங்கள்:

• உ.பி.யில், தாகூர் ஜாதியைச் சேர்ந்த உபதேஷ் சிங் மீது கற்பழிப்பு, கொலை, கொள்ளை, கொலை முயற்சி என 32 கிரிமினல் வழக்குகள் உள்ளன. இவரை பாரதீய ஜனதா கட்சி மேற்கு உ.பி.யின் மெயின்புரி தொகுதியில் தனது வேட்பாளராக நிறுத்தியது. அக்கட்சி ஊழியர்களே இதனால் வெறுப்படைந்தனர்.

• மதுரா தொகுதி முன்னாள் எம்.பி. சக்ஷிஜி மகராஜ் பாரதீய ஜனதா கட்சிக்காரர். மதுரா நகரைச் சேர்ந்த இவர் கிரிமினல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதால் மக்களால் நகரை விட்டே விரட்டியடிக்கப்பட்டவர். இவரை பா.ஜ.க. மீண்டும் தனது வேட்பாளராக ஃபருக்காபாத் தொகுதியில் நிறுத்தியது.

• பம்பாய் குண்டு வெடிப்பு குற்றவாளிகளுக்கு பாதுகாப்பு தந்த பா.ஜ.க. எம்.பி. பிரிஜ்பூஷன் சரண்சிங்குக்கு திரும்ப சீட்டு தரவில்லை. அதற்குப் பதிலாக அவரது மனைவியை அதே தொகுதியில் பா.ஜ.க. தன் வேட்பாளராக நிறுத்தியது.

• கடந்த தேர்தலில் பைசாபாத் (அயோத்தி) தொகுதியில் வெற்றி பெற்ற பா.ஜ. கட்சியைச் சேர்ந்த வினய் கத்தியார் என்ற ரவுடி பாபர் மசூதியை இடிக்க கடப்பாறையுடன் முன்னணியில் நின்றவன். கற்பழிக்கும் காமுகன் என்று ஏற்கனவே அம்பலமானவன். இந்த இந்து வெறி காமுகனைத்தான் அதே தொகுதியில் பா.ஜ.க. மீண்டும் வேட்பாளனாக நிறுத்தியுள்ளது.

இப்படியாக உ.பி.யில் அனைத்துக் கட்சியினரும் போட்டி போட்டுக் கொண்டு 91 கிரிமினல் - மாஃபியா குண்டர்களை களத்தில் இறக்கிவிட்டுள்ளனர்.

• பீகாரில் ஆனந்த் மோகன் சிங் என்பவனை பா.ஜ.க. ஆதரித்தது. இவனும் இவனது மனைவியும் சேர்ந்து கோபால்கஞ்ச் மாவட்ட தலித் நீதிபதியான ஜி. கிருஷ்ணையாவைக் கொன்றனர். அந்த வழக்கின் முதல் குற்றவாளி ஆனந்த் மோகன் சிங்.

• மகாராட்டிரத்தில் மதக் கலவரங்களை முன்னின்று நடத்தி, அப்பாவி முஸ்லீம்களை நரவேட்டையாடிய பலருக்கு எம்.பி. தேர்தலில் நிற்க பா.ஜ.க. - சிவசேனா கட்சிகள் அனுமதி அளித்தன.

முன்னாள் கொள்ளைக்காரன் மொஹர் சிங்: உ.பி.யில் பா.ஜ.க. வேட்பாளர்



• மேற்கு வங்கத்தில் சட்டமன்ற தொகுதி வேட்பாளர்களாக காங்கிரஸ் சார்பில் நிறுத்தப்பட்ட அதிர் சௌத்ரி, சங்கர் சிங், இருவர் மீதும் பல கொலை வழக்குகள் உள்ளன.

• பம்பாய் குண்டு வெடிப்புக்குக் காரணமான தீவிரவாத கும்பலுக்கு அடைக்கலம் கொடுத்த முன்னாள் மத்திய மந்திரியான கல்பனாத் ராய், ''தடா''வில் சிறையிடப்பட்ட போதிலும், உ.பி. மாநிலத்தில் கோசித் தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிடுகிறார்.

தமிழகத்திலோ 117 எம்.எல்.ஏ.க்கள், 9 மந்திரிகளுக்கு திரும்ப தேர்தலில் நிற்க சீட்டு தரவில்லை 'ஜெ'. இதன் மூலம் கிரிமினல் - ஊழல் விசயங்களில் சிக்கியவர்களை ஒதுக்கி வைத்தது போல ஒரு பாவனை செய்கிறார் - ஆனால்,

• எப்போதும் போதையில் மிதந்து, சட்டமன்றத்தில் ரௌடித்தனங்களை அரங்கேற்றிய சுயேச்சை எம்.எல்.ஏ. தாமரைக்கனியை கட்சியில் சேர்த்தது மட்டுமின்றி, திரும்ப அ.தி.மு.க., வேட்பாளராகவே களத்தில் இறக்கி விட்டார்.

• ஆகஸ்ட் 22, 1994-இல் குடவாசல் 'கம்யூனிஸ்டு' பிரமுகரான தங்கையாவைக் கொலை செய்த முதல் குற்றவாளி குடவாசல் ராசேந்திரன், இன்று குத்தாலம் தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர். குடவாசல் ராசேந்திரனை எங்கு தேடியும் காணவில்லை என உயர்நீதிமன்ற உத்தரவுக்கு பதிலளித்த போலீசு, இன்று அக் கொலைகாரனுக்கு பாதுகாப்பு தருகிறது.

• திடீர் பணக்கார அரசியல் ரவுடி என ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., போன்ற புரட்சிகர அமைப்புகளால் மக்கள் மத்தியில் அடையாளம் காட்டப்பட்டு தனிமைப் படுத்தப்பட்ட எஸ்.எஸ். பன்னீர்செல்வம்தான் விழுப்புரம் தொகுதி அ.தி.மு.க. வேட்பாளராக நிறுத்தப்பட்டார்.

• பத்திரிக்கை நிருபர்களை கொலை வெறி கொண்டு தாக்கிய ஊழல் திலகம் கண்ணப்பன் திரும்பவும் தேர்தலில் போட்டியிட்டார்.

• வக்கீல் விஜயனைத் தாக்கி புகழ் பெற்ற தாதாவான எஸ்.டி.எஸ். திரும்ப போட்டியிட்டார்.

• பதவிக்கு வந்த சில மாதங்களிலேயே, காங்கிரசுடன் நல்லுறவு இருக்



படிப்பகம்

www.padippakam.com

கும் போதே, அன்றைய மத்திய இணை அமைச்சர் ப. சிதம்பரம் காரில் வந்த போது அ.தி.மு.க. குண்டர்களால் தாக்கப்பட்டார். அக் கொலைவெறித் தாக்குதலை திட்டமிட்டு சிறப்பாக நடத்திய திருச்சி அன்பரசுக்கு இன்று எம்.எல்.ஏ. சீட்டு.

• வேலூரில் எந்த அரசு விழா நடந்தாலும் அதில் காங்கிரசு எம்.எல்.ஏ. ஞானசேகரனைப் பேச விடாமல் கலவரம் செய்த குண்டர் படைத் தளபதி தமிழரசன் இன்று பேர்ணாம்பட்டு தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர்.

• 'ஜெ' மீது பல வழக்குகள் போட்டு அம்பலப்படுத்த முயன்ற சுப்ரமணியசாமிக்கு எதிராக குண்டர் படையை ஏவி கலவரம் செய்தனர். அதற்கு தலைமையேற்ற வட ஆர்காடு மாவட்ட செயலாளர் பாண்டுரங்கன் காட்பாடி தொகுதி வேட்பாளர்.

• இதேபோல சுப்ரமணியசாமி மீது ஆபாச வசவுகளைப் பொழிந்து, அழுகிய தக்காளி - முட்டைகளை வீசி, ஆபாச நடனமாடிய மாவட்ட மகளிர் அணி செயலாளர் சூரியகலா அணைக்கட்டு தொகுதி அ.இ.அ.தி.மு.க. வேட்பாளராக நிறுத்தப்பட்டார்.

• தலித் மக்கள் மீது கல்லுப்பட்டியில் கற்களை வீசித் தாக்கியதில், வயதான பிலிப் என்பவர் கொலை செய்யப்பட்டார். இத்தாக்குதலுக்கு திட்டமிட்டுத் தந்த சேடப்பட்டி முத்தையா திரும்ப தேர்தலில் நின்றார்.

விதிவிலக்கின்றி அனைத்து ஓட்டுக் கட்சிகளிலும் இதே போன்று கிரிமினல், மாஃபியா கும்பல்களிலிருந்து வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டனர்.

● குமார் சூரியன்

**எஸ்.டி.சோமசுந்தரம், தாமரைக்கனி, குடவாசல் இராசேந்திரன், திருச்சி அன்பரசு, பாண்டுரங்கன், பிரிஜ்பூஷன் சிங், வினய் கத்தியார், ஆனந்த் மோகன் சிங், அதிர் சௌத்ரி போன்ற கிரிமினல்கள்தான் ஓட்டுக் கட்சிகளின் வேட்பாளர்கள்.**

# 'ஏழைகளின் தலைவர்கள்' ஹெலிகாப்டரில் பறந்தனர்!

இவை ஒருபுறமிருக்க, முக்கிய தலைவர்கள் ஹெலிகாப்டர்களில் பறந்து வந்து திக்கெட்டும் பிரச்சாரம் செய்தார்கள்.

மகாராஷ்டிராவின் துணை முதல்வரான கோபிநாத் முண்டே, மே.வங்க போலிக் கம்யூனிஸ்டு முதல்வர் ஜோதிபாசு, பீகார் முதல்வர் லல்லு பிரசாத் யாதவ், உ.பி.முன்னாள் முதல்வர் மாயாவதி, ஒரிசா முன்னாள் முதல்வர் பிஜு பட்நாயக், பிரதமர் ராவ், பாசிச ஜெயா, வாஜ்பாய் முதலான பலரும் ஹெலிகாப்டர் மூலம் பிரச்சாரத்தில் இறங்கினர்.

தனியார் நிறுவனத்தைச் சேர்ந்த ஹெலிகாப்டரின் ஒரு மணி நேர வாடகை மட்டும் ரூ. 55.000. பெட்ரோல் செலவு, இரவு தங்கும் செலவு, 15% வாடகை வரி முதலானவை தனி. ''எங்கள் கட்சி ஹெலிகாப்டர் பிரச்சாரத்துக்கென ரூ. 50 இலட்சம் ஒதுக்கியுள்ளது'' என்கிறார் பாரதீய ஜனதாவின் தேர்தல் பிரச்சார அமைப்பாளரான குல்கர்னி.

ஆனால் தேர்தல் கமிஷனோ, ஒரு வேட்பாளர் ரூ. 4 லட்சத்துக்கு மேல் பிரச்சாரத்துக்கு செலவிடக் கூடாது என்கிறது. ''வேட்பாளர் செலவு செய்தால் தானே பிரச்சினை. வேட்பாளரின் நண்பர் வாகன உதவி செய்வது விதிமுறைகளை மீறுவதாகாது; காரிலிருந்து ஹெலிகாப்டர் வரை எந்த உதவியையும் பயன்படுத்திக் கொள்வதில் தவறில்லை'' என்று தேர்தல் விதிமுறைகளை கேலிக் கூத்தாக்கினார் குல்கர்னி.

இவையில்லாமல், சாராயம், குண்டர்களுக்கு ஆகும் செலவு, சுவரொட்டி, பிரசுரம், வாகன பிரச்சாரம், வாக்காளர்களுக்கு கொடுக்கும் நன்கொடைகள், அன்பளிப்புகள் என ஒவ்வொன்றையும் கணக்கிட்டால், நாடு தழுவிய அளவில் மொத்த செலவு பல பத்தாயிரம் கோடிகளையும் தாண்டி விடும். தேர்தல் கமிஷன் உத்திரவால் ஓட்டுக் கட்சிகள் சற்றே அடக்கி வாசிப்பதாக நாடகமாடினாலும், இன்றைய நிலையில் ஓட்டுக் கட்சிகளின் தேர்தல் செலவுகள் 25,000 கோடியை எட்டி விடும் என்று முதலாளித்துவ பத்திரிகைகளே பிரமிப்புடன் எழுதுகின்றன.

இவ்வளவு பணத்தையும் ஓட்டுக் கட்சிகள் எங்கிருந்து பெற்றன? மக்களிடம் உண்டியல் குலுக்கியா? அல்லது தங்களது வீடு - நிலங்களை விற்றா? நிச்சயமாக இல்லை. ''பெரு முதலாளிகள் - நிலப் பிரபுக்களிடம் பணம் வாங்காத அரசியல் வாதியோ, கட்சியோ இருந்தால் எனக்கு காட்டுங்கள்'' என்கிறார் பீகார் முதல்வர் லல்லு. ''தேர்தல் நன்கொடை பெறும் போது அது கருப்பா, வெள்ளையா என்று யாரும் பார்ப்பதில்லை'' என்று வாக்குமூலம் தருகிறார் பாரதீய ஜனதா தலைவர் வாஜ்பாய்.



போலிக் கம்யூனிஸ்டு முதல்வர் ஜோதிபாசு: வறுமையை ஒழிக்க ஹெலிகாப்டர் பயணம்.

தரகுப் பெரு முதலாளிகள், நிலப் பிரபுக்கள், வர்த்தக சூதாடிகள், அரசு ஒப்பந்தக்காரர்கள், தொழிலதிபர்கள், வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் என பல முனைகளிலிருந்தும் கோடி கோடியாய் கருப்புப் பணம் இத் தேர்தல் திருவிழாவில் வாரியிறைக்கப்பட்டது. இவையில்லாமல், பல்வேறு ஏகாதிபத்திய நாடுகளும் இந்தியத் தேர்தலில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பணத்தைக் கொட்டின. பல பத்தாயிரம் கோடிகளை வாரியிறைத்து விட்டு வேடிக்கை பார்ப்பதற்கு அவர்கள் பைத்தியக்காரர்கள் அல்ல. போட்ட பணத்தை நூறு சதவீத லாபத்தோடு அடுத்த சில ஆண்டுகளில் மக்களின் ரத்தத்திலிருந்து உறிஞ்சி எடுத்து விடுவார்கள்.

○●○



படிப்பகம்

www.padippakam.com

# சாதி - மதவெறியே முக்கிய துருப்புச் சீட்டு

## சாதி - மத வெறிக் கலவரங்களைத் தூண்டி வெற்றியை அறுவடை செய்கின்றன ஓட்டுக் கட்சிகள்

தேர்தலில் வெற்றி பெற பணபலம், ஆயத பலம் மட்டுமல்ல, ஆள் பலமும் தேவைப்படுகிறது. பணத்தின் மூலம் எவ்வளவு பேரை விலைக்கு வாங்க முடியும்? ஆள் பலம் திரட்டுவதற்கு என்ன செய்வது?

சீரழிந்த முதலாளித்துவ நாடுகளில் கூட மக்கள் நலத் திட்டங்கள், பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வழிமுறைகள் எனக் கூறித்தான் மக்கள் ஆதரவைத் திரட்டுகின்றனர்.

ஆனால் நமது நாட்டிலோ தொன்று தொட்டு சாதி, மத, இன வெறிகளைத் தூண்டி விட்டுத்தான் ஆதாயம் தேட முயல்கின்றனர். ஏதோ பா.ஜ. கட்சி இன்று பார்ப்பன மதவெறியைத் தூண்டி முஸ்லீம்களை நரவேட்டையாடுகிறது என்றே பலரும் கருதுகின்றனர். அன்றைக்கே காங்கிரசுக் கட்சியில் இந்து மத வெறியர்கள் நிறைந்திருந்ததால்தான் முஸ்லீம்களில் பலரும் தமக்கு ஒரு கட்சி வேண்டுமென முஸ்லீம் லீகைத் தொடங்கினர்.

திலகர் தொடங்கிய பிள்ளையார் சதுர்த்தி ஊர்வலமும், சிவாஜி வழிபாடும் மற்றும் மிதவாத - தீவிரவாத காங்கிரசு தலைவர்களின் இந்து மத அடிப்படையிலான நடவடிக்கைகளும்தான் முஸ்லீம் லீக் தோன்ற காரணம். பின் பிரிட்டிஷாரின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு அவர்கள் கருவியானார்கள்.அதேபோலஆர்.எஸ்.எஸ்.-ம் பிரிட்டிஷாரால் உருவாக்கப் பட்டது.

அன்றிலிருந்து பார்ப்பன மத வெறியர்களின் நரவேட்டை அரசியல் இன்று வரை தொடர்கிறது.

உண்மையான மதச்சார் பற்ற கட்சி என மார்தட்டும் பா.ஜ.க.வில் இன்று ஒரு முஸ்லீம் கூட எம்.பி.க்கு நிறுத்தப்படவில்லை. 22 ஆண்டுகள் அக் கட்சியிலிருந்த ஆரிஃப் பெய்க் இன்று சீட்டு கொடுக்காததால் கட்சியை விட்டு வெளியேறி, முஸ்லீம்களுக்கு எதிரானது பா.ஜ.க. எனப் பேசுகிறார்.

1989, 91 தேர்தல்களில் பிணங்களின் மீதேறி பிரதமர் பதவி என்றே பா.ஜ.க. முஸ்லீம்களை நரவேட்டையாடியது. மசூதி இடிப்புக்குப் பின் ஏற்பட்ட தேர்தல் தோல்வியிலிருந்துதான் முஸ்லீம் எதிர்ப்பு என்பதை சற்று அடக்கி வாசித்தது. மராட்டிய மாநில முதல்வர் பதவி பறிப்பு வழக்கின் உச்ச நீதிமன்ற தீர்ப்புக்குப் பின் மீண்டும் இந்து மதவெறி சூலத்தை பா.ஜ.க. கையிலெடுத்துள்ளது.

அந்த அடிப்படையிலேயே எல்லா மாநிலங்களிலும் வேட்பாளர்களை நிறுத்தியது மட்டுமல்ல, பிரச்சாரத்தையும் தொடங்கியது.

மற்ற கட்சிகள் சாதி அடிப்படையில் வேட்பாளர்களை நிறுத்தினர்.

தமிழகத்தில் இது வெளிப்படையானது. எந்தத் தொகுதியில் எந்த சாதியினர் அதிகம் எனப் பார்த்து, அந்த சாதியைச் சேர்ந்தவர்களையே வேட்பாளராக அனைத்துக் கட்சிகளும் நிறுத்தினர். முன்னாள் மத்திய இணை அமைச்சர் சிதம்பரத்தின் நிலைமை கூட இதுதான்.

எல்லா பத்திரிக்கைகளும் வெளிப்படையாக இவற்றை எழுதி வருகின்றன.


சமீபத்திய தென் மாவட்ட சாதிக் கலவரங்களைக் கண்டிக்க எந்த ஒரு கட்சிக்கும் யோக்கியதை இல்லாமற் போய் விட்டது. தேர்தலை மனதிற் கொண்டே சாதிக் கலவரப் பிரச்சினையை பொத்தாம் பொதுவாக அணுகின.

கர்நாடக மாநில நிலைமையும் இதுதான். அங்கு லிங்காயத்துக்கள், ஒக்கலிகர்கள் என இரு சாதியனர்தான் பெரும்பான்மையாக இருந்து தேர்தலைத் தீர்மானிக்கின்றனர். ஜனதா தளம் வென்றதும் இந்த இரு சாதியினரின் ஆதரவுடன் தான். முதல்வர் யார் என்ற போட்டி வந்த போது ஒக்கலிக சாதி தேவகவுடா முதல்வர், லிங்காயத்து சாதி பி.எச்.படேல் துணை முதல்வர் என பஞ்சாயத்து முடித்தனர். அதன் பின் அரசு சலுகை, சன்மானங்களிலான பங்கீட்டில் ஒக்கலிக முதல்வர் கவுடா, லிங்காயத்துக்களை புறக்கணித்து விட்டார் என இன்று லிங்காயத்து சாதியினரும், துணை முதல்வர் படேலுமே குழிபறிப்பு வேலையில் இறங்கினர். இதை அறுவடை செய்ய பா.ஜ.க. 12 லிங்காயத்து சாதியினரை வேட்பாளர்களாக நிறுத்தியது.

பெருவாரியானவர்கள் படித்தவர்கள், பண்பாளர்கள் என்று கூறப்படும் கேரள மாநிலத்தில்தான் சாதிக்கொரு கட்சி என பல கட்சிகள் உள்ளன. இன்றைய நிலையில் பெரும்பான்மை சாதியினரான நாயர், ஈழவர் சாதியினரின் மடங்கள் பிரச்சினையை காங்கிரசு தவறாகக் கையாண்டது என்பதற்காகவே இச் சாதி வாக்காளர்கள் காங்கிரசு கட்சிக்கு எதிராக இருந்தனர்.

பீகாரில் ஒவ்வொரு மேல் சாதியினரும் தமக்கென தனிப் படைகள் வைத்து

திருவில்லிப்புத்தூரில் நாடார்களுக்கும் தலித்துகளுக்கும் இடையிலான தேர்தல் வன்முறையில் சாம்பலான கடைகள்





படிப்பகம்

www.padippakam.com

ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். அதன் வழியில் பிற்பட்ட சாதியினரில் நில உடமையாளர்களும் தமக்கென கூலிப் படை வைத்து ஆதிக்கம் செலுத்த முயல்கின்றனர். இன்றைய லல்லு பிரசாத் யாதவ் பிற்படுத்தப்பட்ட சாதிகள், தாழ்த்தப்பட்ட சாதிகள், முஸ்லீம்களின் பாதுகாவலன் என்ற போர்வையில்தான் தேர்தலில் வெற்றி பெற்று வருகிறார்.

உ.பி.யிலும் இதே நிலைமை. இதன் தலைநகரான கான்பூர் இன்று கிரிமினல் தலைநகராக மாறி வருகிறது. கடந்த ஜனவரியில் முதலில் பா.ஜ.க. இங்கு தலித் ஒற்றுமை பேரணி என நடத்தி, தலித்துகள் ஓட்டை பெற எத்தனித்தது. அதன் பின் முலாயம் சிங் யாதவின் சமாஜ் வாதி கட்சியும், கன்சிராமின் பகுஜன் சமாஜ் கட்சியும் சாதிய ஊர்வலங்களை நடத்தி சாதி ரீதியில் மக்களைப் பிரித்துள்ளனர்.

இம் மாநிலத்தில் பார்ப்பனர், தாகுர் சாதிக்கிடையிலும், குஜ்ஜார், ஜாட் சாதியினரிடையிலும் என இப்படியே பல சாதியினர் ஒவ்வொரு சாதிக்கெதிராக உள்ளனர். எல்லா ஓட்டுப் பொறுக்கிகளும் சாதி அடிப்படையிலேயே இயங்குகின்றனர்.

பிற்படுத்தப் பட்டவர்கள் பெருவாரியாக சமாஜ்வாதி கட்சியையும் தாழ்த்தப்பட்டவர்கள் பெருவாரியாக பகுஜன் சமாஜ் கட்சியையும், முஸ்லீம்கள் இந்த இரு கட்சியினரையும் ஆதரிக்க, எல்லா மேல் சாதி ஓட்டுக்களைக் கைப்பற்றி வெற்றி பெற பா.ஜ.க. மேல் சாதி இந்துக்களையே வேட்பாளராக நிறுத்தியது.

இன்னும் எல்லா மாநிலங்களிலும் இதே போன்று சாதி அடிப்படையிலும் மத, இன அடிப்படையிலும்தான் மக்களைப் பிளவுபடுத்தி மோத விடுகின்றனர் ஓட்டுப் பொறுக்கி அரசியல்வாதிகள்.

சாதி எதிர்ப்பு இயக்கம் நடத்திய தமிழக மண்ணில் இன்று சாதி அடிப்படையில் மோதல்கள் வெடிக்கின்றன. சாதி வாரியாகத்தான் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டனர். இங்கேயே இந்நிலை எனில், மற்ற மாநிலங்களில் இன்னும் சாதி ஆதிக்கம் நிலவி வரும் நிலையில் எப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கும் என சற்று சிந்தித்தாலே விபரீத நிலைமையை ஓரளவு உணரலாம்.

# வாக்குச் சாவடிகளைக் கைப்பற்ற பயில்வான்கள்! துப்பாக்கிகள்!

தலைநகர் டில்லி மற்றும் ஹரியானா மாநில ரோடாக், சோன்பட் மாவட்டங்களில் பல இடங்களில் மல்யுத்த வீரர்களை உருவாக்கும் பள்ளிகள் உள்ளன. இதில் தேர்ச்சி பெற்ற விளையாட்டு வீரர்கள் விளையாட்டுக் களத்திலேயே உள்ளனர். இதில் தேர்ச்சி பெறாதவர்கள் மல்யுத்தப் பள்ளியில் தொடர்ந்து நீடிக்க முடியாமல் வெளியேற்றப்படுகின்றனர்.

இப்படி வெளியேற்றப்படுபவர்களைத் தான் ஓட்டுப் பொறுக்கி அரசியல் வாதிகள் தமது பாதுகாவலர்கள் என வாடகைக்கு அமர்த்திக் கொள்கின்றனர்.

ராஜேஷ் குமார். ஒரு வருடம் மல்யுத்தப் பயிற்சி பெற்றவர். "வேலை எளிது. வேட்பாளர் பேசும் போது அவரைச் சுற்றி நின்று பாதுகாப்புத் தர வேண்டும். யாராவது குறுக்கிட்டு குழப்பம் செய்ய முயன்றால் அடித்து உதைப்பது. சமயத்தில் வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றும் வேலையும் வரும். அதற்கு தனியே விலையுண்டு, ஏனெனில் அது கடினமானது" என மிகச் சாதாரணமாகக் கூறுகிறார்.

ஒரு வாக்குச் சாவடியைக் கைப்பற்ற ரூ. 10,000-லிருந்து ஒரு லட்சம் வரை விலை பேசப்படுகிறது.

வாக்குச் சாவடிகளைக் கைப்பற்ற பயில்வான்களை மட்டும் நம்பியிருக்கவில்லை. மற்றொருபுறம் ஆயுதங்களையும் குவித்துக் கொண்டுள்ளார்கள்.

இதுவரை ஹரியானாவிலுள்ள ரோடக் மாவட்டத்தில் மட்டும் போலீசு நடத்திய தேடுதல் வேட்டையில் அனுமதி பெறாத 1100 துப்பாக்கிகள், 50 ரிவால்வர் / பிஸ்டல்கள், சில ஸ்டென் துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. ஹரியானாவில் 40,000 துப்பாக்கிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதில் ரோடக்கில் மட்டும் 2000 துப்பாக்கிகள் உள்ளன.

மத்தியப் பிரதேச மாநில மாள்வா பகுதி போதைப் பொருள் விளையுமிடமாயிருந்தது. தற்போது இங்கு பெருமளவில் ஆயுதங்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. சமீபத்தில் போலீசு தேடுதல் வேட்டையில் 32 ஏ.கே. 47 துப்பாக்கிகளும், இன்னும் பெருமளவிலான நவீன ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. ஆனால் அவற்றை வெளியே தெரிய விடாமல் மாநில அரசு பார்த்துக் கொண்டது. இந்த ஆயுதங்களுடன் சம்பந்தப்பட்ட ஆர்.ஆர்.கான் என்பவனின் பண்ணை வீட்டிற்கு முதல்வர் திக் விஜய்சிங், மந்திரிகள் காந்திலால் புரியா, இக்பால் அகமது ரிஜ்வி ஆகிய மூவரும் அடிக்கடி சென்று வருபவர்கள் என்பதே காரணம். பீகாரின் பல இடங்களில் ரகசிய துப்பாக்கித் தொழிற்சாலைகள் உள்ளன. சமீபத்தில் இப்படிப் பட்ட 16 இடங்களில் சோதனை நடத்தியதில் ஆயிரக்கணக்கில் ஆயுதங்களும், ஏராளமாக வெடி மருந்துகளும் சிக்கியுள்ளன. தவிர, ஏற்கனவே ஆயுதங்கள் மேற்கு வங்கம், உ.பி., பீகார் என பல இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

தேர்தலில் சேசனின் கெடுபிடிகள் பற்றி பத்திரிகைகள் பக்கம் பக்கமாக எழுதிக் குவித்தன. குவிக்கப்பட்ட ராணுவம் - போலீசு பற்றி பீற்றிக் கொண்டு, தேர்தல் அமைதியாக நடக்கும் என்றன.

இத்தனை ஏற்பாடுகளையும் கேலிக் கூத்தாக்கி, நாடு முழுவதும் வாக்குச் சாவடிகள் சூறையாடப்பட்டன; வாக்குப் பெட்டிகள் கைப்பற்றப்பட்டன; ஓட்டு மொத்தமாக தீ வைத்துக் கொளுத்தினர். சேசனின் முகத்தில் காரித் துப்பியது போல ஓட்டுப் பொறுக்கிகள் வன்முறைகளை வழக்கம் போல் அரங்கேற்றினர்.

கள்ள ஓட்டுக்களோ கணக்கின்றி போடப்பட்டுள்ளன. சாதி அரசியலிலும், கிரிமினல் - கவர்ச்சி அரசியலிலும் இந்தியாவிற்கே வழிகாட்டிய தமிழகத்தில் இன்று பார்ப்பன - பாசிச 'ஜெ' ஆட்சி தேர்தல் தில்லுமுல்லில் புதிய பாதையைத் துவக்கி வைத்துள்ளது.

எதிர்க்கட்சியினருக்கு ஆதரவான வாக்காளர்கள் அதிகம் உள்ள பகுதிகளில் ஆயிரக்கணக்கில் அவர்களின் பெயரை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கி விடுவதுதான் அப்புதிய பாதை.

ஓட்டுரிமை நமது உயிர் போன்றது என ஏற்றிப் போற்றும் கனதனவான்களே, அப்பாவி உழைக்கும் மக்களே, நீங்கள் எதிர்க் கட்சிக்கு ஆதரவு எனில் உங்கள் ஓட்டு 'ஜெ'யின் உதிர்ந்த ரோமம் தவிர வேறென்ன? சேசனுக்கு அனுப்பிய இந்த மோசடி பற்றிய செய்தி அவனின் கழிப்பறைக் காகிதமானதுதான் மிச்சம்.

Published and Owned by R. SHANMUGARAJ, 25 Arunachalam St., Jothiramalinga Nagar, Madras - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 63, Arcot Rd., Madras - 600 024. Editor: R. SHANMUGA RAJ

படிப்பகம்

www.padippakam.com



# இதுதான் இன்றைய இந்தியா

பதினோறாவது தேர்தல் திருவிழா களைகட்டி முடிந்து விட்டது. இதோ 'தேசிய'க் கட்சிகளான காங்கிரசு, பாரதீய ஜனதா, 'மார்க்சிஸ்டு' மூன்றும் தங்களின் தேர்தல் 'கொள்கை' அறிக்கையை வெளியிடுவதுதான் இந்தப் படம். ''2002-ம் ஆண்டிற்குள் வேலையில்லாதவர்களுக்கு வேலை; வீடு இல்லாதவர்களுக்கு வீடு'' எனச் சரடு திரித்துள்ளது காங்கிரசு. பாரதீய ஜனதாவோ, மக்களின் பிரச்சனைகளை 'சூ... மந்திரக்காளி' என மாயம் செய்து விரட்டிட, இராமருக்கு கோயில் என்ற முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டு விட்டது. புரட்சி பேசும் மார்க்சிஸ்டுகளோ, ''நாடாளுமன்ற சனநாயகத்தைக் கட்டிக் காப்போம்'' எனக் கோமாளித் தனமாக வாக்குறுதி தந்து, அதற்குப் பக்கம் பக்கமாக விளக்கவுரை எழுதியுள்ளனர்.



இவையோடு ஜனதா தளம், வலது கம்யூனிஸ்டு, தி.மு.க., அ.தி.மு.க., ம.தி.மு.க., - என அனைத்துக் கட்சிகளுமே ஒன்றையொன்று சாடிக் கொண்டு, ''ஊழலற்ற நல்லாட்சியைத் தங்களால் மட்டுமே தர முடியும்'' என்ற அண்டப் புளுகை அவிழ்த்து விடத் தவறவில்லை.

ஓட்டுக் கட்சிகள் தம்மை ஆண்டு சாதித்துக் கிழித்து விட்டதற்கு இந்தப் படமே சாட்சி. ஒரிஸ்ஸா மாநிலத்திலுள்ள ராய்கடா பகுதியைச் சேர்ந்த பழங்குடி சமூகத்தினர் இவர்கள். கிட்டத்தட்ட 66 கிராமங்களில் 3,000-க்கும் அதிகமான இப்பழங்குடியினர் விவசாயத்தை மட்டுமே நம்பி வாழ்ந்து வருகின்றனர். அறுவடை முடிந்த ஆறு மாதங்களுக்கு உப்பு போட்ட ராகி கஞ்சிதான் இவர்களின் உணவு. இந்த 'விருந்து' கூட இரு வேளைக்கு மட்டும்தான்; அடுத்த ஆறு மாதத்திற்கு காட்டுக் கிழங்குகளையும், கொட்டைகளையும், மரப்பட்டைகளையும் உண்டுதான் பசியாற வேண்டும்; இறந்தவர்களைப் புதைக்கும் முன் கழற்றி எறியப்படும் துணிமணிகள் தான் இவர்களது ஆடை. பட்டினியாலும், மலேரியா, வயிற்றுப்போக்கு போன்ற தொற்று நோய்களாலும் இரண்டு வயதுக்கு முன்பே பெரும்பாலான குழந்தைகள் இறந்து விடுகின்றன. தப்பிப் பிழைத்திருந்தாலோ, பட்ட கடனுக்காக எங்காவது கண்காணாத இடத்தில் பணக்கார விவசாயிகளிடமும் கந்து வட்டிக்காரர்களின் வீட்டிலும் அடிமையாய் வாழ்ந்து மாள வேண்டியதுதான்.



''உழைத்தவர் மெலிந்தனர்; வலுத்தவர் கொழுத்தனர்'' என்பது தானே 'சுதந்திர' இந்தியாவின் ஐம்பதாண்டு கால வரலாறு. இந்த ஓட்டாண்டித் தனத்தைப் பூசி மெழுகி விட்டு, நாற்காலி சுகத்திற்காக 'கொள்கை' வாய்ப்பந்தல் போட்டுத் திரியும் இந்த எத்தர்களின் கூட்டத்தை நாம் துரத்தியடிப்பது எப்போது?

படிப்பகம்